ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி௵ மாசி௴ கதிர் 8

மார்ச் 1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை — 1

உலகத்திலே என்ன நடக்கிறது?— (கார்ட்டூன்கள்) 9

உலகத்துப் பெரிய வாசகசாலை. — வேணிபிரசாத் 12

ஆங்கிலத்தில் சரித்திரம் எழுதுவானேன்? — மு. ஞானசம்பந்தன் 17

எந்தெந்த நாடுகளில் அரசர்கள் இருக்கிறார்கள்? 19

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் — "ஆசிரமவாசி" 20

ஸர்வ தேச சங்கம் — வ. அ. தியாகராஜன் M. A. 27

மனிதனின் முன்னேற்றத்திற்கு முக்கிய கருவியாக இருப்பது எது? — மு. துரைசாமி 32

அமெரிக்கா எவ்வாறு சுதந்திரம் பெற்றது? — து. கோ., கிருஷ்ணன் B. sc.(Hons) 36

அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் என்றால் என்ன? 45

லாலா லஜபதிராய் — "ஒரு காங்கிரஸ் வாதி" 46

அக்கா (தொடர் கதை) — எம். வி. வேங்கடராமன் 49

வேதாந்த ரகசியங்கள் — ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள் 56

தமயனின் கடிதம்-11 — "ஸ்ரீதேவி தாஸன்" 62
சுதந்திரத்தின் தேவைகள் யாவை—ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்
— 6 வெ. சா. 64
ரஜபுத்திர ரமணி — "தனிராம் பிரேம்ஜீ" 75
லெனின் எப்படி வேலை
செய்வது வழக்கம் ? — "கிருபாகரி" 81
கண்டதும் காதல் — "வருணன்" 83
இந்திய அரசாங்கத்தின் ரயில்வே வரவு செலவு திட்டம் 86
துலாக்கோல் — புத்தக விமரிசனம் 87
53 வது இந்திய தேசீய காங்கிரஸ் தலைவர் தேர்தல் விவரம் 88
குடியேற்ற நாட்டந்தஸ்தும்
வெஸ்ட் மின்ஸ்டர் சட்டமும்— எஸ். கே. நாராயண ஐயர் B. A. B. L. 89
அன்றுட உலகம் — 96
இந்திய சமஷ்டி அரசியல் கே. வி. ராமசுப்பிரமண்யம் B. A. B. L. 101
டால்ஸ்டாயும் ஆரம்பக் கல்வியும் ஜி. கே. சு. சாஸ்திரி B. A. B. T. 107

அநுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் யெழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் யெழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

Lt col. கிரஹாம் சேடன் ஹட்சிசன் D. S. O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், 19-12-38-ல் தெரிவிப்பதாவது:

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அநுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்டால்
பிரதி இங்கிலீஷ் மாதம்
முதல் வாரம் வெளியிடப் பெறும்.

" ஜோதி "

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —
விளம்பரங்கள்
முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.
நெ. 47, 31-வது வீதி,
இரங்கூன்.

ஜோதி

கதிர் 3 மார்ச்—1940 சுடர் 8

தலைமை தேவை

நமது அரசியலறிவு நாளுக்கு நாள் விருத்தியாகிக் கொண்டு வருகிறதோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் நமது இருதயம் வர வர சூனியமாகிக் கொண்டு வருகிறது. அன்றாடப் பத்திரிகைகளைப் படித்து இந்த அநுபவத்தைத்தான் நாம் அடைந்து வருகிறோம். ஐரோப்பாவில் தற்போழ்து ஒருவரை யொருவர் குண்டுகளால் அடித்துக் கொள்கிறார்கள். ஒரு நாட்டு அரசியல் வாதிகள் மற்ற நாட்டு அரசியல் வாதிகளை, பார்லிமெண்டுகளிலும், ரேடியோக்கள் மூலமாகவும் மனங்கொண்ட மட்டும் திட்டி விட்டுத் திருப்தியடைகிறார்கள். நமது நாட்டில் நாம் குண்டுகளைப் போட்டு ஒருவரை யொருவர் தாக்கிக் கொள்ள வில்லை. ஏனென்றால் அவை நம் சுவாதீனத்திலில்லை. ஆனால் வார்த்தைகளைத் தாராளமாகப் பிரயோகிக்கிறோம். எழுத்தாலும் பேச்சாலும், எதிரியை வீழ்த்திவிட நமது கற்பனா சக்தியனைத்தையும் உபயோகிக்கிறோம். தினசரிப் பத்திரிகைகளில் மனதுக்கு நிம்மதியைத்தரக் கூடிய செய்திகளைப் பார்ப்பது அபூர்வமாகி விட்டது. அவைகளுக்குப் பதிலாகத் தலைவர்கள் விடுக்கும் அறிக்கைகள், நமது பார்வையின் ஒவ்வோர் அங்குலத்திலும் வந்து முட்டுகின்றன. மேடைகளின் மீது ஒருவரை யொருவர் திட்டிக் கொள்வதும், தன் கட்சிக்கு ஆள் பலம் சேர்க்கக் கீழான முறைகளைக் கையாள்வதும் அரசியல் துறையின் சம்பிரதாய கட்டங்களாகவே கொள்ளப் படுகின்றன. இவைகளினால் ஏற்பட்டு வருகிற விளைவுகள் இரண்டு. ஒன்று, ஏகாதிபத்தியத்தின் ஆயுள் நீடித்துக் கொண்டு போகிறது. மற்றொன்று ஜனங்களின் கவனம் பலவகையிலும் சிதற அடிக்கப்படுகிறது. ஒரு சிலருடைய ஆத்ம திருப்திக்காக இந்த மாதிரி நாட்டை அலக்கழிக்கலாமா வென்றுதான் நாம் கேட்கிறோம். எந்தக் கட்சியையும் அல்லது எந்தத் தலைவரையும் நாம் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை. பொதுவாகவே, நமது நாட்டில், அரசியல், இன்னும் பண்பட்டு வளர ஆரம்பிக்க வில்லை யென்று மட்டும் கூற விரும்புகிறோம்.

உதாரணமாக, தேசம் விரைவில் சுதந்திரம் பெறவேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிற தீவிர வாதிகளை எடுத்துக் கொள்வோம். இவர்கள் தங்களைப் பொதுவாக இடது சாரிகளென்றும் சோஷலிஸ்டுகளென்றும் பல படச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இவர்களுக்குள்ளே எத்தனை கட்சிகள்? எம். என். ராய் கட்சி, போஸ் கட்சி, கிஸான் கட்சி, ஜயப்பிரகாச நாராயண் கட்சி, இப்படி பல கட்சிகள். சரி, கட்சிகள் தான் இருக்கட்டும். இத்தனை கட்சிகளின் அரசியல் திட்டந்தானென்ன? என்ன விதமான முறைகளைக் கையாள வேண்டுமென்று இவர்கள் சொல்கிறார்கள்? இது வரையில் மேற் கூறப்பட்ட எந்தக் கட்சித் தலைவர்களும், இவைகளைப் பற்றி நிர்ணயித்துக் கூறவில்லை. ஓரளவுக்கு, ஸ்ரீ எம். என். ராய், காங்கிரஸ் தலைவர் தேர்தல் சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில், தமது லட்சியம் இன்னதென்று குறிப்பிட்டிருக்கிறார் என்று சொல்லலாம். அதாவது, இந்தியா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தொடர்பை அறுத்துக் கொண்டால் பூரண சுயராஜ்யம் பெற்றதாகுமென்றும், அப்படிப் பட்ட சுயராஜ்யம் பெறுவது காந்தீயத்தின் தலைமையில் முடியாதென்றும் இவர் கூறுகிறார். இஃது ஒருவாறு நமக்கு விளங்குகிறது. ஆனால் மற்றவர்களுடைய நிலைமைதான் இன்னதென்று நமக்குப் புலப்படவில்லை. தற்போதைய காங்கிரஸ் சேனாதிபத்தியத்தையும் காந்தீயத்தையும் எதிர்த்துப் பேசுகிற யாருக்கும் அல்லது எந்தக் கட்சிக்கும், காங்கிரஸினின்று பிரிந்து ஒரு தனி ஸ்தாபனம் அமைக்கும் தைரியமில்லை. ஆற்றல் இருக்கலாமோ என்னவோ? அது மட்டுமல்ல; தற்போதைய காங்கிரஸ் சேனாதிபத்தியத்தை அப்புறப்படுத்திவிடக் கூடிய செல்வாக்கும் இவர்களுக்கு நாட்டில் இல்லை. அந்தச் செல்வாக்கைச் சிருஷ்டித்துக் கொள்ள இவர்கள் கட்டுப்பாடாக வேலை செய்யவுமில்லை. பொதுவாக, இவர்கள் மார்க்ஸ், ஆபேதவாதம் முதலிய புனிதமான சப்தங்களை உச்சரித்துக் கொண்டு, காந்தீயமென்னும் திருக்கோயிலின் இருட்டறைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் வௌவால்களை ஓட்டிவிடப் பார்க்கிறார்கள்! அந்த இருட்டறைகளில் வெளிச்சத்தைப் புகுத்தவா? இல்லவே இல்லை. தாங்கள் அந்த ஸ்தானத்தைப் பிடித்துக் கொள்வதற்குத்தான். ஆக, யாருக்குமே காந்தீயக் கோயிலின் பிராகாரத்தை விட்டு வெளியே வர முடியவில்லை. அப்படியிருக்க, காங்கிரஸ் சேனாதிபத்தியத்தையும், காந்தீயத்தையும் இவர்கள் குறை கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமென்ன இருக்கிறது?

திரிபுரி காங்கிரஸின் போதே, தீவிரவாதிகள், தங்களை ஒரு கட்டுக் கோப்பான ஸ்தாபனமாக அமைத்துக் கொள்ளவில்லையென்பது நன்கு புலனாகி விட்டது. அது முதற்கொண்டே இவர்கள் எதிரிகளிடம் குற்றங் காண்பதை விடுத்துத் தங்களை ஒன்றுபடுத்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் காங்கிரஸ் தலைவர்களைப் பழித்துக் கொண்டிருப்பதும், அர்த்தமில்லாத எச்சரிக்கைகளைச் செய்து கொண்டிருப்பதும், அரசியல் சம்பிர

தாயமான சில சொற்களைப் பிரயோகித்து அரை குறை ஆங்கில அறிவு படைத்த சிலரைத் தயங்கச் செய்வதும், தேசத்தை எங்கே கொண்டு போய் விடுமென்பது நமக்குத்தெரியவில்லை. உதாரணமாக, ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் சமீப காலந் தொட்டுச் செய்து வரும் பிரசார முறைகளை நம்மால் சிறிது கூடப்பாராட்ட முடியவில்லை. சிறப்பாக, ராம்காரில் தீவிர வாதிகளின் தனி காங்கிரஸ் ஒன்று கூட்ட இவர் முயற்சி செய்து கொண்டிருப்பதை அறிந்து நாம் விசனிக்கிறோம். தீவிர வாதிகளை ஒன்று திரட்ட வேண்டுமென்ற எண்ணம் இவருக்கிருந்த போதிலும், அதனை ராம்காரிலேயே, காங்கிரஸ் கூடுகிற தினங்களிலேயே நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமா? இஃது அநாவசியமான குழப்பங்களுக்கும் மனஸ்தாபங்களுக்கும் இடங்கொடுக்காதா? ஸ்ரீ போஸுக்கு, முதலில் தமது மாகாணத்தில் செய்ய வேண்டிய வேலை மிக அதிகமிருக்கிறது. இங்ஙனமே ஸ்ரீ ஜயப் பிரகாச நாராயணருக்கும் பீஹாரில் செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன. இவர்கள், சிறிது காலமேனும் தங்கள் வட்டங்களில் வேலை செய்து பலம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

இனி, காங்கிரஸ் சேனாதிபத்தியத்தின் படை வீட்டில் கூடியிருக்கும் பக்த கோஷ்டியைச் சிறிது கவனிப்போம். இந்தத் திருக்கூட்டத்தை இரண்டு பிரிவினராகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் காந்தியிடத்திலும், அவருடைய அரசியல் போக்கிலும் பரிபூர்ணமான நம்பிக்கை வைத்து, அவரை எப்பொழுதும் பின்பற்றத் தயாராயிருப்பவர். இவர்கள், காந்தியடிகள் தங்களை ஏன், எங்கே, எப்படி அழைத்துக் கொண்டு போகிறார் என்பவைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மேட்டிலே ஏறுகிற போது மேல் மூச்சு வாங்கத் தடுமாறினாலும், பள்ளத்திலே இறங்குகிற போது கால் சறுக்கி விழுந்தாலும் இரண்டையும் சமநோக்குடனேயே பார்க்கிறார்கள் இவர்கள். இந்தச் சம திருஷ்டி ஞானம் பெறுவது மகாகடினம் என்று வேதாந்திகள் கூறுவார்கள். கடினமான சாதனைக்குப்பிறகு, இவர்களுக்கு இந்தச் சம திருஷ்டி ஞானம் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா வென்பது நமக்குத் தெரியாது. ஆனால் இவர்களை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. இவர்களிடத்தில் நமக்கு மதிப்பும் உண்டு. ஏனென்றால், நிழலேயில்லாத பாலை வனத்தில், ஒரு பனை மரமாவது நிழல் கொடுக்கிறதேயென்று நாம் சந்தோஷமடைகிறோம். இவர்களுக்குத் தேசத்தில் ஓரளவு ஆதரவும் இருக்கிறது. அஃது எப்படிப்பட்ட ஆதரவு? குளிர் நடுக்கும் வட துருவ பிரதேசத்திற்குச் செல்லும் ஒருவன், அங்கே ஒரு சிறு தீப்பொறியைக் கண்டு அதில் தன்னை உஷ்ணப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புவது இயற்கை தானே. அந்த அளவில்தான், இந்த காந்தி பக்த கோஷ்டியைத் தேசம் பின்பற்றுகிறதென்று சொல்லலாம்.

மற்றொரு பிரிவினரைப் பற்றித்தான் நமக்குக்கவலை. ஆனால் இந்தக் கவலை இவர்களுக்காக அல்ல; தேசத்

திற்காக. இவர்கள், காந்தியத்தோடு தோளோடு தோள் உராய்ந்து நிற்கிறார்கள். சத்தியம், அஹிம்சை என்ற தாரக மந்திரங்களை மாறி மாறி உச்சரித்துக் கொண்டிருப்பதில் சலிப்புக் காட்டுவதேயில்லை. ஆனால் கண்ணொன்று காண, செவியொன்று கேட்க, மனமொன்று நாட, கையொன்று நீட்டிக் கொண்டிருக்கும் பக்த சிகாமணிகளுக்கும் இவர்களுக்கும் எவ்வித வேற்றுமையும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. பதவி வட்டிலில் அதிகார உணவைச் சுவைத்து, புகழ் நீரைப் பருகிக் களைப்புத் தீர்த்துக் கொள்ளவே இவர்கள் காந்தி வட்டாரத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்கள். இந்த வட்டாரத்திற்குள் கிடைக்கிற சௌகரியங்களைக் காட்டிலும் அதிகமான சௌகரியங்கள் வேறெந்த வட்டாரத்திலேனும் கிடைத்தால் உடனே தாவிக் குதித்தோட இவர்கள் தயார். 1937ம் வருஷம், காங்கிரஸானது, மாகாணப் பொறுப்பாட்சியை நடத்தி வைக்கச் சம்மதித்த காலத்திலிருந்து, காங்கிரஸில் அங்கத்தினராகச் சேர்ந்தவர் பலர் இத்தகையவரே. கதருடுத்து காந்தி பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் சுயராஜ்யம் ஓடி வந்துவிடும் என்று விஷயம் தெரியாமல் நம்பிக்கை கொண்டிருக்கிறவர்களிடமே இவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது. ஆனால் இது நிலைப்பட்ட செல்வாக்காகுமா? சாதாரணமாக எந்த நாட்டிலுமே, பாமர ஜனங்கள் என்று சொல்லப்படுகிற சமுதாயத்தின் கீழ்ப்படியிலுள்ளவர்கள், அரசியலைப் பற்றிச் சிந்திக்கும் கடினமான வேலையை மேல்படியிலுள்ளவர்களுக்கு ஒப்புக் கொடுத்துவிட்டு, தாங்கள் மத நம்பிக்கை கொண்டு விடுவதிலே நிம்மதியடைகிறார்கள். இவர்களுடைய இந்த நம்பிக்கையை, மேல்படியிலுள்ளவர்கள் தங்களுக்கு நலன் தரும் விதமாக உபயோகித்துக் கொள்கிற போதுதான், சமுதாயத்தின் அடிப்படையில் சலசலப்பு ஏற்படுகிறது. இதனையே 'புரட்சி' என்னும் பயங்கரமான பெயரால் அரசியல் பண்டிதர்கள் அழைக்கிறார்கள். தற்போதைய அரசியல் அமைப்பிலும், பொருளாதார அமைப்பிலும், சமுதாய அமைப்பிலும் இந்திய மகா ஜனங்களிடையே அதிருப்தி அதிதீவிரமாகப் பரவிவருகிறதென்றால், அதற்கு மேலே கூறப்பட்ட இரண்டாவது பிரிவினரே காரணமாவார். அந்த மட்டில் இவர்கள் நன்மை செய்கிறவர்கள்தான். ஆனால் இவர்களுடைய செயலால் இந்த விளைவு ஏற்படுகிறதே தவிர, விளைவை உத்தேசித்து இவர்கள் செயலைச் செய்யவில்லை. எப்படியும், நிகழ்கால அரசியலில் இவர்களுடைய செயல்களும் பேச்சுக்களும் ஒரு புரைப் புண்மாதிரி பரவி வருகிறதென்று அஞ்சுகிறோம்.

இந்தக் கட்சிகளுக்கிடையே, தர்க்க வாதங்களுக்குக் கிடையே, தத்துவ போதனைகளுக்கு மத்தியிலே, களங்கமற்ற கிராமவாசி, ஏழைத் தொழிலாளி என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறான். அவனுக்கு எந்த வழி போவதென்று தெரியவில்லை. தன்னுடைய குறைகளுக்குப் பரிகாரந் தேடித் தருவதாகச் சொல்லும் தலைவர்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு அவன் சலித்துப் போய் விட்டான். தன்னிலும் வேறான எந்தத் தலைவனி

டத்திலும் அவனுக்கு 'இப்பொழுது நம்பிக்கையில்லை. தன்னைப் போல் தன் குறைகளை, இன்ப துன்பங்களை, அநுபவிக்கக் கூடிய ஒரு தலைவனையே அவன் தேடிக் கொண்டிருக்கிறான். அப்படி அவன் தலைவனைத் தேடுகிற முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டு விடப் போகிறானே யென்பதற்காகவே, அவன் கவனமெல்லாம் வேறு வேறு திசைகளில் இழுக்கப் படுகின்றன. குடியேற்ற நாட்டந்தஸ்தா? பரி பூர்ண சுயராஜ்யமா? அரசியல் நிர்ணய சபையா? சமஷ்டியா? இவை யெல்லாம் அவனுக்கு ஒரு புதிராகவே இருக்கின்றன. அவன் ஒரு கவளச் சோற்றிலும், ஒரு முழத் துண்டிலும், தன் வாழ்க்கையைக் காண்கிறான். அதனை அவன் திருப்தி கரமாகப் பெற்று விட்டானாகில், அவனிடத்தில் யார் வேண்டுமானாலும் எந்த விதமான பாரமார்த்திக போதனைகளையும் அரசியல் தத்துவங்களையும் உபதேசம் செய்யலாம். அவனும் செவி கொடுத்துக் கேட்பான். அது வரை, இந்த நுணுக்கமான அரசியல் தத்துவங்களை அவன் கேட்கத் தயாரா யில்லை. காலையில் எழுந்தவுடன் குடியானவன், 'கடவுளே! இன்றைய கஞ்சிக்கு என்ன வழி!' என்றுதான் வானத்தையும் பூமியையும் பார்க்கிறானே தவிர, காந்தி—லின்லித்கோ சம்பாஷணையின் பயனாக சமஷ்டி வருமா அல்லது பரிபூர்ண சுயராஜ்யந் தான் கிட்டி விடுமா வென்று அவன் கவலைப்படுவதில்லை. காந்தியடிகள், ராஜப் பிரதி நிதியின் மாளிகைக்குச் சென்ற போது, குறுக்கே ஒரு கறுப்புப் பூனை ஓடியதே அது நல்ல சகுனமா கெட்ட சகுனமா வென்று அவன் சகுன சாஸ்திரம் பார்த்துக் கொண்டிருந்தால் அவன் வயிற்றுப் பசியடங்குமா? அவன் வரிச் சுமை தான் குறையுமா? அவன் நடக்கும் கட்டாந் தரை பளிங்குக் கல்லாகி விடுமா?

ஆக, தற்போது தேசத்து மகா ஜனங்களுக்குத் தேவையானது சரியான வழி காட்டிதான். சரியான வழி காட்டியை ஜனங்கள் பின்பற்றத் தயார். ஆனால் அந்த வழி காட்டி ஜனங்களிலே ஒருவராக இருக்க வேண்டும்; ஜனங்களுக்கு உதவி செய்கிறவராயிருக்கக்கூடாது.

* * *

கவனம்

ராஜ தந்திரம் இருக்கிறதே அஃது ஒரு வசீகரமான தேவதை. புன் சிரிப்பினாலும், கை குலுக்கலினாலும், நைச்சிக வார்த்தைகளினாலும் யாரையும் அது தன் வசப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் பெற்றது. சீனத் தலைவனான டாக்டர் ஸன்-யாட்-ஸென் சொன்ன மாதிரி, எழுது கோலுடனும் ராஜ தந்திர பாஷையுடனும் போராடுவது மகா கடினம். நமது தலைவர்கள், பிரிட்டிஷ் ராஜ தந்திரத்திற்கு இணங்கிக் கொடுத்துக் கொண்டு போவதைக் கண்டு நாம் ஆச்சர்யப்பட வில்லை. ஆனால் துக்கப்படுகிறோம். ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்து ஏறக் குறைய ஆறு மாதங்களாகின்றன. பிரிட்டிஷாருடைய யுத்த நோக்கங்கள் என்ன வென்பதைத் தெரிந்து கொள்வதற்கும், இந்திய மகா ஜனங்களின் லட்சியமென்ன வென்பதை தெரிவிப்பதற்கும் நமது தலைவர்கள் பல முய

ற்சிகள் செய்தார்கள். காந்தியடிகளும் ராஜப் பிரதிநிதியும் ஐந்து முறை சந்தித்துப் பேசினார்கள். கண்ட பலன் யாது? அது தான் யாருக்கும் தெரியவில்லை.

ராஜ தந்திரத்தின் சக்தி தானென்ன? ஜனங்களுடைய கவனத்தை அஃது எவ்வளவு அழகாகச் சிதற அடிக்கிறது? லார்ட்லின் லித்கோ இங்கே பேசுகிறார்; லார்ட் ஜெட்லண்ட் அங்கே பேசுகிறார் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின்றன. ஜனங்களின் ஆவல் அதிகரிக்கிறது. அவர்களும் அழகான வாக்கியங்களை இடை யிடையே புகுத்தி ராஜ தந்திர பாஷையில் அதிகாரமிடுக்கும், சமரஸப் பணிவும் கலந்து பேசுகிறார்கள். சமரஸக் கதவு திறக்கப்பட்டிருக்கிற தென்றும், திறக்கப்படுகிற தொனி இந்தப் பேச்சிலிருந்து கேட்கிற தென்றும் கருதி, தலைவர்கள் ஒன்று கூடிப் பேசுகிறார்கள். காரியக் கமிட்டியும் கூடுகிறது. ஏதோ நம்பிக்கை யில்லாமலா, ராஜதந்திர நிபுணர்களான நமது தலைவர்கள் கூடிப் பேசுவார்கள் என்று ஜனங்களுடைய ஆவல் இன்னும் அதிகரிக்கின்றது. வக்கீல் மனப்பான்மையோடு கூடிய நீண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்றன. உடனே, ராஜப் பிரதிநிதி மாளிகையிலிருந்து காந்தியடிகளுக்கு அழைப்பு வருகிறது. மகாத்மாவும் புறப்படுகிறார். ஜனங்களுடைய ஆவல் இப்பொழுது நம்பிக்கையாக உருக் கொள்கிறது. அரசாங்கத் தலைவரும் ஜனத் தலைவரும் கலந்து பேசுகின்றனர். இந்தச் சந்திப்பைப் பற்றி, தேவையில்லாத விவரங்கள பத்தி பத்தியாய் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. ஜனங்களின் நம்பிக்கை சந்தோஷமாக மாறுகிறது. காந்தியடிகளின் தெய்வீகத் தன்மையும், ராஜப் பிரதிநிதியின் மனிதத் தன்மையும் ஒன்றுகூடி, ஜனங்களின் மனத்தில் இடம் கொண்டு விடுகின்றன. அப்புறம் அரசியல் சிந்தனைக்கு அங்கு இடமேது? ஆத்ம திருப்தி தான். சம்பாஷணை முடிகிறது. சமரஸப் பேச்சில் வெற்றிக் குறிகள் காணப்படவில்லை யென்றும், ஆயினும் நம்பிக்கையை இழக்கவில்லை யென்றும், தேசம் இன்னும் போராட்டத்திற்குத் தயாராயில்லை யென்றும் அறிக்கைகள் பிறக்கின்றன. ஜனங்களுடைய சந்தோஷம் சோர்வாக மாறுகிறது. உடனே இந்தச் சோர்வை அகற்ற, தலைவர்கள் ஆங்காங்கு மகா நாடுகளிலோ பொது மேடைகளிலே கொஞ்சம் விறு விறுப்பாகப் பேசுகிறார்கள். மறுபடியும் ஆசைதான். இப்படியே, சென்ற ஆறு மாத காலமாக நமது நாட்டில் அரசியல் விவகாரங்கள், கைராட்டினத்தைப் போல் சுழன்று சுழன்று நடைபெற்று வருகின்றன.

ராம்கார் காங்கிரஸிலாவது இந்தச் சுழற்சி நிற்குமா? நிர்ணயமான ஒரு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படுமா? இதே கேள்விகளைத்தான் எதிரொலி, நம்மைத் திருப்பிக் கேட்கிறது.

* * *

மௌலானா சாஹிப்

ராம்கார் காங்கிரஸுக்குப் பெரும் பான்மையான ஓட்டுக்களினால் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட மௌலானா அபுல் கலாம் ஆஸாத் அவர்களை நாம் பாராட்டுகிறோம். 'ஆஸாத்' என்ற

வார்த்தைக்கு ‘பயமில்லாத, சுதந்திரமுள்ள’ என்று அர்த்தம். இவருடைய தலைமையில் காங்கிரஸ் ரதமானது, நிர்ப்பயமாகவும் சுயேச்சையாகவும் செல்ல வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

ராம்கார் காங்கிரஸுக்குத் தலைவராகவும், வரவேற்புக் கூட்டத் தலைவராகவும் தெரிந்தெடுக்கப் பெற்றிருக்கிற இரண்டு பெரியார்களையும் அரசியல் திருஷ்டியுடன் பாராமல் அறிவுக் கண் கொண்டு பார்க்க விழைகிறோம். மௌலானா அபுல் கலாம் ஆஜாத்தும் பாபு ராஜேந்திர பிரசாத்தும், எந்த நாடும் பெருமைப் படக் கூடிய அறிஞர்கள். இவர்களிடத்தில் அறிவு எப்படி உயர்ந்து பிரகாசிக்கிறதோ அப்படியே இவர்களுடைய இருதயமும் விசாலமடைந்து விளங்குகிறது. இவர்கள் அரசியலிலே பிரவேசித் திராவிட்டால், இலக்கிய உலகம் மிகப் பெருமை யடைந்திருக்கும். ஆனால் இனி அதைப் பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை யல்லவா?

தலைவர் பதவிக்கு அபேட்சகராக நின்ற ஸ்ரீ எம். என். ராய்க்கு மிகச் சொற்ப ஓட்டுகளே கிடைத்திருக்கின்றன. இதைக் குறித்து அவர் விசனப் படவில்லை. நாமும் வருந்தவில்லை. தமக்கு நிச்சயம் வெற்றி கிடைக்காதென்ற நம்பிக்கை யோடுதான் அவர் இந்தப் போட்டியில் இறங்கினார். தற்போதைய தேசீயத் தலைமைக்கு எதிரிடையாகவுள்ள ஓர் அபிப்பிராயத்தின் பிரதிநிதியாகவே அவர் நின்றார். அந்த அபிப்பிராயம் இப்பொழுது வலுவில்லாம லிருக்கலாம். ஆனால் இனி அதனை வலுவடையச் செய்ய, தனது போட்டி ஒரு தூண்டுகோலா யிருக்க வேண்டுமென்பதுவே ஸ்ரீ ராயின் நோக்கம். இவருடைய மனத் திண்மையை நாம் உண்மையில் பாராட்டவே செய்கிறோம்.

* * *

பரமஹம்ஸர்

1940ம் வருஷம் மார்ச் மாதம் 11-ந்தேதி ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸருடைய 104-வது ஜன்ம தினம். அனைவரும் அந்தத் திரு நாளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று விரும்புகிறோம். எப்படி சிவாஜிக்கு ராமதாஸர் குருவாக அமைந்தாரோ அப்படியே, விவேகானந்தருக்கு ஸ்ரீ ராம கிருஷ்ணர் குருவாக அமைந்தார். சாதாரண குழந்தைகள் முதல் புரிந்து கொள்ளக் கூடியனவும் அனுஷ்டிக்கக் கூடியனவுமான போதனைகளையே ராம கிருஷ்ணர் செய்தார். அவர் உலகத்தினின்று ஓடிப் போய், கடவுளைத் தேடுமாறு கூறவில்லை. உடலத்தை ஒடுக்கி, உள்ளத்தைச் சுருக்குமாறும் அவர் சொல்லவில்லை. திறந்த மார்போடும் நிமிர்ந்த தலையோடும் உலகத்தைப் பார் என்றுதான் அவர் உபதேசித்தார். அந்த உபதேசந்தான் இப்பொழுது நமக்கு அரசியலில் தேவை. அந்தத் தேவையை முன்னிட்டாவது, நாம் ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவோமாக.

* * *

இந்தியாவுக்கு ஏன்? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குக் கூட நல்ல அதிர்ஷ்டந் தான். 1941-ம் வரு

ஷம் இந்தியாவின் ஜன கணிதம் எடுக்கப்படு மல்லவா?

40 கோடி. அதற்குப்பூர்வாங்கமாக எடுக்கப் பட்டுள்ள ஒரு கணக்குப்படி, இந்தியாவின் ஜனத் தொகை நாற்பது கோடியாயிருக்குமென்று சொல்லப்படுகிறது அப்படியானால், ஜனப் பெருக்கத்தில் சீனாவுக்குச் சமதையாக நம்மைச் சொல்லிக் கொள்ளலாம்! இந்தியாவில் எப்பொழுதுமே ஆள் பலத்திற்குக் குறை வில்லை. ஆனால் அது சரியாக உபயோகிக்கத் தான் படவில்லை. 1915-ம் வருஷத்தில் ஐரோப்பாவின் கிழக்குப் போர் முனையில் ஜெர்மானியர்களுக்கும் ருஷ்யர்களுக்கும் பலத்த போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ருஷ்யச் சேனையில் ஆள் பலம் குறைந்து போனதைக் கண்டு, ருஷ்ய சேனாதிபதிகள், சிறந்த போர் வீரர்களைப் போர்க் களத்திற்கு அனுப்பித் தருமாறு ஜார் மன்னனுக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்கள். ஜார் மன்னன் அப்படியே யசிலரைப் போர்க் களத்திற்கு அனுப்பினான். அப்படி அனுப்பப்பட்டவர்கள் யார்? போர் வீரர்களல்ல; மனித உருவங்கள்! இந்த விதமாக, ருஷ்யாவின் ஆள் பலத்தை ட்ரோட்ஸ்கி எள்ளி நகையாடியிருக்கிறான். அது இப்பொழுது நமது ஞாபகத்திற்கு வருகிறது நாற்பது கோடி மக்களும் நாற்பது கோடி மனித உருவங்களாக இருந்தால் போதுமா?

ஸ்ரீ ராம. முத்துராமன் செட்டியார் அவர்கள் 'ஜோதி'யின் அபிவிருத்தியை முன்னிட்டு லோயர் பர்மா பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருகிறார்கள். அபிமானிகள் அனைவரும் அவருக்குத் தக்க உதவி புரிந்து அவர் மூலம் சந்தாதார்களாகப் பதிவு செய்து கொண்டு 'ஜோதி'க்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்

உலகத்திலே என்ன நடக்கிறது?

ருஷ்ய-பின்லாந்து போராட்டம் இப்படித்தான் நடக்கிறது என்று ராய்ட்டர் செய்திகள் கூறுகின்றன.

மூன்றாவது ஜெர்மன் ஏகாதிபத்
திய அரசனாக வேண்டு
மென்ற ஆசையா
ஹிட்லருக்கு !

ஹிட்லரைப்பற்றி ஒரு
போலிஷ் சைத்ரிகரின்
கருத்து.

ஐரோப்பிய யுத்தச் சுழலில்தான் அகப் பட்டுக் கொள்ள வே ண்டாமென்று அமெ ரிக்கா பார்க்கிறது.

டாக்டர் கோப் பெல்ஸ் பிரசார மருந்துகள் தயா ரிக்கிறார்!

மேற்குப் போர் முனையில் இப்படித் தான் போர் நடக்கிறதாம்!

உலகத்துப் பெரிய வாசகசாலை

——வேணி பிரஸாத்

லண்டன் நகரத்திலே சிறியதும் பெரியதுமாய், பல வாசகசாலைகள் (லைப்ரெரி) இருக்கின்றன. ஒவ்வொரு ஐஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் வாசகசாலைகள் இருக்கின்றன. கூறப்புகின், பலருடைய வீடுகளே வாசக சாலைகளாயிருப்பதாய்ச் சொல்லலாம்.

இங்கிலாந்தின் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஒவ்வொரு வாசக சாலைகள் இருப்பதைக் காணலாம். இவ்விதமிருக்க லண்டன் நகரத்தில் ஏராளமான வாசகசாலைகள் இருப்பது அதிசயிக்கதற்குரியதாகுமோ? இவற்றைத் தவிர, உலகப் பிரசித்தி பெற்றதும், சரஸ்வதியின் அவதாரமே யெனக் கூறும்படியானதுமான ஒரு பெரிய வாசகசாலை லண்டன் நகரத்திலிருக்கிறது. இதற்கு 'பிரிட்டிஷ் மியூசியம்' என்று பெயர். இது, மியூசியமும், வாசகசாலையுமாகும். நகரத்தின் மத்தியிலே அமைந்திருக்கும் இந்த விசாலமான மாளிகையின் நூற்றுக் கணக்கான அறைகளிலே, இந்த உலகத்து ஒவ்வொரு தேசத்தின் அந்தந்தக் காலத்திய ஒவ்வொரு பொருளும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. எகிப்து தேசத்து 4000 வருஷங்களுக்கு முந்திய எலும்புகள், உடல்கள் அங்கு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவைகளைப் பற்றி இக்காலத்து ரசாயன பண்டிதர்கள் எவ்வளவோ பிரயாசை யெடுத்தும் அவைகள் எந்த ஜந்துக்களின் எலும்புகள், அல்லது உடல்கள் என்ற ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. மனிதர்களது மட்டுமில்லை, பூனைகள் பட்சிகள் முதலிய மிருகங்களின் ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முந்திய உடல்கள் அலமாரிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த எகிப்தியப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைகளின் சுவர்களில், எகிப்தியர்களது பழைய காலக் கொள்கைகளாகிய நரகம், மோக்ஷம், பாவத்திற்கு தண்டனை இவைகளடங்கிய சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவை முற்றிலும் எமதர்ம ராஜனுடைய தர்பாராகவே காட்சியளிக்கும். இவற்றைப் பார்க்கும் சிறுவர்கள் பெண்கள் அப்படியே நடுங்கி விடுகின்றனர். காபூல், பர்ஷியா முதலிய தேசங்களின் அந்தக் காலத்திய நாகரீகங்களைக் காட்டும் சிலைகள், சாசனங்கள் முதலியன சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. கிரீஸ், ரோம் இந்தத் தேசங்களின் கடந்த 2500 வருஷ வாழ்க்கைச் சித்திரங்கள் பார்ப்பவருக்கு மிகுந்த ஆச்சர்யத்தை யளிக்க வல்லனவாயிருக்கின்றன. நமது பாரததேசத்தின் புராதன புத்த காலத்துச் சிலைகள் இங்கு வைக்கப்பட்டிருப்பவை போன்று நமது நாட்டில் எந்த இடத்திலும் பார்க்கவே முடியாது. முஸ்லீம்களது சித்திரக்கலையை நீங்கள் தெரிய வேண்டுமானால் இந்த மியூசியத்தைத் தவிர, உலகத்தில் வேறு எங்கேயும் நீங்கள்

பார்த்துக் கொள்ள முடியாது. இப்படியிருக்க ஆங்கில நாட்டின் நாகரீகங்களைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு அந்த மியூசியத்தில் பஞ்சமா என்ன? அவர்கள் இலை தழைகளை இடையிலே உடுத்திக் காட்டு வாழ்க்கை வாழ்ந்த அந்தக் காலத்திலிருந்து நாகரீகத்தின் சிகரத்திலே தவழ்வதாய்ச் சொல்லிக் கொள்ளும் தற்காலம் வரையுள்ள, கற்கள், ஆயுதங்கள், உடைகள், பாத்திரங்கள், எலும்புகள், சடலங்கள், புத்தகங்கள் யாவையும் நீங்கள் இங்கு விபரமாகக் காணலாம். மற்றும், இந்த உலகத்தின், நல்லதும் கெட்டதுமான பளிங்குக் கிளாஸ்கள், தங்கம், வெள்ளி, முத்து, வயிரம் முதலியவைகளையும் நீங்கள் இங்குக் கண்டு களிக்கலாம். ஆனால் இந்தக் கட்டுரையின் உத்தேசம் இவைகளைப்பற்றி வர்ணிப்பது மட்டுமல்ல. இந்த மியூசியத்தை அழகும் சிறப்பும் செய்து கொண்டிருப்பது அங்கிருக்கும் வாசகசாலைதான். இந்த லைப்ரெரியிலே, 70 லட்சத்திற்கும் அதிகமான புத்தகங்கள் இருக்கின்றன என்றால் நீங்கள் ஆச்சரியப்படக் கூடாது. இந்தப் புத்தகங்களின் அட்டவணைகள் வைக்கப்பட்டிருக்கின்றனவே அவைகளே நம்முடைய தேசத்து எத்தனையோ லைப்ரெரிகளை நிரப்பிவிடும்! கிறிஸ்து வேதமாகிய பைபிள் ஒரு சிறிய புத்தகந்தான். ஆனால் அந்தக் கிறிஸ்து வேதத்தைப் பற்றி எத்தனை நூல்கள் வெளி வந்து அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன தெரியுமா? அந்த எண்ணிக்கையைக் கூறுவதைப் பார்க்கிலும், அந்த நூல்களின் பெயர்களே இருபது புத்தகங்களை நிரப்பிக் கொண்டு கிடக்கின்றன என்பது சொல்வதற்குச் சுலபமாயிருக்கிறது. உலகத்து எல்லாப் பாஷைகளினுடைய நூல்களும் இங்கு தாராளமாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஹிந்தி பாஷையின் நூல்களுடைய அட்டவணையே இரண்டு புத்தகங்களைப் பூராவும் அலங்கரிக்கின்றன. காசி, அலகாபாத், கல்கத்தா, ஜயபூர், ஜோதிபுரி, சதர்பூர் முதலிய பல நகரங்களில் எனக்கு வாசிக்கக் கிடைக்காத நூல்கள் இந்த வாசகசாலையில் மிக எளிதாகக் கிடைத்தன. சமஸ்கிருதம், பாலி இந்த பாஷை நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும் இங்கு ஏராளம். இதைப் போன்று, சீனு, ஜப்பான், பார்சி, அரபு, பிரெஞ்சு, ஜெர்மன், இத்தலி, ரஷியா முதலிய எல்லாப் பாஷைகளுடைய ஆயிரக்கணக்கான நூல்கள் இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வாசக சாலையின் லட்சியமே, சாதாரணமாகப் படிக்கவும், படிப்பிக்கவுமில்லை; இதனுடைய ஒரே லட்சியம், ஆராய்ச்சிக்கு உதவி புரிவதுதான். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அச்சிடப்படும் எல்லா புத்தகங்களும், பத்திரிகைகளும் தவறாது ஒவ்வொரு காப்பி இங்கே அனுப்பி வைப்படுகின்றன. தினந்தோறும் நூற்றுக் கணக்கில் புதிய புதிய நாவல்கள் இங்கு வந்த வண்ணமா யிருக்கின்றன. இந்த தேசத்தில் புத்தப் புதிய நாவல்கள் படிப்பதில் யாவரும் மிகுந்த ஆசை யுடையவர்கள். ஆனால் இந்த வாசக சாலையில், ஒரு நாவல் வந்து சேர்ந்த ஐந்து வருஷங்களுக்குப் பின் தான் வாசிக்கக் கொடுக்க வேண்டுமென்ற விதி யிருக்கிறது. அதாவது கிளர்ச்சி தரக் கூடிய நாவல்களைப் படிக்கக் கூடிய கூட்டம் வந்து இந்த

வாசக சாலையை நிரப்பி விடக்கூடாது என்பதற்காகவே இந்த விதி. மற்றுமொரு முக்கியமான விதி என்னவென்றால் 21 வயதுக்குக் குறைந்தவர்களை இங்கு வாசிக்க கண்டிப்பாய் அனுமதிப்பதில்லை. பொதுவாக ஆராய்ச்சிக்காகப் படிக்க வருபவர்கள் தான் இங்கு விசேஷம். அவர்களுக்கு அனுமதிச் சீட்டு அளிக்கப் படுகிறது. எந்த ஒரு காரணத்தைக் கொண்டும் வாசக சாலைக்கு வெளியே புத்தகங்களைக் கொண்டு போக அனுமதி கிடையாது. காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை இந்த வாசக சாலையில் வாசிக்கலாம். லண்டன் நகரத்திலே உள்ள மற்ற லைப்ரரிகளைப் போன்று இதிலும் குடை, உடுப்பு, கடியாரம், முதலியவற்றை வைப்பதற்கு அறைகள் இருக்கின்றன. மற்றும் பிற்பகல் இடைவேளைப் போஜனத்திற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. 'பசித்திருப்பவன் பக்தி செலுத்த முடியாது' என்பது இந்த தேசத்து சித்தாந்தம் அல்லவா? ஆங்கிலேயர்கள், எவ்வளவு பெரிய வேலை, அது எவ்வளவு முக்கியம் வாய்ந்ததா யிருந்தாலும் சரி, சாப்பாட்டு வேளை வந்தவுடன் அப்படியே விட்டு விட்டு போஜனத்திற்குச் சென்று விடுவார்கள். பட்டினியா யிருந்தால்தான் அறிவு விர்த்தியாகும்; அப்போதுதான் படிக்க முடியும் என்ற நம்பிக்கை இங்கு யாருக்குமே கிடையாது. படிக்க வருபவர்கள் பிற்பகலில் கட்டாயம் ரொட்டி தின்கிறார்கள். சாய் (டி) குடிக்கிறார்கள். இங்கு வசிக்க வருபவர்களில் அநேகர், 80 மைல் தூரத்திலிருந்து கூட காலை ரெயிலில் வந்து படித்து விட்டு மாலை ரெயிலில் வீடு திரும்புகின்றனர். இங்கு ரெயில் வண்டிகள் மணிக்கு 60 மைல் வேகத்தில் செல்வது ஆச்சர்யப் படக்கூடிய பெரிய விஷயமன்று. ஆக்ஸ்போர்டுக்கும், லண்டனுக்கும் 69 மைல் தூரம். 70 நிமிஷத்தில் ஆக்ஸ்போர்டிலிருந்து லண்டனை யடைந்து விடலாம். ரெயில்வே ஸ்டேஷனை விட்டு இறங்கி பூமிக்குக் கீழே செல்லும் ரெயிலில் ஏறினால் ஐந்தே நிமிஷத்தில் இந்த லைப்ரரியை அடையலாம். காலை ஒன்பது பத்து மணிக்கெல்லாம் நூற்றுக் கணக்கான பேர் படிக்க வருபவர்கள் இந்த லைப்ரரியின் வாசற் படியில் கூடி விடுவது ஒரு காட்சியா யிருக்கும். இங்கு படிப்பதற்கு பல அறைகள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் பெரிய வட்டமான அறையின் மத்தியில் புத்தகங்களின் அட்டவணைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. மற்றும் பல மேஜைகளும் கிடக்கின்றன. இந்த ஒவ்வொரு மேஜைக்கும் துண்டு துண்டு நம்பர். ஒரு மேஜை ஒன்று சுமார் ஒரு முழ அகலம், ஒன்றரை கஜ நீளமுள்ளது. ஒவ்வொரு மேஜையின் மீதும், பேனா, மைக்கூடு, பிளாட்டிங் பேப்பர், பேப்பர் வெட்டுங்கருவி, பேப்பர் வெயிட் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மேஜைக்கும் மின்சார விளக்கு வசதி செய்யப் பட்டிருக்கிறது. மின்சார வெளிச்ச மில்லையேல் இங்கு ஒரு காரியமுமே நடைபெறாது. அதுவும் பனிக் காலத்திலே ஒவ்வொரு சமயம் கையிலிருக்கிற புத்தகத்தின் எழுத்துக் கூட சரியாய்த் தெரியாது. அவ்வளவு இருட்டாயிருக்கும். இந்தப் பனிக் காலம் மூன்று நான்கு மாதங்கள், காலை 9 மணிக்கு சூரியன் உதயமாகி மாலை $3\frac{1}{2}$ அல்லது நான்கு மணிக்கு அஸ்தமித்து விடுகிறது. மின்சார வெளிச்சத்தைக்

கொண்டு அந்தத் தேசம் பூராவிலும், இரவு 6, 7 மணிவரை பகல் போல் செய்யப் படுகிறது. இந்த லைப்ரெரி யிலும் ஆங்காங்கு மின்சாரவெளிச்சத் திற்கு ஏற்பாடு செய் திருக்கிறார்கள். படிக்க வருபவர்கள் இங்கு ஒவ்வொரு மேஜையாகச் சூழ்ந்து கொள்வார்கள். அவர்கள் அட்டவணையைப் பார்த்து, டிக்கட்டில், தங்களுக்குத் தேவைப் படும் புத்தகத்தின் பெயர், அப்புத்தக ஆசிரியரின் பெயர், நம்பர், தன் னுடைய பெயர், தன்னுடைய மேஜை யின் நம்பர் முதலிய இவற்றை எழுதி அங்கங்கு வைக்கப் பட்டிருக்கிற கூடைகளில் போடுகிறார்கள். ஐந்து அல்லது பத்து நிமிஷங்களுக்கு ஒரு முறைவேலைக்காரர்கள் ஒரு கைவண்டி யில் புத்தகங்களை நிரப்பி வந்து பே சாது ஒவ்வொரு மேஜையிலும் அந்தந் தப் புஸ்தகங்களை வைத்து விட்டுச் சென்று விடுகிறார்கள். இந்த லைப்ரெரி யில் பேசக் கூடாது என்பது விதியா கும். ஆனால் பேசாமல் முடியாது என்ற நிலைமை ஏற்படின் பேசுவதற்கு அனுமதி உண்டு. நீங்கள் விரும்பிக் கேட்ட புத்தகத்தை அங்கு மற்றொரு வர் படித்துக் கொண்டிருந்தால், 'நீங் கள் எழுதிக் கொடுத்த டிக்கட்டோடு அப்புத்தகம் ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிறது. நிரம்ப அவசியமா யிருந்தால் தலைமை அதிகாரியிடம் விண்ணப்பிக்கலாம்' என்று அச் சிட்ட மற்றொரு டிக்கட்டையும் சேர்த்து மேஜையில் வைத்து விட்டு பேசாது வேலையாள் சென்று விடு வார். அல்லது முறைப்படி அடுத்த அறையில் அப்புத்தகம் கிடைப்பதா யிருந்தால், 'தயவு செய்து அடுத்த அறையில் இதைப் பாருங்கள்' என்ற டிக்கட், தங்கள் மேஜையில் வைக்கப் பட்டிருக்கும். நீங்கள், டிக்கட்டில் நம்பர் எழுத மறந்து விட்டால், 'இதில் நம்பர் எழுதுங்கள்' என்று அச்சிட்ட ஒரு துண்டு குறிப்போடு உங்கள் டிக்கட் மேஜைக்குப் பேசாது திரும்பி வந்துவிடும். தேதி பிசகாக எழுதப்பட்டிருந்தால், 'தேதியைச் சரியாக எழுதுங்கள்' என்று அச்சிட்ட குறிப்போடு உங்கள் டிக்கட் இரண்டே நிமிஷத்தில் பே சாது திரும்பி வந்துவிடும். பிழைகள் நேருவதை எதிர் பார்த்தே யாவற் றுக்கும் அச்சடித்த குறிப்புகள் வைத் திருக்கிறார்கள். இதனால் வாய்திறந்து பேசுவதற்கு அவசியமே இல்லாது போகிறது. ஆங்கில நாகரீகத்திலே, ஒவ்வொரு விஷயத்திற்கும், 'தாங்க்ஸ்,' அல்லது 'சாரி' சொல் வது வழக்கம். அதாவது சந்தோ ஷச் செய்தியா யிருந்தால் 'தாங்க்ஸ்' என்றும், வருத்தச் செய்தியா யிருந் தால் 'சாரி' என்றும் கூறுவார்கள். ஆனால் இந்த வாசகசாலையில் இந்த வழக்கம் சைகையினாலேயே நிறை வேற்றப்படுகிறது.

இந்த விதமான அமைதியிலே, நூற்றுக் கணக்கான வித்துவான்கள் இங்குப் படித்தும் நூல்கள் எழுதிக் கொண்டும் இருக்கின்றனர். கடந்த நூறு வருஷங்களில் இந்த உலகத் தையே ஆட்டி வைத்திருக்கிற அநேக நூல்கள் வட்ட வடிவமா யுள்ள இந்த அறையிலேதான் எழுதப் பட்டவை. வர்க்கபேதமற்ற ஒரு மனித சமுதா யத்தை தன்னுடைய கற்பனை சிருஷ்டியில் கண்டு களித்த மகான் காரல் மார்க்ஸ், பிரசித்தி பெற்ற 'காபிடல்' என்ற நூலை இந்த அறையிலே இருந்துதான் எழுதினார். அவர் அதிகாலையிலேயே இந்த வாசக

சாலைக்கு வந்து விடுவாராம். மாலை 6 மணிக்கு வேலைக்காரர்கள் பலவந்தமாகவே அவரை வாசக சாலையை விட்டு வெளியேற்ற வேண்டியிருக்குமாம்.

இந்த வாசக சாலையின் ஒவ்வொரு இலாக்காவிலும் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் நல்ல வித்துவான்கள். இந்த லைப்ரெரியின் தலைமை ஆசிரியர் உத்தியோகம் பெரிய கௌரவமான பதவியாகக் கருதப்படுவது. இங்கு எந்த ஒரு இலாகாவிலாவது ஒரு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டால், அவர் இங்கிலாந்தின் பிரசித்த வித்வான்களின் வரிசையில் சேர்க்கப்பட்டு விட்டார் என்பது அர்த்தமாகும். இவர்கள், எழுத்தாளர்களுடைய பெயரை எழுதுவதில் ஒரு நேரான முறையைக் கையாள்கிறார்கள். அதாவது, நீங்கள் சாதாரணமாகப் பார்த்திருக்கலாம், அநேக வங்க எழுத்தாளர்கள் தங்களுடைய பெயருக்குப் பின்னால், முகோபாத்யாய என்று எழுதுவதற்கு முகர்ஜீ என்றும், பந்த்யோபாத்யாய என்பதற்கு பானர்ஜீ என்றும் எழுதுகிறார்கள். இந்த வாசகசாலையில், இவ்விதம், முகர்ஜீ பானர்ஜீ என்று எழுதாமல் சுத்தமாக எழுதும்படி தூண்டுவதோடு அந்த ஆசிரியர்கள் இவர்களுடைய பெயர்களைச் சுத்தமாகவே எழுதுகிறார்கள். ஒரு முறை எனக்கு இங்கு என்னுடைய புத்தகத்தைப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நான் என்னுடைய பெயரை 'ப' முதலாக ஆரம்பித்து, பேணி பிரசாத் என்று எழுதுவது வழக்கம். சமஸ்கிருத இலக்கணப்படி 'ப' வுக்குப் பதிலாக 'வ' உபயோகித்து வேணி பிரசாத் என்று எழுதுவதே சரி. லைப்ரெரியின் அட்டவணையில் என்னுடைய 'பேணி பிரசாத்' என்ற பெயருக்கு முன்னே 'வேணி பிரசாத்' என்று எழுதி குறிப்பும் இடப்பட்டிருந்தது. 'உங்களுடைய பெயரை பிழையாய் எழுத உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் இந்த லைப்ரெரியில் நாங்கள் பிழையை விரும்ப மாட்டோம்' என்று அந்த ஆசிரியர்கள் கூறும் போது நாம் ஆச்சர்யமும் வெட்கமும் அடைகிறோம்.

ஆசிரியர்களைத் தவிர, மற்றும் பல வேலைக்காரர்கள் இங்கு இருக்கிறார்கள். சென்ற 1914ம் வருஷ மஹா யுத்தத்தில் ரணகளத்திற்குச் சென்ற இந்த லைப்ரெரியின் உத்தியோகஸ்தர்கள் பெயர்கள் கட்டிடத்தின் சுவரில் பதிக்கப்பட்டிருக்கின்றன. சண்டையில் உயிர் துறந்தவர்களின் பெயர்கள் வெளியே பதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமும் நவம்பர் மாதம் 11ந் தேதி அவைகளுக்கு மலர் மாலைகள் சாத்துகிறார்கள்.

இந்த வாசகசாலை 9 மணி நேரமே திறந்திருக்கிறது. அமெரிக்காவிலே, படிப்பவர்களுக்கு, அறையும், அதற்கு பூட்டு சாவியும் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த லைப்ரெரியிலே சும்மா வெறும் மேஜையோடு திருப்தி யடைய வேண்டியதிருக்கிறது.

ஆங்கிலத்தில் சரித்திரம் எழுதுவானேன்?

—மு. ஞானசம்பந்தன்

இப்பொழுது சாதாரணமாய் இந்தியாவைப் பற்றி அறிய வேண்டுமென்றால் ஆங்கில பாஷையிலேயே பார்க்க வேண்டியதாயிருக்கிறது. இது நமக்கு ஒரு பெருங் குறையாகவே இருக்கிறது. தற்காலத்து இந்தியர்கள், தம் தேச சரித்திரத்தைப் பற்றி கவலைப் படுகிறதேயில்லை. இந்தியாவின் சரித்திரத்தை வெளிப் படுத்தியவரெல்லாம் அநேகமாய் ஆங்கிலேயராகவே இருக்கின்றனர். ஏற்கெனவே இந்தியாவில் சரித்திர நூல்கள் இருந்த போதிலும் அவைகளை ஒருவாறு வெளிக்குக் கொண்டு வந்தவர் ஆங்கிலேயரே. ஆனால் ஆங்கிலேயர் எழுதிய சரித்திரப் புத்தகங்களில் உண்மைகளை அதிகமாய்க் காணமுடியாது. ஏனெனில், சரித்திரங்கள் எழுதும் ஆங்கிலேயர் நம் நாட்டவரல்லர்; நம் நாட்டுப் பாஷையில் அவர்களுக்குத் தேர்ந்த பயிற்சி இல்லை. அப்படித் தேர்ந்த பயிற்சி இருந்த போதிலும் இந்திய உணர்ச்சியை அவர்கள் பெற முடியாது. உதாரணமாகத் தேசாபிமானியாகிய விபின சந்திரபாலர் 1908-ம் வருஷம் சென்னையில் வந்து பிரசங்கஞ் செய்யும்போது, வடமொழியில் தேர்ந்தநிபுணரான மாக்ஸ் முல்லர் என்ற ஆங்கிலேயர் 'தம்மபதம்' என்ற ஒரு பௌத்த நூலை மொழி பெயர்த்து உரை யெழுதிக் கொண்டு வரும்போது, ஒரு பதத்திற்கு மாறு பொருள் கொண்டு முரண்பட்டார் என்று கூறியிருக்கிறார். இதனால் யான் ஆங்கிலேய சரித்திரக் காரர்களைக் குறை கூறுவதாக அன்பர்கள் எண்ணுதல் கூடாது. சரித்திர உலகம் அவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றது. முக்கியமாய், இந்தியர்கள் சரித்திர சம்பந்தமாக ஆங்கிலேயர்களுக்கு எழுமையும் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் இந்திய உணர்ச்சியைப் பெற முடியாதென்றே கூறுகின்றேன். அஃது ஆங்கிலேயர் குற்றமன்று இயற்கையின் குற்றமே. ஒருவன் எந்த நாட்டின் சரித்திரத்தை எழுதப்புகுகின்றானோ அந்த நாட்டின் உணர்ச்சியைப் பெற்று எழுதுவதனாலேயே அச்சரித்திரம் நன்றாயிருக்கும். அன்றேல், அச்சரித்திரப் புத்தகத்தால் அந்நாட்டினர் யாதொரு பயனும் அடைய மாட்டார். இதை அநுபவசித்தமாய்க் காணலாம். இஃது இங்ஙனம் நிற்க.

இந்தியாவின் சரித்திரத்தை எழுதும் இந்தியர்கள், ஆங்கில பாஷையில் எழுதுகின்றார்கள். இது பெருந்தவறு. பாரதமாதா அவர்களை வெறுக்கின்றாள். நம் நாட்டுச் சரித்திரத்தை அறிய அந்நிய பாஷை பயிலல் வேண்டுமோ? இங்ஙனம் ஆங்கிலேயர் செய்வரோ? ஐரோப்பாவின் சரித்திரங்களில் ஏதேனும் ஒரு நூல் தமிழில் வெளிவந்திருக்கின்றதோ? பாஷாபிமானம் இன்றி ஒரு சரித்திர நூலை இயற்றுபவர் வெறுக்கத்தக்கவரே. ஆனால் சிலர் இதற்கு ஒரு சமாதானம் கூறக்கூடும். ஆங்கில பாஷை அரச பாஷையாயிருத்தலினாலும் பள்ளிக் கூடங்களில் சரித்திர பாடங்கள் ஆங்கிலத்திலே போதிக்கப் படுவதினாலும் சரித்திரப் புத்தகங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படுகின்றன என்பர். அஃது ஒப்பத்தகுந்ததல்ல. ஆங்கிலம் அரச பாஷையாயிருத்தலினாலென்ன? ஜனத்தொகையில் எத்தனை பெயர் ஆங்கிலங் கற்றவர்? இந்தியச் சரித்திரத்தை ஆங்கிலங்கற்றவர் மாத்திரம் வாசிக்க வேண்டுமோ? புஸ்தகம் என்றிருந்தால் அதை யாவரும் படிக்குமாறன்றோ செய்யவேண்டும்.

தமிழ்ப் பாஷையின் வளமையைப் பற்றி அறிய வேண்டுமானால் கால்ட்வெல் எழுதிய ஆங்கில நூலைப் பார்க்க வேண்டும். சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களின் பெருமையை அறிய வேண்டுமானால் ஆங்கிலமே கற்க வேண்டும். இஃதென்ன பேதமை? தேச உணர்ச்சி பெற்றவரும் அங்ஙனம் செய்வரோ? இந்தியர்கள், இந்தியாவின் வளமையைப் பற்றியும் இந்திய நூல்களைப் பற்றியும் விரிவாயும் அழகாயும் ஆங்கிலத்தில் எழுதுகின்றார்கள். அந்தோ! இதுவும் பாரத தேவி செய்த துர் அதிர்ஷ்டமோ? இவர்கள் ஏன் தம் தாய் மொழியில் எழுதக் கூடாது? ஒரு கால் தாய் மொழியில் எழுதப் போதிய ஆற்றலில்லையோ? இத்தகைய குறைகள் அவர்களிடமிருப்பின் அவர்கள் இந்தியர்களே அல்லர். அங்ஙனம் இவர்கள் சரித்திரங்களை ஆங்கிலத்திலேயே எழுத வேண்டிய அவசிய மேற்பட்டால் முதலில் தம் தாய் மொழியில் எழுதியே பிறகு ஆங்கில பாஷையில் எழுத வேண்டும். அது தான் முறை. அப்பொழுதுதான் அவர்கள் அந்நியர்களால் நன்கு மதிக்கப்படுவார்கள்.

சிலர் எழுதுவது தான் ஆங்கிலத்தில் என்றால் பேசுவதும் ஆங்கிலத்திலேயே. இஃது அருவருக்கத்தக்கது. சாதாரணமாகப் பெரிய மனிதர்கள் முதலில் சபையில் பேச வந்தால், தம் தாய் மொழியில் பேசத் தெரியாதென்று சொல்லிக் கொள்வது ஒரு பெரிய கௌரவமாக நினைக்கிறார்கள். அந்தோ! இவர்களைத் தேசாபிமானிகளென்று கூறுவதோ? பாஷாபிமானிகள் என்று இவர் எப்படித் தலை காட்டுகிறார்களோ? என் தாயைப்பற்றி யான் அறியேன் என்று சொல்லிக்கொள்வது ஒரு கௌரமோ? அந்நிய பாஷை யொன்றில் பெரிதும் ஆர்வம் வைத்துப் போற்றி, தாய்மொழியை வெறுப்பவர் செயல் எப்படி இருக்கிறதென்றால் முந்நூறு நாட் சுமந்து பெற்ற அன்னையை உதைத் தோட்டி விட்டு மனைவியைப் போற்றுவது போலிருக்கின்றது. இப்படிக் கூறுவதினால் மனை

வியை உதைத்தோட்டி தாயாரைப் போற்ற வேண்டுமென்று சொல்வதாக ஒருவரும் நினைக்கக் கூடாது. பத்தினியையும் பெற்றவளையும் போற்றவேண்டியதவசியமே இருவரும் ஒருவனுக்கு இன்றியமையாதவர்கள் என்பதை உணர வேண்டும். அங்ஙனம் உணர்பவனே உத்தமன். அங்ஙனமே ஆங்கிலத்தையும் தன் தாய்மொழியையும் ஒரு நிறையில் வைத்தேனும் போற்றுபவனே உண்மைத் தேசாபிமானி; சிறந்த பாஷாபிமானி.

ஆகவின் சகோதரர்களே! நீங்கள் தமிழைப்பற்றி ஏதேனும் எழுத விரும்பினால் தமிழிலேயே எழுதுங்கள். தமிழரின் பெருமையை உங்களைச் சார்ந்தோர் அறிந்த பின்னரே மற்றவர் அறிதல் வேண்டும். உங்களைப்பற்றி நீங்கள் ஆங்கிலத்தில் எழுதினால் யாதொரு பயனுமில்லை. இங்ஙனம் செய்வதால் அந்நியர் உங்களை இகழ்வரேயன்றிப் புகழார். இஃது உண்மையிலும் உண்மை. இதையறிந்து நடப்பீர்களாக.

எந்தெந்த நாடுகளில் அரசர்கள் இருக்கிறார்கள்?

நாட்டின் பெயர்.		அரசர் பெயர்.
நேபாளம்	....	மகாராஜா வீர விக்ரமர்
பூட்டான்	....	மகாராஜா ஜே. வாங்சுக்
ஆப்கானிஸ்தானம்	....	ஜாஹிர் ஷா
ஈரான்	....	ஷா ரிஜா பஹலாவி
எகிப்து	....	பரூக் I
ஈராக்	....	காஜி இபுன் பெய் ஸல்
ஹெட்ஜாஸ்	....	அப்துல்-அஜீஸ்-அல்-சவுத்
சையாம்	....	ஆனந்த மஹிதோள்
சௌதி அரேபியா	....	பெய்ஸல்—அல்—ஸவுத்
ட்ரான்ஸ் ஜார்டன்	....	எமிர் அப்துல்லா
ஜப்பான்	....	மிகாடோ ஹிரோ ஹிடோ
மஞ்சூகோ	....	காங்டேஹ்
பெல்ஜியம்	....	லியோபார்ட் III
பல்கேரியா	....	போரிஸ் III
டென்மார்க்	....	கிறிஸ்தியன் X
கிரேட் பிரிட்டன்	....	ஜார்ஜ் VI
கிரீஸ்	....	ஜார்ஜ் II
ஹாலந்து	....	ராணி வில்ஹெல்மினு
இத்தலி	....	விக்டர் எம் மானுயுவல் III
மொராக்கோ	....	சுல்தான் சித்தி முகம்மது
நார்வே	....	ஹா கோன் VII
ஸ்வீடன்	....	கஸ்டப் V
ருமேனியா	....	காரோல் II

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

—"ஆசிரமவாசி"

உலகமென்பது உயர்ந்தோர் மாட்டு’ என்பது முதுமொழி. அதன்படி உலகின் பெருமை அதில் பிறந்த உன்னத மக்களின் பெருமையைப் பொறுத்தது. ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு துறைகளில் பல மகான்கள் தோன்றியிருக்கின்றனர். ஏனைய நாடுகளைக் கட்டிலும் இந்திய நாடு ஆத்மஞானத் துறையில் பல முக்த புருஷர்களைக் காலத்துக்குக் காலம் உலகுக்கு ஈன்று அளித்திருக்கின்றது. அவர்களின் ஞான ஒளியானது மங்கா விளக்குப் போன்று நிலைத்து நின்று உயர் வாழ்வை விரும்பும் மக்களுக்கு உய்யும் வழியைக் காட்டுகின்றது. அத்தகைய பரம ஹம்ஸ தேவர் தற்காலத்து உதய தாரகை போன்று விளங்குகின்றனர். அவருடைய 101ம் ஆண்டு ஜனன விழா நிகழும் பங்குனி மாதம் 1ந் தேதி உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படும். அத்தருணம் அவருடைய ஞாபகார்த்தமாகப் பலர் அளிக்கும் உபசாரங்களோடு இக்கட்டுரையையும் எமது மனமார்ந்த அன்புக் கொடையாக அவரின் பூஜ்ய பாதங்களுக்கு அர்ப்பணஞ் செய்கின்றோம்.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் நிறுவப்பட்டது. இரண்டு நூற்றாண்டுகளுக்குள் கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பெனியார் இந்திய அரசாங்கத்தைக் கைப்பற்றினர். இந்துக்களும் முஸ்லீம்களும் பெரிய மொகலாய ஆட்சி சீர் குலைந்து அதற்குப் பதிலாக ஆங்கில ஆட்சி நிறுவப்பட்டிருப்பதைப் பார்த்து வெட்கித் தலை குனிந்தனர். அழியாப் பொருளாகிய உபநிஷதங்களை உலகுக்கு அளித்து, தனது வியாபாரம், வர்த்தகம் முதலியவற்றால் பண்டைக் காலத்து, ரோம், கிரீஸ், ஈஜிப்து என்னும் நாடுகளுக்குச் செல்வத்தை வழங்கிய இந்திய நாட்டின் நிலை மிகவும் பரிதாபகரமாயிருந்தது. மேல் நாட்டாரின் வெற்றியைப் பற்றி அது அவ்வளவு கவலைப்படவில்லை. ஏனெனில் வெற்றியடையுஞ் சாதியாரைத் தன் வசப்படுத்தும் சக்தி இந்தியாவிடத்திருந்தது. மேல் நாட்டுக் கலைகள் தோன்றி தேசிய கலைகளை மழுங்கச் செய்தன. நவநாகரிகம் இந்தியரின் மனதைக் கவர்ச்சி செய்தது. அதன் பயனாக தம் நாட்டின் கலைப் பொக்கிஷங்களிலுள்ள அபிமானம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று. பல்லாண்டு

களாக இருடிகள், தத்துவ சாஸ்திரிகள், அரசியல் நிபுணர், தேசாபிமானிகள் முதலியோர்களின் முயற்சியால் கட்டப்பட்ட இந்திய நாகரிகம் தன் நன்மதிப்பையிழந்தது.

‘உண்மை ஒன்று; உயர்ந்தோர் கூறும் வகை பல’ என்னும் அடிப்படையைக் கொண்டது இந்து தர்மம். இந்தியரின் சகோதர பாவம் இக்கொள்கையின் பயனேயாகும். ஆத்மனை உணர வேண்டுமென்னும் வேத வாக்கியத்தைக் கொண்டு அத்துறையில் அநேகர் சித்தி பெய்தினர். எல்லா மதங்களும் ஓரே ஆண்டவனிடத்துக்கு இட்டுச் செல்லும் பாதைகள் என்னும் உண்மை இந்தியாவிலேதான் பிறந்தது. ஆண்டவனைத் தேடும் முயற்சியில் ஈடுபடும் பித்தருக்கு இந்தியா தலையாய மரியாதை கொடுத்து வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தேசீய கலைகள் மட்டுமின்றி ஆத்மஞானமும் குன்றுவது போல தோன்றிற்று. மக்காலே பிரபு என்பார் ஒரு புதிய கல்வித் திட்டத்தைத் தயாரித்து இந்தியா மீது சுமத்தினார். இந்துக்களின் சமயாபிமானத்தை உடைத்தெறிவதே அத்திட்டத்தின் நோக்கமாகும். அந்தக் கல்வி வளரவே, மாணவர் மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கைக் கொள்ளலாயினர். மேல் நாட்டுத் தத்துவ சாஸ்திரம் பரவி மக்களின் மனோநிலைமையை மாற்றி விட்டது. போதாக்குறைக்கு கிறிஸ்தவப் பாதிரிமார் இந்து தர்மத்தை ஏளனஞ் செய்தனர். அவற்றின் கொள்கைகள் பொய்யானவை என்று வாதிக்கத் தொடங்கி விட்டார்கள். அந்தக் காலத்தில் பிரபல நீதிபதியாகிய உவில்லியம் எட்வேட் என்பார் ‘இந்நாட்டைக் கிறிஸ்து மயமாக்குவதே நம்முடைய சிறந்த பாதுகாப்பு’ என்று கூறியுள்ளார்.

இந்து தர்மம் தனது பிரபையை இழந்தது. வேதம், உபநிஷதம், கீதை என்பன கூறும் உயர்ந்த போதனைகளுக்குப் பதிலாக மூடக் கொள்கைகள் பரவத் தொடங்கின. அடிமை வாழ்வில் ஈடுபட்டிருந்த காரணத்தினாலே தன்னம்பிக்கை, அஞ்சாமை, சுயேச்சை என்னுங் குணங்களை இந்தியர் இழந்தனர். சாதிபேதம் தலை யெடுத்து தீண்டாமை என்னும் முளையை விதைத்தது. அதன் விளைவின் பயனாக இந்திய ஜன சமூகம் பிளவு பட்டு ஒற்றுமையை இழந்தது. உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியாரை இம்சித்து நடத்தி வந்தனர். சுருங்கச் சொல்லின் இந்திய நாடானது வாழ்வின் உயர்ந்த இலட்சியத்தை மறந்து போயிற்றெனலாம்.

இந்தியாவில் மேல் நாட்டுக்கலையும் கீழ் நாட்டுக்கலையும் ஒருங்கு கலந்தது. அக்கலப்பின் பயனாக ஒரு புதிய உணர்ச்சி யுண்டாயிற்று. அப்பொழுது உலகப் பிரசித்தி பெற்ற ராஜா ராம் மோகன்ராய் தோன்றி பிரம்ம சமாஜம் என்னும் ஒரு புதிய சமய ஸ்தாபனத்தை நிறுவினார். இந்தியரை உற்சாகப் படுத்தி அவருடைய கலைப் பொக்கிஷமாகிய உபநிடதங்களைப் போதிப்பதற்கே இது நிறுவப்பட்டது. அக்காலத்துக் கேற்றவாறு மேல் நாட்டுத் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சிகளையும் வெறுத்துத் தள்ளிவிடாது அங்கீகரித்துக் கொண்டார்.

இதே அவருடைய பெருந்தகைமையையும் விசால புத்தியையுந் தெரிவிக்கின்றது. அவரைப் பின் தொடர்ந்து மஹரிஷி தேவந்திரநாத் தாகூர், கேசவ சந்திரசேனர் முதலியோர் வங்க நாட்டிலும் பிரம்ம சமாஜத்தைத் தொடங்கினர். இந்து சமயத்தைக் காலத்துக் கேற்றவாறு அமைத்து, கிறிஸ்து சமயமும் நாஸ்திகமும் பரவாது இச்சங்கம் தடைப்படுத்தியது. பஞ்சாப் தேசத்தில் தயானந்த சரஸ்வதி தோன்றினர். அவர் ஆரிய சமாஜத்தை நிறுவி அதன் மூலம் இந்து தர்மத்துக்குப் புதுவழி அளித்தார். தென்னாட்டில் பிரமஞான சபை தோன்றி மேற் கூறிய சபைகளைப் போன்று கிறிஸ்துமதம் பரவுவதைத் தடைப்படுத்தி இந்து தர்மத்துக்குப் பேருதவி புரிந்தது. இப்புதிய ஸ்தாபனங்க ளெல்லாம் இந்து தர்மத்தின் சில கொள்கைகளை மட்டுங் கையேற்று ஏனையவற்றைத் தள்ளி விட்டன. இது காரணம் பற்றி ஆரிய தர்மம் சிதைந்து போயிற்றெனலாம். ராஜா ராம் மோஹனராய் மேல் நாட்டுக் கலையுங் கீழ் நாட்டுக் கலையும் இந்தியாவில் ஒன்று கலக்க வேண்டுமென்று செய்த முயற்சியெல்லாம் வீணாய்ப் போயிற்று.

புராதன இந்து தர்மத்துக்குப் புத்துயிரளிக்கவும் பாரதத் தாயின் பேரும் புகழும் உலகெங்கும் பரவவும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் வங்க நாட்டில் காமர்புக்கூரில் அவதரித்தார் அவர் தந்தை குதிராம் சிறந்த ராம பக்தர். தாய் சந்திரமணி கற்பும், கடவுளன்பும், தாராள சிந்தையும் நிறைந்த உத்தமி. அவர்களின் அருந்தவப்புதல்வன் கதாதரன் காமர்புக்கூருக்கு ஒரு கண்ணன் போன்று சொல்லாலும், அழகாலும் அன்பாலும் ஆடவர் மகளிர் அனைவருள்ளத்தையும் தன் வசப்படுத்தி இன்பமாக வளர்ந்தான். எப்போதும் ராமகிருஷ்ணர் கிருஷ்ண லீலாமிர்தங்களைக் பருகுவதும், பள்ளிப் பிள்ளைகளைக் கொண்டு நாடக மாடுவதுமாகிப் படிப்பைச் சிறிதுங் கவனியாதிருந்தான். ஒரு தரம் கண்டதும் கேட்டதும் அவன் மனதில் ஆழப்பதியும். பெண்களுக்கெல்லாம் செல்வப் பிள்ளை; பெண்களும் வியக்கும் பெண் போல் நடிப்பான் கதாதரன். அன்புப் பெருக்கால் அடிக்கடி மெய் மறப்பான். ஒருநாள் நீலவானில் சில நாரைகள் பறக்கும் அழகில் ஆண்டவனைக் கண்டு மெய் மறந்தான். மற்றொரு முறை காமர்புக்கூர் தர்ம தாஸ் செல்விகளுடன் விசாலாட்சி கோயிலுக்குப் போகும் போது கடவுட் கதை சொல்லிக்கொண்டே தன்னுணர்வற்றான்.

தக்ஷிணேஸ்வரத்தில் ராணி ராசமணி என்னும் உத்தமி மகாகாளிக்கு ஒரு அழகிய கோயில் அமைத்தாள். அக்கோயிலில் பூசை செய்யும் பணி கதாதாருக்குக் கிடைத்தது. அவர் பவ தாரணியை உயிருடன் தன்னெதிர் நிற்கும் சக்தியன்னையென்றே நினைத்து அன்பும் ஆர்வக் கனலும் கொழுந்தெறியக் காட்சி தரும்படி கூவிக் கூவி முறையிடுவார். நீ கல்லல்லை; காளி; சக்தி. என்னம்மா! உன்னைக் காணக் காதலானேன்; பிள்ளைக்கிரங்கிவா; அம்மா! அம்மா! என்று அல்லும் பகலும் அலறுவார். கண்டோர் இவன் பித்தன் என்றே ஏசினர். கோயில் அதி

பரான மதுர நாதர் மட்டும் இவருடைய பக்குவத்தை யறிந்து போற்றினார். வர வர அன்பு முற்றி தன்னையும் அன்னை சக்தியையும் ஒன்றென வுணர்ந்து தனக்கு நிவேதித்து, மலர் தூவிக்கொண்டு பிறகு காளிக்குப் படைப்பார். "அம்மா சாப்பிடு" என்று அருமையாக ஊட்டுவார்.

அருகில் பூனைவந்தால் 'நீ அம்மா; சாப்பிடு' என்று அதற்கும் ஊட்டுவார். 'அம்மா எங்கும் நீ யுள்ளாய்; என்னுள்ளும் உள்ளாய்! இனித் தாங்கேன் வா வா' என்று ஒரு நாள் அலறியலுத்து 'உன்னைக் காணாத இவ்வீணுடல் வாழ்க்கை வேண்டேன்' என்று எதிரிலிருக்கும் ஒரு வாளைச் சட்டென்றெடுத்து தன்னை வெட்டிக் கொள்ளத் துணிந்தார். உடனே எங்கும் ஒளிமயம்; எல்லாம் சக்திமயம்; ப்ரஹ்மாகாரி உள்ளே எழுந்தாள்; ஆனந்தம்; ஆனந்தம்! எல்லாம் சக்திமயம். இக்காட்சிப் பரவசத்துடன் ராம கிருஷ்ணர் சக்தி மைந்தனானார். தற்போதம் முற்று மிழந்து காளியன் பிற்கரைந்த இம்மகானை பலர் பித்தனென்றே இன்னும் இகழ்ந்தனர்.

ஒருகாற்கட்டுக் கட்டினால் இப்பித்துத் தணியு மென்று தாயார் பெண் பேசினாள். ராம கிருஷ்ணரே சாரதா தேவியைத் தேர்ந்தெடுக்கவே, திருமணம் முடிந்தது. அவர் வாழ்க்கைத் துணை சிறந்த உத்தமி. தன்கணவனின் உயர்ந்த நோக்கத்தை யறிந்து அவருக்கு அநுதாபங் காட்டினாள். தனக்கு உலக வாழ்வில் விருப்பில்லை யென்றும், அவருக்குப் பணி புரிந்து அவரிடம் உபதேசம் பெறுவதே தனது விருப்பம் என்றும் எடுத்துக் கூறினாள். புத்த பகவானுக்குத் தன் மனைவியும் மகனும் எங்ஙனம் பிரதம சீடர்களானார்களோ அதே போன்று சாரதாமணியும் ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய சிரேஷ்ட சிஷ்யையாய் விளங்கினாள். பரம ஹம்ஸரும் மனைவியின் சம்மதத்துடன் தனது வாழ்வின் இலட்சியத்தின் முட்டுக் கட்டையை நீக்கினார்.

இப்படி வைராக்கியமும், சமதர்சனமும், பற்றின்மையும், அன்புக் கனலும் பெருகி முற்றும் தற்போதமிழந்த நிலையில் பைரவி பிராஹ்மணி என்னும் தாந்திரிக வைணவத்துறவி தோன்றினாள். இருவருக்கும் யசோதை கண்ணன் உறவு ஏற்பட்டது. ஸ்ரீ ராம கிருஷ்ணரைத் தன் குழந்தை போலக் கருதி ஊட்டி அஷ்டாங்க யோகமும், மகாசக்திக் கனலை வளர்க்கும் திவ்விய தாந்திரிக சாதனமும் பயிற்றினாள். அதன் பின்னர் இந்து தர்மத்தில் கூறப்பட்டுள்ள சாந்த, தாசிய, வற்சல்லிய, மதுரபாவனை போன்ற சாதனைகளைப் பயின்றார்.

பக்தி தியானத்தால் துவைத சித்தியடைந்த சமயம் தோதாபுரி என்ற பாசற்ற அத்வைத வைராகி, பரம ஹம்ஸருக்கு முறைப்படி சந்நியாசங் கொடுத்து 'உள்ளது ஒரு பொருள்; அது உன் உள்ளத் துள்ளது: அது ஆத்மா; அதுவே நீ; அதுவே எல்லாம்; அதுவேயாகி நில்' என்று அத்வைத ஞான முரைத்து நிர்விகல்ப சமாதி கூட்டினார். பிறகு பலமதானுபவங்களைப் பெறுவதற்கு விருப்புண்டாயிற்று. கோவிந்தராய் என்னும் இஸ்லாமியரிடம் இஸ்லாம் தத்துவங் கற்று இஸ்லாமியரைப் போலவே நடித்தார். சம்புச்சரான் மல்லிக்

என்னும் பிரம்மசமாஜியிடம் பைபிள் கேட்டுருகி கிறிஸ்து தர்சனம் பெற்றார்.

ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய வாழ்விலிருந்து நாம் படிக்கக் கூடிய கற்பனைகளைச் சற்று ஆராய்வோம். அவர் வசித்த இடம் நவ நாகரிகம் நிறைந்த கல்கத்தா நகரமாகும். அவரைப் பார்க்கப் போனவர்களுள் அநேகர் சர்வகலாசாலைப் பட்டதாரிகள். பார்வைக்குச் சாதாரண மனிதன் போன்றிருந்தாலும், அவருடைய வார்த்தைகள் கல்விமான்களையும் கவர்ச்சி கொண்டது. ஸ்ரீ விவேகானந்தர் முதல் முறை பரமஹம்ஸரைக் கண்டபோது "ஐயா, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீரா" என்று ஆவலெழக் கேட்டார். "ஆம்; அப்பனே, உன்னை என் முன் காண்பது போன்றே கடவுளையுங் காண்கிறேன்" என்றார் பகவான். "காட்ட முடியுமா" என்றான் நரேன் என்கிற விவேகானந்தர். முடியும் என்றார் பகவான். இவ்வார்த்தைகள் ஸ்ரீ விவேகாநந்தருக்குத் திருப்தியை அளித்தது. ஏனெனில் அவை அதிகாரமுள்ளனவாயும், உயிருக்கு உறுதி பயப்பனவாயுமிருந்தன. கிறிஸ்து நாதர், புத்தர் பகவான், முகம்மது நபி முதலியோர் வார்த்தையால் அல்லது சைகையால் அதியற்புதங்களைச் செய்ததை நாம் வாசித்திருக்கின்றோம். அதே போன்று இம்மஹானுபாவரும் "ஏனைய பொருள்களைப் போன்று சமய அநுபவத்தையும்" கொடுக்கல் வாங்கல் செய்யலாம் என்பதைப் பிரத்தியக்ஷமாகக் காண்பித்திருக்கிறார். சமயமென்பது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமிடையேயுள்ள சம்பந்தம். கடவுளைக் கண்ணாரக் கண்டு அதனோடு இரண்டறக் கலத்தலே சமயங்களின் இலட்சியம். கல்வி கேள்விகளினால் மட்டும் ஆண்டவனை அடைய முடியாது. ஏனெனில் அவை நமது அநுபவத்தைப் போன்று திருப்தியளிக்க மாட்டாது. அந்த இலட்சியத்தை அடைவதற்கு முதல் வழி தியாகமேயாம். இருளும் ஒளியும், மானிட வாழ்வும் தெய்வீக வாழ்வும் ஒரு வழிச் செல்லாது என்பது குருதேவர் அருள் வாக்கு.

சமயங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவல்ல; அவை ஒரே தர்மத்தின் பலவகைத் தோற்றங்கள். கால தேச வர்த்தமானத்துக்கியைந்து அவைவேறுபட்டுத் தோன்றுகின்றன. சதா காலமும் நிலை பெற்றிருப்பது ஒரு தர்மமே; மனித சுபாவத்துக்குத் தக்கவாறும் சமயம் மாறுபடும். ஒருவனிடத்துச் சிரமமாக வேலை செய்யும் ஆற்றலிருப்பின் அவன் சமயம், வேலை மயமாகவே தோன்றுகின்றது. மற்றொருவனிடத்து பக்தி சிரத்தையாக மாறுகின்றது. மூன்றாவது மனிதனிடத்து யோகம், ஞானம் என்பனவாய் காணப்படுகிறது. ஆகையால் நாம் அனைவரும் எல்லா மதத்துக்கும் சன்மானம் அளித்தல் வேண்டும். ஒருவனுடைய நம்பிக்கையையும் மாற்ற முயலாதே; இயலுமானால் அவன் உயர் வழிச் செல்வதற்கு உதவி புரி. உதவி செய்யாவிடினும் அவன் இருக்கும் நிலையை மட்டும் அழிக்க முயல வேண்டாம். சீடனின் நிலைக்குத் தக்கவாம் உபதேசமளிக்க வல்லவனே சற்குரு. ஒரே

சமயத்தில் ஆயிரம் சீடர்களுக்கு ஆயிரம் குருமூர்த்தி வடிவமாக மாறக்கூடிய சக்தி அவனிடத்திருத்தல் வேண்டும். தன்னுடைய உயர்ந்த பதவியிலிருந்து கீழே இறங்கி சீடனுடைய ஆத்ம வளர்ச்சிக் கேற்றவாறு தனது ஆத்மனைச் சுருங்கூட்டி அவனின் ஆத்மனில் செலுத்தி அவன் கண்ணால் பார்த்து, அவன் செவியால் கேட்டு, அவன் மனதின் மூலம் உணர வேண்டும். கூடு விட்டுக் கூடு பாய்பவன் போல தனது ஆத்மாவைச் சீடனின் ஆத்மாவிற் செலுத்தி அதன் மூலம் சீடன் தனது கருவி காணங்களால் உயர்ந்த ஆத்மீக அனுபவங்களை அடையும்படி செய்பவனே அருட்குரு ஆவன்.

மனிதன் கடவுள் தன்மையை இப் பிறவியிலே அடையலாம் என்பது ஸ்ரீ ராம கிருஷ்ணரின் வாழ்விலிருந்து அறியக் கிடக்கின்றது. அவருடைய நாவானது ஒருவரையும் வைததோ அல்லது கண்டித்ததோ கிடையாது. மனிதரின் வழுக்கள் அவர் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அவர் மாசற்ற மனதில் தீமையைப் பற்றிய சிந்தனையே எழுவதில்லை. 'பெண், பொன், சந்தானம் முதலியன அமிர்தத்துவத்தை அளிக்காது; தியாகம் ஒன்றே அதைக் கொடுக்க வல்லது' என்னும் வேத வாக்கியத்துக்கு எடுத்துக் காட்டுப் போன்றவர் பரமஹம்ஸர். 'உள்ளதையெல்லாம் விற்று ஆதுலர்க்கு அளித்து என்னைப் பின் தொடர்' என்று யேசுபிரான் கூறியதும் தியாகத்தின் சிறப்பைக் குறிக்கின்றது.

பரமஹம்ஸர் ஒரு தியாக சொரூபியாக விளங்கினர். பொன், நிலம், மாதர் என்பவற்றின் மீது சற்றேனும் அவருக்கு ஆசையில்லை. பொன்னையும் மண்ணையும் ஒக்கக் கருதி கங்கையில் விடுபவர். பெண்கள் எல்லாம் அவருக்குப் பெற்ற தாய்மார்கள். நவ நாகரிகம் நிறைந்த இவ்வுலகில் இம் மகான் போன்றவர்கள் தோன்ற வேண்டியது அவசியம். பெயர், புகழ், பெண், பொன் முதலியவற்றைத் துரும்பென மதிக்கும் மனிதனும் இக்காலத்திலும் இருக்கலாம் என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிரூபித்திருக்கிருர்.

மக்கள் மீது பேரன்பு பூண்டொழுகுபவர் பரமஹம்ஸர். ஜீவியத்தின் முற்பகுதியை ஆத்மீக வாழ்வில் செலவிட்டார்; பிற்பகுதியைத் தாம் அருந்தவஞ் செய்து சம்பாதித்த அழியாப் பெரு நிதியை 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் முதுமொழிக் கிணங்க, தன்னிடம் வந்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். காலவரம்பின்றி பக்தர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவரும் வந்தவர்கள் எல்லோரையும் உபசரித்து அவர்களுக்கு இயைந்தபடி உபதேசஞ் செய்து வந்தார். ஓய்வின்றிப் பேசிக்கொண்டிருந்தபடியால் அவருக்குக் கண்டமாலை ஏற்பட்டது. அப்பொழுது ஒரு தொண்டர் கொஞ்ச நாளைக்கு மௌனமா யிருப்பது நன்று என்று கூறியதற்கு ஸ்ரீ ராம கிருஷ்ணர் "நான் எனது உடலைக் கவனிப்பதில்லை. ஒரு மனிதனை ஈடேற்றுவதற்காக இருபதினாயிரம் உடலையும் தியாகஞ் செய்யத் தயாராயிருக்கின்றேன்" என்று பதிலளித்திருக்கிருர். இன்னுமொருவர் அவரை நோக்கி 'ஐயா, தாங்கள் மகா யோகி!

தங்கள் மனதைச் சற்று நேரம் இந்த உடம்பிற் செலுத்தினால் இவ் வியாதி நீங்கிப் போகுமே' என்று கூறினார். அதற்கு அவர் 'சிநேகிதரே, நீர் ஒரு புத்திமான் என்று நினைத்திருந்தேன்; ஆனால் உமது வார்த்தைகள் அதற்கு நேர் மாறாக இருக்கின்றன. இந்த மனதை ஆண்டவனுக்கு அர்ப்பணஞ் செய்து விட்டேன். இந்த மலக் கூடமாகிய உடம்பின் பொருட்டு அதை ஆண்டவனிடத்திருந்து நீக்க வேண்டுமென்பது உமது கருத்துப் போலும்' என்று பதிலளித்தார்.

தற்கால உலகத்துக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொண்டு வந்த செய்தியென்ன வென்பதைச் சற்று ஆராய்வோம். "கொள்கைகளைப் பற்றிச் சிறிதும் சிந்திக்க வேண்டாம்; சமய பேதம், வகுப்பு வாதம் முதலியவற்றைப் பொருள் படுத்தாதே; ஒவ்வொரு மனிதனிலும் நிறைந்த தெய்வீக சக்தி யுண்டு; அதை எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் விருத்தி செய்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு நன்மை செய்யும் சக்தி யுண்டாகும். முதன்மையாக அதைச் சம்பாதித்து உன்னுடைய சொந்தமாக்கு; ஒரு சமயத்தவரையுங் கண்டனஞ் செய்யாதே; ஏனெனில் எல்லாச் சமயங்களிலும் கொஞ்சமேனும் நன்மை யுண்டு; உங்களுடைய வாழ்வினால் சமயம் என்பது ஆத்மீக தர்சனம் என்பதை உலகுக்குக் காட்டுமின்; உண்மையை உணர்ந்தவனே அதை நன்றாகப் பிறருக்கு விளக்கக் கூடியவன். அமிர்தத்துவத்தை அடைந்தவனே அதைப் பிறருக்கு அளிக்க அருகனாவன். அவனே மானிடவர்க்கத்துக்குக் குரு மூர்த்தியாய் விளங்குபவன்.

"உள்ளியாம் உலகம் ஆடித் தூசியாம் மாயை ஓதுங்
கிள்ளையாம் மனது தெய்வம் கற்பகம் கேட்ட தீயும்
உற்றுறவன் புந்தூய வுறுதியு மறிவுங் கொண்டு
கள்ள மற்றழுது கூவிற் கடவுளைக் காணலாமே.
நீருடன் பனியும் போல் வான் நீளுயிர்க்குயிராய் நின்றான்
நாருடன் மணியைப் போல நவில் மத மனைத்து முள்ளான்
காரிருள் மாயை மோகக் கட்டிலா வுளத்தினின்பப்
பேரொளிப் பிழம்பாய்க் காண்பான் பேசரும் பிரம்மந்தானே"

என்பது பரம ஹம்ஸோப தேச சாரம்.

-: ஸர்வ தேச சங்கம் :-

—வ. அ. தியாகராஜன் M. A.

நமது செவியில் இரண்டு ஒலிகள் கேட்கின்றன. ஒன்று தீயணைக்கும் மோட்டார் வண்டியின் மணியொலியுடனும், பீரங்கிகளின் இடிமுழக்கத்துடனும், பூகம்ப அதிர்ச்சியுடனும் 'என்னை முதலில் கவனி' என்று கர்ச்சிக்கிறது. இது தான் நிகழ் காலத்தின் வாக்கு. மற்றொன்று மலைமேல் ஆடுகள் மேய்கிற தருணத்தில் அவற்றின் கழுத்திலிருக்கும் மணிகள் ஆடும்போது வரும் மெல்லிய சப்தத்துடனும், காற்றில் மிதந்து வரும் குழலோசையுடனும் கேட்கிறது. இதுதான் எதிர்காலத்தின் வாக்கு. நாம் இப்பொழுது நிகழ் காலத்தில் அத்தியாவசியமாய்ச் செய்ய வேண்டிய கடமைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, வருங் காலத்தின் மெல்லிய குரலைச் சற்று கவனிப்போம். இப்படிச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமானது என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒருவன் தெருவில் வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவனுக்கே, தான் எங்கே போகிறான் என்பது தெரியாவிட்டால், அவன் வேகமாய்ப் போகிறான் என்பதை மட்டும் கவனித்தால் போதுமா? அதனால் நாம் நிகழ்காலத்தில் செய்யும் காரியங்கள் நிகழ்காலத்தின் கூக்குரலை மட்டும் கவனியாமல் அவை எதிர் காலத்தில் எவ்வளவு மட்டில் நமக்கு ஒத்தாசையாய் இருக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தக் கருத்து தனி மனிதனுடைய வாழ்க்கைக்கு மட்டும் பொருந்தியதல்ல. இஃது உலக வாழ்க்கைக்கே பொருந்தியதாகும்.

உலகத்தின் பல இடங்களில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. ஏன் யுத்தம் நடக்கிறது, அல்லது இதற்கெல்லாம் யார் காரணம் என்பதைப் பற்றி நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியதில்லை. ஆனால் யுத்தத்திற்குப் பிறகு உலகம் எப்படி இருக்க வேண்டும்; அதற்கு இப்பொழுதிருந்தே நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் கவனிப்போம். சென்ற யுத்தம் நடந்த போது ஐரோப்பிய வல்லரசுகள் தாங்கள் யுத்தத்தைத் தடுக்க யுத்தம் செய்வதாகவும், சிறிய நாடுகளின் சுதந்திரத்தைக் காப்பதற்குப் போர் புரிவதாகவும் சொல்லிக் கொண்டன. ஒருவனுக்கு ஒருகாலில் பாம்பு கடித்து, மற்றொரு காலிலும் பாம்பு கடித்தால் அவன் மறுபடியும் சரியாய் விடுவான் என்று நினைத்து அதன் பேரில நடப்பது போல் ஆயிற்று. ஒரு யுத்தம்

மறு யுத்தத்திற்கே கொண்டு வந்து விட்டு விட்டது. சமாதான தேவதை இன்னும் உலகத்தில் வரவில்லை. சென்ற யுத்தத்தின் பிறகு புதிய உலகம் விடிந்து விட்டது என்று எண்ணினவர்கள் தாங்கள் நிஜமான உதயத்தைப் பார்க்கவில்லை யென்றும் பொய் உதயத்தைப் பார்த்து அதை நிஜமான விடியற்காலை என்று நினைத்து ஏமாந்து போய் விட்டார்கள் என்றும் இப்பொழுது உணருகிறார்கள். வெள்ளி முளைத்ததே யொழிய சூரியன் உதிக்கவில்லை. மனிதனிலும் மனித சமூகத்திலும் நம்பிக்கை யுள்ளவர்கள் இருட்டுக்குப் பின்னால் மறுபடியும் வெளிச்சம் வரும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். யுத்தமில்லாத உலகம் இன்னும் 50 அல்லது 100 வருஷங்களில் வரலாம். அந்தக்காலத்தில் சர்வ தேச சங்கத்தின் தோற்றத்தையும் மறைதலையும் வெள்ளி முளைத்தற்கு ஒப்பிடலாம். நாம் இப்பொழுது சர்வ தேச சங்கம் என்ன செய்திருக்கிறது என்பதையும் என்ன செய்ய முடியவில்லை என்பதையும் கவனிப்போம். பிறகு ஏன் இதனால் அதிகமான நன்மை விளையவில்லை என்பதைக் கவனிப்போம். கடைசியாக ஒரு சர்வதேச சங்கம் சரியாய் வேலை செய்ய வேண்டுமானால் என்னென்ன தேவை என்பதையும் கவனிப்போம்.

1918ல் அமெரிக்கா தேசத்துத் தலைவனா யிருந்த ஊட்ரோ வில்சன் என்பவர் இனிமேல் யுத்தமில்லாமல் தடுப்பதற்கு ஒரு சங்கத்தை ஏற்படுத்த வேண்டு மென்றும், அதில் எல்லா தேசங்களும் அங்கத்தினராய் இருக்க வேண்டு மென்றும், இவர்களுக்குள் உண்டாகும் சச்சரவுகளைச் சமாதான முறையிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டு மென்றும் நினைத்தார். சமாதான தேவதையின் கோயிலுக்கு ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜினீவா என்னும் நகரத்தில் 1920ம் வருஷம் ஜனவரி மாதம் 16ந்தேதி அஸ்திவாரம் போடுவதற்கு முதல் கூட்டம் திரண்டது. இந்தக் கோயிலுக்கு 18 தேசங்கள் ஆதியிலிருந்து தர்மகர்த்தர்கள் இருந்தார்கள். 1935ல் 58 தேசங்கள் காணிக்கை செலுத்திக் கொண்டும், வருஷத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை தம்முடைய பிரதிநிதிகளை அனுப்பிக் கொண்டும் இருந்தன. ஆனால் இதற்கு முக்கிய பூசாரியாய் இருந்த அமெரிக்கா தேசத்துத் தலைவர் தன் தேசத்தால் மறுக்கப்பட்டு முதலிலிருந்தே வெளியே நின்று விட்டார். இந்தச் சமாதானக் கோயிலுக்கு இன்னொரு இடையூறும் இருந்தது. ருஷியாவும் ஜெர்மனியும் முதலிலிருந்தே தீண்டாமையால் பாதிக்கப்பட்டு ஆலயப் பிரவேசம் செய்வதற்கு உரிமை இல்லாதவர்களாய் மறுக்கப் பட்டார்கள். ஆனால் கோயிலில் வருஷம் தவறாமல் உற்சவங்கள் மாத்திரம் நடந்து வந்தன. சில சிறிய தேசங்கள் இந்தச் சமாதான தேவதையின் முன்னர் தம் கஷ்டங்களை முறை யிட்டன. அதிர்ஷ்டம் இருந்தவர்கள் கஷ்டத்திலிருந்து நிவாரணை செய்யப் பட்டார்கள். நாளாவட்டத்தில் கோயிலுக்கு வருபவர்கள் குறைந்தார்கள். காணிக்கைகளும் குறைந்தன. இப்பொழுது சமாதான தேவதையின் கோயில் எங்கே இருக்கிறது என்று பலர் கேட்கிறார்கள்.

நாம் இப்பொழுது நம்முடைய உபமானத்தை விட்டு விட்டு வாசக

முறையில் கவனிப்போம். சர்வதேச சங்கம் 14 வருஷங்களாய் இருந்திருக்கிறது. இந்த 14 வருஷங்களில் உலகத்தில் நேர்ந்த அரசாங்கச் சிக்கல்களையும் பொருளாதாரச் சிக்கல்களையும் இது கவனித்து வந்திருக்கிறது. உலகத்திலுள்ள தொழிலாளர்களுக்காக மிகவும் உழைத்து வந்திருக்கிறது. இந்தச் சங்கம் அரசாங்க விஷயங்களில் அதிகமாய் உபயோகமாய் இரா விட்டாலும், இதனுடைய புஸ்தகங்களினாலும், பிரசங்கங்களினாலும் உலகம் ஒன்றே என்பதை இது பொது மக்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. இதுவுமில்லாமல், பின்லாண்டுக்கும் ஸ்வீடனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்ட போதும், 1925 வருஷத்தில் க்ரீஸ் தேசத்துக்கும் பல்கேரியா தேசத்துக்கும் யுத்தம் ஏற்பட்டபோதும், துருக்கிக்கும் பிரான்சுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்ட போதும் இந்தச் சங்கம் சமாதானத்தை உண்டாக்கி வைத்தது. ஆனால் இவை யெல்லாம் சில்லறை தேசங்களுக்கிடையே நடந்த மனஸ்தாபங்கள். ஒரு பெரிய தேசத்துக்கும் ஒரு சிறிய தேசத்துக்கும் சண்டை நேர்ந்த போது சர்வதேச சங்கம் ஒன்றும் செய்ய முடியவில்லை. இத்தலிக்கும் க்ரீஸ் தேசத்துக்கும் 1923-ம் வருஷம் யுத்தம் நடந்தது. இத்தலி க்ரேக்க தீவான கார்ப்யு என்பதை அபகரித்த போதும் 1937-ம் வருஷம் இத்தலி அபிசீனியாவைப் படையெடுத்த போதும் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்து வரும் யுத்தத்திலும் இந்தச் சங்கம் ஒன்றுமே செய்ய முடியாமற் போய் விட்டது. இப்போது இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் நடக்கும் யுத்தத்தில் இந்தச் சங்கத்தைப்பற்றி நினைப்பவர் கூட கிடையாது. இதற்குக் காரணம் என்ன என்பதை இப்போது கவனிப்போம்.

சர்வதேச சங்கம் சென்ற யுத்தத்தின் பயனாய் வந்தது. இதில் முதலில் இருந்தே சென்ற யுத்தத்தில் ஜெயித்த வல்லரசுகள் முக்கியமான அங்கத்தினராய் இருந்தார்கள். இவர்களுக்கு இரண்டு கருத்துக்கள் இருந்தன. முதலாவது யுத்தத்தால் உண்டான பலன்களை முழுதும் அடைய வேண்டும். இரண்டாவது இந்தச் சங்கத்தால் தோல்வியடைந்த தேசங்களைத் தலையெடுக்க வொட்டாமல் கட்டிப்போட வேண்டும். இந்தக் கருத்துடன் ருஷியாவும் ஜெர்மனியும் ஒதுக்கி வைக்கப்பட்டன. ஆனால் ருஷியாவிலிருந்து பிரிக்கப்பட்ட மூன்று சிறிய தேசங்களும் ஜெர்மனியிலிருந்து பிரிக்கப்பட்ட ஏழு புது அரசாங்கங்களும் இதில் அங்கத்தினராய்ச் சேர்க்கப்பட்டார்கள். அதனால் இந்தச் சங்கம் உலகத்தின் அமைதியை முன்னிடாமல் வெற்றியையே முன்னிட்டது. அதனால்தான் பின்னர் ருஷியா இதன் அங்கத்தினரில் ஒன்றாய்ச் சேர்ந்த போது ருஷியப் பிரதிநிதி லித்வினுப் 'எல்லா தேசங்களும் உடனே தங்களுடைய படைகளைக் கலைத்து விட வேண்டும்; சண்டைக் கப்பல்களையும் யுத்த விமானங்களையும் அழித்து விட வேண்டும்' என்றும் அப்பொழுது தான் உலகில் அமைதி உண்டாகு மென்றும் சொன்ன போது இவன் சொன்னது எல்லாரையும் திடுக்கிடச் செய்ததே யொழிய, இத்தவிதமான முழு அமைதித் திட்டத்தில் ஒருவருக்காவது நம்பிக்கையில்லை. இந்தச் சங்கத்திலிருந்த

தேசங்கள் ஒவ்வொன்றும் தமக்குத் தாமே சொல்லிக்கொண்டது என்னவென்றால், "பிறர் நம்மைப் படையெடுத்தால் உலகனைத்தும் சேர்ந்து நம்மைக் காப்பாற்ற வேண்டும் ஆனால் நாம் பிறதேசங்களைப் படையெடுத்து அவற்றை அடக்கியாளச் சக்தியுள்ளவர்களாய் இருப்போமானால் அதை யாரும் தடுக்கக் கூடாது' என்பதாகும். ஒவ்வொரு தேசமும் தன்னுடைய வில்லுக்கு இரண்டு நாண்கள் இருப்பதாக எண்ணி நடந்து வந்தன. இவ்விரண்டு நாண்களுக்குமிடையில் சில சமயங்களில் அம்பு அகப்பட்டுக்கொண்டு முன்னே போகாமல் கீழே விழுந்து விட்டதற்குக் காரணம் இதுவே. இன்னொரு விஷயம் இப்பொழுது கவனிக்கத் தக்கது. அது என்னவென்றால் சில அரசாங்கங்கள் எங்களுக்குச் சமாதானம் வேண்டும் என்று சொல்லிக்கொண்டே யுத்த தளவாடங்களை அதிகப்படுத்திக்கொண்டு வந்தன. அவைகளுடைய சொல்லுக்கும் செய்கைக்கும் ஒற்றுமை இல்லாமல் போய் விட்டது. மற்ற சில தேசங்கள் இரை தின்ற பாம்பைப்போல் 'எங்களுக்கும் சமாதானம் வேண்டும்' என்று கூக்குரலிட்டன. இதற்கு அர்த்தம் என்ன "நாங்கள் ஜாஸ்தியாய்த் தின்றுவிட்டிருக்கிறோம். மறுபடியும் இரை தேடும்வரை எங்களைச் சும்மா விட்டு விடுங்கள்" என்பதுதான். இதனால் உண்டான பலன் என்ன? ஒருவரையொருவர் நம்ப முடியாமல் போய் விட்டது. "சிலரை எப்போதும் ஏமாற்றலாம்; பலரை சில காலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எப்போதுமே ஏமாற்ற முடியாது."

சர்வ தேச சங்கம் ஏன் அதிகமாய்ச் செய்ய முடியவில்லை என்பது இப்போது விளங்கும். இந்தச் சங்கம் உலகத்திலுள்ள முக்கிய அரசாங்கங்களின் கூட்டம். ஒவ்வொரு அரசாங்கத்திலும் சில நல்ல குணங்களும் சில பிழைகளும் இருந்தன. சில்லரையையெல்லாம் ஒன்று சேர்த்து எத்தனை ரூபாய் இருக்கிறது என்று கணக்குப் போடுவோமானால், ரூபாய் எப்படி சில்லரையின் தொகையை விட அதிகமாகும்? நம்முடைய கணக்கில் ஏதோ தப்பு ஏற்பட்டு இருக்கிறது. மறுபடியும் கூட்டல் போட வேண்டும்.

சர்வதேச சங்கம் எதனால் சேர்க்கப்பட்டு இருக்கிறது? பல தேசங்களால். இந்தத் தேசங்கள் எவைகளால் சேர்க்கப்பட்டிருக்கின்றன? தனி மனிதர்களால். தனி மனிதன் எதைக் கோருகிறான்? பிறர் மேல் அதிகாரத்தைக் கோருகிறான். ஏனென்றால் அப்போதுதான் அவனுக்கு ஒரு விதமான கம்பீரமும், தன்னம்பிக்கையும், தான் வீணில் வாழவில்லை என்னும் எண்ணமும் வருகின்றன. தனிமனிதன் பிறரை அடக்கியாள விரும்புகிறான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒவ்வொருவனும் இப்படிச் செய்வானானால் ஒரு தேசத்தில் அமைதி இராது. அதனால்தான் அரசாங்கம் என்பது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கம் என்ன சொல்கிறது? 'நீங்கள் உங்களுக்குள்ளே சண்டை போடாதீர்கள். ஆனால் உங்களுடைய சண்டை போடும் திறமையை எல்லாம் ஒன்று சேர்த்து என்னிடம் கொடுத்து விடுங்கள். இதைக் கொண்டு வெளிதேசத்துடன் போர் புரிந்து வெளி தேசத்தை நாம்

எல்லோருமே ஆளலாம். அப்போது நமக்கு எல்லாருக்கும் கௌரவம் வரும்' என்கிறது. நாம் இப்போது இதை மானஸிக திருஷ்டி மூலமாய்க் கவனித்தோம். சரித்திர மூலமாய்க் கவனிப்போம். புதிய உலகம் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்தே ஐரோப்பிய வல்லரசுகள், தம்தேசங்களிலிருந்த உள் நாட்டுச் சண்டைகளை நிறுத்திக் கொண்டு, வெளி நாடுகளைப் பிடித்து ஆள்வதற்காகச் சண்டை போட்டுவந்தன. ஆனால் சில நூற்றாண்டுகளுக்கு முன் சிலநாடுகள் தான் இந்தக் கொள்கையில் இறங்கின. அதன் பலனாக இப்போது ஒவ்வொரு நாடும் பிறநாடுகளை அடக்கி யாள உரிமை வேண்டும் என்று கூக்குரலிடுகிறது. சந்திர லோகத்தையும் ஜெயித்தால்தான் இவர்களுக் கெல்லாம் போதுமான அளவு நாடு கிடைக்கும் போலிருக்கிறது. இதனால் என்ன தெரிய வருகிற தென்றால், தனிமனிதனிடத்தில் தப்பு இருக்கும் வரை இந்தத் தப்புகள் இவன் அரசாங்கத்திலும் பிரதிபலிக்கும். இதேமாதிரி ஒவ்வொரு அரசாங்கத்திலும் தோன்றுமானால் உலகம் ஒரு யுகத்திலிருந்து மறு யுகத்திற்குப் போகுமே யொழிய எப்பொழுதும் சாந்தியை அடையாது. ஆனால் தனி மனிதன் தன்னைத் தானே கட்டியாள்வதை விட பெருமையானது எதுவுமில்லை என்று அறிந்து நடப்பானானால், இவனுடைய பெருமையை இவன் அரசாங்கம் விளக்கிக் காட்டும். தனக்குத் தானே அரசனாய் இருப்பவன் பிறரைப் பணியவேண்டிய அவசியமில்லை. பிறரை ஆள வேண்டிய விருப்பமுடையவனும் இருக்க மாட்டான். அப்படிப்பட்டவன் தன்னுடைய அரசாங்கத்துக்கு தூப தீபாராதனைகள் செய்ய மாட்டான். அரசாங்கம் என்ன செய்தாலும் சரி என்று ஒப்புக்கொள்ள மாட்டான். சரியானாலும் தப்பானாலும் தன் தேசமே முதல் என்று நினைக்க மாட்டான். அவ்வளவுக்கவ்வளவு அவன் அரசாங்கத்தின் பலம் தீமை செய்ய முடியாமல் ஒடுங்கி விடும். இதன் பயனாகச் சர்வதேச சங்கம் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் சர்வ மனிதசங்கம் ஏற்படலாம். நமது கணக்கு சரியாய் வந்திருக்கிறதா என்று மறுபடியும் புரட்டிப்பார்ப்போம். நம்முடைய கணக்கு சரியாய் இருந்தால், எதிர் காலத்து மணியோசை நமது செவியில் விழுவதாய் இருந்தால், இந்த ஓசை எங்கே நம்மைக் கூப்பிடுகிறதோ அதையே நாம் கவனிப்போமாக.

சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று அஸெம்ப்ளி; மற்றொன்று கவுன்சில். அஸெம்ப்ளி யானது ஒரு பொதுச் சபை மாதிரி. இது வருஷத்திற்கு ஒரு முறை கூடும். இதில் தற்போது 54 தேசங்கள் அங்கத்தினர்களா யிருக்கின்றன. கவுன்சில் என்பது நிருவாக சபை மாதிரி. இது வருஷத்திற்கு மூன்று முறை கூடும். இதில் கிரேட் பிரிட்டனும் பிரான்சும் நிரந்தர அங்கத்தினர்கள். இவர்கள் தவிர, 12 தேச அங்கத்தினர்கள் அவ்வப் பொழுது தெரிந்தெடுக்கப் படுகிறார்கள்.

மனிதனின் முன்னேற்றத்திற்கு முக்கிய கருவியாக இருப்பது எது?

மு. துரைசாமி

மனிதன் நாலு பேருடைய கூட்டுறவின் மத்தியில்தான் வாழ விரும்புகிறான். இதனாலேயே "மனிதன் ஒரு சமுதாயப் பிராணி" என்று பெரியோர்கள் சொல்வது வழக்கம். எனவே ஒரு நாகரிகம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை அளந்து பார்க்க வேண்டுமானால் அந்த நாகரிகத்தின் கீழ் இருக்கும் சமுதாயம் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதைக் கொண்டு தான் பார்க்க வேண்டும். வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமானால் பலருடைய ஒத்துழைப்பின் பேரில் அநேக காரியங்கள் நடைபெற வேண்டி இருக்கிறது. அதாவது, சமுதாயத்திலுள்ள அத்தனை பேரும் சேர்ந்து ஒருமுகமாகக் காரியங்களைச் செய்வதைப் பொறுத்தே வாழ்க்கைப் போராட்டத்தின் வெற்றியிருக்கிறது. மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உழைக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் வாழ்க்கையில் உயர்வை அடைகிறான்; சமுதாயத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்தவனாகிறான். தன்னுடைய உழைப்புச் சக்தியானது அதிக பலனைத் தர வேண்டுமென்பதற்காக மனிதன் இயற்கையின் உதவியை நாடுகிறான். அதாவது, இயற்கைச் சக்திகளை தன் சக்தியோடு பிணைத்துக் கொள்கிறான். ஆதி காலத்திலிருந்தே மனித வாழ்க்கையானது இயற்கைச் சக்திகளின் உதவி கொண்டு தான் நடைபெற்று வந்திருக்கிறது. இந்த இயற்கைச் சக்திகளின் அந்தரங்கமென்ன, இவற்றை எவ்வாறு உபயோகித்துக் கொள்ளலாம், என்பன போன்ற ஆராய்ச்சி தான் விஞ்ஞானம். எனவே தற்போது மானிட சமுதாயத்தின் வளர்ச்சியானது விஞ்ஞான வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் தற்காலத்துச் சமுதாய அமைப்பையும் அதன் வளர்ச்சியையும் விஞ்ஞானக் கண் கொண்டுதான் நாம் பார்க்க வேண்டும்.

முதலில் மனிதன் ஸ்தூல வடிவத்தில் உயிர் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதாவது தேக போஷணை முதலில் இன்றியமையாதது. பிறகு தான் அறிவு வளர்ச்சி, ஆன்ம வளர்ச்சி முதலியன வெல்லாம். ஆகையால் அக வாழ்வுக்கு அடிப்படையாயிருப்பது புற வாழ்க்கையே. அதாவது, பகிரங்கமாகக் கண்ணுக்குத் தெரியும் வெளிச் சாதனங்களை யெல்

லாம் உபயோகப்படுத்திக் கொள்வதன் மூலமாகத் தான் மனிதன் ஆத்ம வளர்ச்சி பெறுகிறான். முதலில் உடலில் உயிர் இருக்க வேண்டும். பிறகு தான் வாழ முடியும். தேக போஷணையோ, அந்த போஷணைக்கு வேண்டிய சாதகங்களோ இல்லாமல் போனால் அந்த தேகத்திற்குள்ளே யிருப்பதாகச் சொல்லப்படுகிற ஆத்மா எப்படி வளர்ச்சி யடையும்? ஆகையால் மனிதன் முதலில் தான் இருப்பதற்குச் சௌகர்யம் செய்து கொள்ள வேண்டும்; பிறகு தான் வாழ்க்கை.

மனிதனுடைய ஆன்ம சக்தி வரம்பு கடந்தது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். வாஸ்தவம். ஆனால் முதலில் மனிதன் தன்னிடத்திலே அளவு கடந்த சக்தி யிருக்கிற தென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாயா? அப்படி அவன் தெரிந்து கொண்ட பின்னர்தான் அந்தச் சக்தியை வளர்க்க முயற்சி செய்வான். அதற்குப் போதிய அவகாசமும் சந்தர்ப்பமும் அவனுக்கு வேண்டும். அந்த அவகாசம் எப்பொழுது கிடைக்கும்? தன்னுடைய அன்றாட ஜீவனத்துக்கு சதா போராடிக் கொண் டிருப்பதினின்று, எப்பொழுது விடுதலை பெறுகிறானோ அப்பொழுதுதான் ஆன்ம வளர்ச்சியைப் பற்றிச் சிந்திப்பதற்கு அவனுக்கு அவகாசமிருக்கும். தற்போதைய விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்தியின் பயனாக மனிதனுக்கு இந்த அவகாசம் கிடைத்திருக்கிறது. ஆனால் அவன் அதைச் சரியாக உபயோகித்துக் கொள்ளுகிறானா என்பதுதான் பிரச்னை.

மனிதனிடத்திலே சிருஷ்டிக்கிற சக்தி யொன்று இருப்பதினாலேதான் அவன் தெய்விகத் தன்மை பொருந்தியவன் என்று சொல்லப்படுகிறது. நவீன இயந்திர சாதனங்கள் அனைத்தும் மனிதனுடைய சிருஷ்டிகள்தான். இந்தச் சாதனங்களைக்கொண்டு மனிதன் முன்னேற்ற மார்க்கத்தில் வெகுதூரம் சென்றிருக்கிறான். இன்னும் மேலே மேலே செல்ல வேண்டுமானால் அந்த இயந்திர சாதனங்களின் துணையைத் தான் நாட வேண்டும். சாதாரணமாக இப்பொழுது என்ன பேசப்படுகிறதென்றால் நமது முன்னோர்களைக் காட்டிலும் நாம் இப்பொழுது கேவலமான ஸ்திதியிலிருக்கிறோம்; வாழ்க்கையின் சுவையை நாம் சரியாக அநுபவிக்கவில்லை; நமது ஆன்ம வளர்ச்சி மிகவும் குன்றிப் போயிருக்கிறது என்று இப்படியெல்லாம் சொல்வது இப்பொழுது ஒரு சம்பிரதாயமாகி விட்டது. இப்படி நாம் தீர்ப்புக் கூறுவதற்கு முன்னர் எந்த அளவுகோல் கொண்டு நமது முன்னோர்களையும் நம்மையும் ஒப்பிட்டு அளந்து பார்க்கிறோம் என்பது முக்கியமானது. அதாவது இன்றைய மனிதன் தன்னுடைய அன்றாட ஜீவனத்திற்காக எவ்வளவு உழைப்பையும் காலத்தையும் செலவிடுகிறான்; முற்காலத்தவர் இதற்காக எவ்வளவு செலவிட்டார்கள் என்பனவற்றைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மனிதனுடைய அன்றாட வாழ்க்கையானது எந்த நிலையில் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலைமைக்கு அளவாகத்தான் அவனுடைய ஆன்ம வளர்ச்சியும் இருக்கும். இன்றைய மனிதனுடைய வாழ்க்கை நிலையை அளந்து பார்த்தோமானால் அவன் தன் ஆன்ம வளர்ச்சிக்கு, முந்திய காலத்து மனிதர்களை விட அதிக

மான சாதனங்களைப் பெற்றிருக்கிறான் என்பது நன்கு புலப்படும். அது மட்டுமல்ல; தற்காலத்து மனிதன் உண்மையிலேயே ஆன்ம ஞான மார்க்கத்தில்—பாரமார்த்திக பாதையில்-அதிக தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறான்.

இன்றைய நாகரீகத்தை நாம் எப்படி மதிப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்றால் ஒரு மனிதன் தன்னுடைய ஜீவனோபாயத்திற்காக ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் உழைக்க வேண்டும் என்ற கேள்விக்கு வரும் பதிலைக்கொண்டு தான் மதிப்பிட வேண்டும். இப்பொழுது மனிதன் தினம் நான்கு மணி நேரம் உழைத்தால் போதும். அவ்வளவு தூரத்திற்கு விஞ்ஞானமும் இயந்திர சாதனங்களும் விருத்தியடைந் திருக்கின்றன. இந்த இயந்திர சாதனங்கள் எல்லோருக்கும் பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் சிருஷ்டிக்கப்பட்டன. ஒரு சிலர் மட்டும் இந்தப் பயனை நுகர, மற்றவர்கள் அந்தப் பயனை சிருஷ்டித்துக் கொடுப்பவர்களாயிருக்கக் கூடாது. இயந்திரங்கள் ஏற்பட்டது ஒரு சிலருடைய நன்மைக்காக மட்டுமல்ல. எல்லோருடைய நன்மைக்குந் தான். இந்த இயந்திரங்களை மனிதர்கள் சரியாக உபயோகப்படுத்திக்கொள்ளவில்லை. இதற்காக இந்த இயந்திரங்களையே குறை கூறலாமா? இஃது ஒரு புறமிருக்கட்டும்.

மனிதனிடத்திலுள்ள ஆன்ம சக்தியை எப்படி அபிவிருத்தி செய்கிறது? ஒரு சிலர் தான், உலகத்தினின்று அப்புறப்பட்டவராய், வனவனாந்திரங்களுக்குச் சென்று துறவி ஆசிரமத்தைக் கைக்கொண்டு தங்களுடைய ஆத்ம அபிவிருத்திக்கான மார்க்கத்தைத் தேடிக்கொள்ள முடியும். எல்லோருக்கும் இந்தச் சௌகரியம் ஏற்படுமா? இவர்கள் சமுதாயத்திலேயே இருந்து கொண்டுதான், சமுதாய வாழ்க்கையை நடத்திக் கொண்டுதான் ஆத்ம அபிவிருத்திக்கான மார்க்கத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். இதை எப்படிச் செய்வது?

ஜனங்களுடைய அவசியமான தேவைகள் பூர்த்தி செய்யப் பட்டும், அவர்களுடைய சமுதாயப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டும் போனால், அவர்களுக்கு, ஆத்ம அபிவிருத்திக்கான அவகாசம் அதிகமாகக் கிடைக்கும். மற்றும், ஆத்ம அபிவிருத்தி செய்து கொள்வதற்கான வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப் பட வேண்டும். இதனை ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்குவோம். எந்த ஒரு தேசமும் முன்னேற்றமடைய வேண்டுமானால், அந்தத் தேசத்து மக்களுக்கு இலவச ஆரம்பக் கல்வி கொடுக்கப்பட வேண்டுவது அவசியமாம். இந்த இலவச வசதியை ஜனங்கள் எப்பொழுது உபயோகித்துக்கொள்வார்கள்? இதற்குச் சாதகமான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் தானே. ஜனங்களிற் பெரும்பாலோர் ஏழைகளாயிருந்து, குழந்தைகள் முதல் எல்லோரும் ஜீவனோபாயத்திற்கான முயற்சிகளிலேயே ஈடுபட்டிருப்பார்களானால், அவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வியை ஏற்படுத்திக் கொடுத்து என்ன பயன்? அப்படியே, ஏழைகளான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக் கூடங்களுக்கு ஏதோ ஒரு கட்டாயத்தினால் அனுப்புகிறார்

களென்று வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தைகளுக்குப் புஸ்தகங்கள் முதலியன வாங்கிக் கொடுக்கப்பண மேது? பணங்கொடுப்பது யார்? இதைப்போல, மனிதன் ஆத்ம வளர்ச்சி பெறுவதற்கு முன்னர், அந்த வளர்ச்சியைப் பெறுவதற்கான வசதிகளையும் சந்தர்ப்பங்களையும் அவனுக்குக் கொடுக்க வேண்டும். இந்த வசதிகளையும் சந்தர்ப்பங்களையும், தற்கால யந்திர சாதனங்கள் மனிதனுக்குத் தந்துதவுகின்றன. ஆகையால், மனிதனுடைய முன்னேற்றத்தை அளந்து காட்டும் கருவி, இயந்திர சாதனந்தான். இந்தச் சாதனம், முன்னேற்றத்தை அளந்து காட்டும் கருவியா யிருப்ப தோடல்லாமல், மனிதனுடைய ஆத்ம வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வதாயு மிருக்கிறது.

தற்கால நாகரிகமானது, ஆன்ம ஞானத்திற்கு வழி காட்டுவதா யில்லை யென்று சொல்வோர் யார்? தற்கால நாகரிகத்தையும் முதலாளித்துவத்தையும் ஒன்று சேர்த்துக் குழப்புகிறவரே. சமுதாயத்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்ய இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இந்த உற்பத்தி, முதலாளித்துவ முறையில் செய்யப்படுவதால், இயந்திரங்களை நாம் குறை கூற முடியுமா? அதாவது முதலாளிகள், தங்கள் சொந்த லாபங் கருதியே பொருளுற்பத்தி செய்கிறார்கள். இதற்காக இயந்திர வகைகளை உபயோகிக்கிறார்கள். எனவே, இந்தப் பொருளுற்பத்தி முறையைத்தான் நாம் கண்டிக்கலாமே தவிர, பொருளுற்பத்தி செய்யும் இயந்திர வகைகளைக் கண்டிக்கலாமா? இயந்திரத்தையும் முதலாளித்துவத்தையும் நாம் ஒன்று சேர்த்துக் குழப்பி விடுகிறோம். நமது எண்ணத்தில் குழப்பம் ஏற்படுவதற்கு இது தான் முக்கிய காரணம். சிறு தொகையினரான தாங்கள் அதிகமான லாபஞ் சம்பாதிக்க வேண்டுமென்பதற்காக பெரும் பாலோரான மக்களை இயந்திரங்களுக்கு அடிமைப்படுத்தி விட்டார்கள். இந்த ஒரு சிலருடைய சுயநலத்தைக் கண்டிப்பதற்குப் பதிலாக, நாம் இயந்திரங்களையே கண்டிக்கலாமா?

சமுதாய முன்னேற்றத்திற்காகவும், ஆத்ம அபிவிருத்திக்காகவுமே மனிதன் இயந்திர சாதனங்களைச் சிருஷ்டித்திருக்கிறான். ஒரு சிலருடைய சுயநலமானது, முன்னேற்றத்திற்கான இந்தச் சாதனங்களை முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையான சாதனங்களாகச் செய்து விடுமானால், அந்த முட்டுக் கட்டையைத்தான் நாம் அகற்ற வேண்டுமேயொழிய, அந்தச் சாதனங்களைத் தூர எறிந்து விடலாமா? அப்படி எறிந்து விடுவோமானால், மானிட சமுதாயம் மறுபடியும் காட்டுமிராண்டி வாழ்க்கைக்குத்தான் செல்ல வேண்டும். நம்மிலே யாரேனும் அப்படிச் செய்ய சம்மதிக்கிறார்களா? ஆகையால், மானிட முன்னேற்றத்திற்கு முக்கிய கருவியா யிருப்பது எது? இயந்திர சாதனங்கள் தான். இவற்றை நாம் அதிகமாக உபயோகித்துக்கொண்டு இடையே ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைகளை அப்புறப் படுத்துவோமாக.

அமெரிக்கா எவ்வாறு சுதந்திரம் பெற்றது?

—கு. கோ. கிருஷ்ணன் B. Sc., (Hons)

இந்நாளில் எந்நாட்டிலும் பொன்னுடையர், சகல கலைகளிலும் சாலப் பயின்றும், தேசங்களுக்கோர் திலகம் போன்றும், பார்ப்போர் தன்னைப் போற்றவும், பின் பற்றவும் சுதந்தரக் கொடியுடன் சீர் பெற்று விளங்குந் தேசமே அமெரிக்கா தேசமாம். ஆனால் 15ம் நூற்றாண்டில் சகல சம்பத்தும் செவ்வனே வாய்க்கப் பெற்று ஊரெல்லாம் பொன் மயமாய்ப் பிரகாசித்துக் கிளிகள் கீதம் பாடவும், குயிலினங்கள் ஆனந்தக் கூத்தாடவும் எங்கும் ஆனந்தம பொங்கி, ஏராளமான மழை பெய்து சகல விளைவுப் பொருட்களும் சாங்கோப சாங்கமாய் விளைந்து ஐரோப்பிய தேசத்து முக்கிய துறைமுகப் பட்டணங்களுக்கு வாசனைத் திரவியங்கள், தேயிலை முதலியவைகளைக் குவியல் குவியலாய்க் கொட்டியனுப்ப அதனால் ஐரோப்பியர் பலர் தேனீக்கள் போல் திரண்டு திசை நோக்கி ஓடிவரவும், சிலர் சீக்கிரம் பணஞ் சேர சுருக்கமான மார்க்கங்களைக் கண்டு பிடிக்கவும் காரணமா யிருந்த தேசம் இந்தியா தேசமாம். இந்தியாவானது அக் காலத்தில் அமரர் தேசமோவென அனைவரும் அதிசயிக்கத்தக்கதாயிருந்த போது அமெரிக்கா தேசம் இவ்வவனியின் கண் தோன்றவே யில்லை. இந்தியாவை நாடி யோடிப் பலவித பொருள்களைத் தேடித் திரட்டித் தங்கள் சுய நாடு சீக்கிரந் திரும்ப ஓர் சுருக்க வழி இந்தியாவுக்குக் கண்டு பிடிக்க முயன்றவர்களில் கிறிஸ்டபர் கொலம்பஸ் என்பவரும் ஒருவர். உலகம் உருண்டையா யிருப்பதால் மேற்கு திசை நோக்கிச் சென்றாலும் இந்தியாவைப் போயடையலாம் என்றெண்ணி ஸ்பெயின் தேசத்திலிருந்து புறப்பட்டுப்போன மார்க்கத்தில் 1492ம் வருடம் அக்டோபர் மாதம் 12ந் தேதி அமெரிக்காவைக் கண்டு இந்தியா தேசம் என்று தவறாக நம்பி அங்கிருந்த ஜனங்களை 'இந்தியர்கள்' என்றழைத்தார். பிறகு அமெரிகோ என்பவரால் அத் தேசத்திற்கு அமெரிக்கா வென்று பெயரிடப்பட்டது. பிற்காலத்தில் அத் தேசத்து ஜனங்கள் 'சிவப்பு இந்தியர்' என்று அழைக்கப்பட்டனர்.

குடியேற்றம்

இங்கிலாந்து தேசத்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் புதிய 'புரோடெஸ்டன்ட்' மதத்தில் சேர்ந்த எல்லாருக்கும் இராஜாங்க மூலமாய்

15, 16ம் நூற்றாண்டுகளில் சகிக்க முடியாத இன்னல்கள் விளைய, இவர்கள் தங்கள் சுய ஊர்களில் உயிருடனிருப்பதைப் பார்க்கிலும் பதிதாய்க் கண்டு பிடித்த தேசத்திலாவது போய் இம்சைக்குத் தப்பி தங்கள் இஷ்டம் போல் தெய்வ வழி பாட்டில் ஈடுபட்டிருப்போமென்று துணிந்து கப்பல்களில் ஏறிச் சென்றனர். இங்கிலாந்தில் 555ம் வருஷம் (இராணி மேரியின் காலத்தில்) லாட்டிமர், ரிட்லி என்ற இரண்டு முக்கிய புது மதப் பெரியார்கள் இராணியின் உத்திரவால் உயிருடன் நெருப்புக் கிரையானார்கள். ஏறக்குறைய 300 ஆண், பெண் குழந்தைகளும் இவ்விதமாக இம்சை செய்யப்பட்டனர். பின்பு ஜேம்ஸ் 1 அரசன் காலத்திலும் அநேக 'ப்யூரிட்டன்ஸ்' என்ற மதக் கூட்டத்தார் சுயேச்சையாய் வாழ வழியில்லாது வெகு கஷ்டப்பட்டனர். தங்கள் மத வழிபாட்டினால் உண்டான இடையூறுகளைத் தாங்க முடியாது இங்கிலாந்திலுள்ள பிளிமத் என்ற முகத்துவாரத்திலிருந்து மேப்ளவர் (May Flower) என்ற பெரிய படகுக் கப்பலில் 1620ம் வருஷம் செப்டம்பர் மாதம் 6ந் தேதி ஏறி அநேகர் அமெரிக்காவுக்குப் புறப்பட்டு வெகு காலத்திற்குப் பின் காட் என்ற முனைக்கருகில் வந்து சேர்ந்தனர். இப்படியே ஹாலண்ட், ஜெர்மனி, பிரான்சு தேசங்களிலிருந்தும் வந்து அமெரிக்காவின் கிழக் கடலோரமாகக் குடியேறி சுயேச்சையுடன் காட்டை நாடாக்கி வாழும் போது பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களைத் தொடர்ந்து வந்து அப்பாகங்களைத் தங்கள் வசமாக்கிக் கொண்டது. அத் தருணத்தில் அங்குக் குடியேறிய டச்சு, ஜெர்மன், ப்யூரிட்டன் முதலிய முக்கிய இனத்தார்கள் வெவ்வேறு தேசங்களிலிருந்து வந்ததாலும், பழக்க வழக்கங்களும் வேற்றுமையாயிருந்ததாலும் ஒற்றுமை சீக்கிரம் ஏற்படவில்லை. இவர்கள் தங்கள் தாய் நாடாகக் கொண்ட தேசத்தை விருத்தி பண்ண எவ்வித உதவியையும் இங்கிலாந்திலிருந்து பெற முடியவில்லை. வெகு தூரத்திலிருந்து சமுத்திரங் கடந்து வந்து தங்கள் வியாபார விருத்திக்காக ஆடக்கியாளும் இங்கிலாந்து தேசத்தின கொடூரத்தைக் கண்டு சகிக்க முடியாது. 'சுதந்திரம்' என்னும் உணர்ச்சி உள்ளத்தே உதிக்க ஒவ்வொரு இனத்தாரிடமும் வேற்றுமை விலகி ஒற்றுமை உயர்ந்தது.

1588-ம் ஆண்டில் ஸ்பெயின் தேசம் எலிஜபெத் இராணியின் காலத்தில் இங்கிலாந்து தேசத்தோடு ஆர்மடா (Spanish Armada) என்ற போர்க் கப்பல் கூட்டத்தைச் சேர்ந்து யுத்தஞ் செய்ய வந்தது. அத் தருணத்தில் இங்கிலாந்தில் பலவித மதக் கொள்கை வேறுபாட்டால் ஜனங்கள் ஒற்றுமையின்றிக் குரோதம் பாராட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் ஸ்பெயின் தேசம் தங்கள் தேசத்தோடு போர் செய்ய வருவதைக் கேட்ட ஒவ்வொருவரிடத்திலும் தேசாபிமானம் பொங்கி, ஒற்றுமை ததும்பி வேற்றுமையை அதமாக்கி வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும் தங்கள் வேலைகளைப் போட்டு விட்டு கத்தி கேடயங்களுடன் 'மாற்றானைக் கிடங்கொடேல்' என்னும் முது மொழியைச் சிரமேற் கொண்டு தங்கள் தேசத்திற்கு வந்த

ஆபத்தைத் தீர்க்க பல பாகங்களிலிருந்து புறப்பட்டு எப்படி ஒற்றுமையுடன் ஓடோடியும் வந்து ஸ்பெயின் தேசத்துக் கப்பலோடு யுத்தஞ் செய்தனரோ, அப்படியே அமெரிக்கா ஜனங்கள் இங்கிலாந்து தேசத்தோடு போர் செய்து தங்கள் தாய் நாட்டிற்குப் பூரண சுதந்திரத்தைப் பெற்று சுமார் 500 வருஷங்களுக்குள், காட்டை நாடாக்கி எவ்வகையாலும் குறைவின்றிப் பெருஞ் செல்வாக்குடன், உலகத்தில் உயர்ந்த கட்டிடங்களுடன் உன்னத பதவியை வகித்து வருவதை நாம் காண்கிறோம். இப்பொழுது அமெரிக்கா எவ்வாறு சுதந்தரம் பெற்றது என்பதை இவண் சுருக்கமாக ஆராய்வோம்.

சுதந்திர வித்து

அமெரிக்காவில் குடியேறிய ஜனங்கள், இங்கிலாந்து தேசம் பல விடங்களில் தன் வியாபார விர்த்திக்கும், தேச விரிவுக்கும் யுத்தங்கள் செய்வதற்கு ஏராளமான திரவியங் கொடுத்துதவி வந்தார்கள். அதற்குப் பிரதி உபகாரமாக எவ்வித அநுகூலங்களையும் பெறாமல் தயங்கி, சுதந்திர வாழ்க்கையே சுந்திர வாழ்க்கையெனச் சகலரும் சிந்திக்கலாயினர். எப்படி ஒரு காட்டில் ஓர் சிங்கமானது நான்கு எருதுகள் ஒற்றுமையுடன் எப்பொழுதும் சேர்ந்து கொண்டே மேயும் போது அவைகளைக் கொல்லச் சக்தியற்று பின்பு தன் தந்திரத்தால் அவைகளின் சிநேகத்தைக் கெடுத்துத் தனித் தனியாய்ப் பிரித்துவிட்டு ஒவ்வொன்றையும் வெகு சுலபமாய் அடித்துத் தின்றதோ, அப்படியே ராஜாங்க அதிகாரிகள் அமெரிக்காவிலுள்ள பலஇனத்தாருக்குள் வேற்றுமை யுண்டாக்குவதைப் பெரிதுங் கைக் கொண்டு அந்தோ! சுதந்திர உணர்ச்சியை அடியோடு அழிக்க முயன்றனர். ஆனால் சுதந்திர வித்து இம்முறைகளுக்கு இடங்கொடாது முளைத்துத் தளிர்த்து ஒற்றுமை யென்னுங் காற்றில் தாண்டவமாடத் தொடங்கிற்று.

'பிரதிநிதியுமில்லை, வரியுமில்லை'

இச் சமயத்தில் பிரான்சு தேசத்திற்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் ஆங்காங்கு யுத்தங்கள் நடந்து வந்தன. அமெரிக்காவின் வட பாகமாகிய கானடாவில் பிரான்சுக்காரர்கள் வசித்து வந்தனர். தனது அமெரிக்கா இராஜ்யத்தைக் காப்பாற்ற வேண்டிய சைனியங்கள் வைத்துக்கொள்ள இங்கிலாந்துக்குச் செலவு ஏற்பட்டதால் அச் செலவுக்குப் பாவம்! அமெரிக்கா ஜனங்களே பொறுப்புடையவர்களென்று 'எரிகிற நெருப்பிலே மெழுகு வார்ப்பது போல்,' 1765-ம் வருஷம் கிரேன்வில் என்னும் பிரிட்டிஷ் முதல் மந்திரி அமெரிக்கா தேசத்தில் முத்திரைச் சட்டம் (Stamp Act) ஒன்றை யுண்டாக்கி முத்திரை யொட்டிய காகிதங்களுக்கு வரி வசூலிக்க ஆரம்பித்தார். எத்தனையோ வழிகளில் இங்கிலாந்து தேசம் முன்னணியில் வர உதவி செய்தும் அதைப் பெரிதாக எண்ணாது தங்கள் காரியம் சித்திபெற என்று மறியாத புதிய உள் நாட்டு வரியை உண்டு பண்ணி வசூலித்ததால், அமெரிக்கா ஜனங்களுக்கு மனக் கொதிப் புண்டாயிற்று. மேலும் அமெரிக்காவின் குறைகளை யெடுத்தோத இங்கிலாந்துப் பார்லிமெண்டில் தங்களுக்கோர் பிரதிநிதி ஏற்படுத்தாத குறைவொன்று அமெ

ரிக்கா ஜனங்களை அநேக நாள் அதிருப்தி பண்ணிக் கொண்டிருந்தது. இப்பொழுது வரி வசூலிக்கத் தொடங்கியதும், 'பிரதிநிதியுமில்லை, வரியுமில்லை' யென்று வரி கொடா இயக்கத்தைப் பரப்பி வந்தனர். வரி வசூலிக்க வந்தவர்களின் வீடுகளை இடித்தனர். முத்திரைகளைத் தீக்கிரையாக்கினர். 'முத்திரையை விற்பவன், முத்திரை யுடைய காகிதத்தை உபயோகப் படுத்துவோன் எவனு யிருந்தாலும் அவன் தன்னையும், தன் வீட்டையும் மற்றச் சொத்துக்களையும் பத்திரப்படுத்திக் கொள்ளட்டும்,' என்ற விளம்பரங்களை முக்கியமான இடங்களில் ஒட்டி வைத்தனர். இவ்விதமான கிளர்ச்சிகள் அதிகரித்த தருணத்தில் கிரேன்வில் மந்திரிஸ்தானம் நீங்கி ராக்கிங்காம் என்பவர் முதல் மந்திரியாகி 1766-ம் வருஷம் இராஜ தந்திரத்தால் முத்திரைச் சட்டத்தை நீக்கிவிட்டு ஜனங்களைச் சமாதானப் படுத்தினர்.

பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரமும் கலகமும்

அமெரிக்காவின் எதிர்ப்பும் இங்கிலாந்தின் வெறுப்பும் ஆறியடங்குமுன் கிராப்டன் கவர்ன்மெண்டில் மெம்பரான சார்லஸ் டேளன்சேண்ட் என்பவர் அமெரிக்காவில் கண்ணாடி, சிவப்பு வெள்ளை ஈயம், காகிதம், தேயிலை முதலிய இறக்குமதி யாகும் சாமான்களில் தீர்வை வாங்கும்படி சிபார்சு செய்தவுடன் அது அமுலுக்கு வந்து தீர்வை வசூலிக்க ஆரம்பித்தனர். அப்பொழுது அமெரிக்க ஜனங்களுக்குக் கடைசியாகச் சுதந்திரம் அடைய வேண்டுமென்ற நோக்கம் பூரணமாயேற்படா விட்டாலும், பிரிட்டனுடைய வரி வசூலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். பாஸ்டன் என்ற நகரமே முதலாவதாகப் பிரிட்டிஷாருடைய இறக்குமதிகளைப் பகிஷ்கரிக்க வெகு தீவிரமாய் ஆரம்பித்தது. இப் பகிஷ்காரம் அதிகம் பயமுறுத்தியதால் பிரிட்டிஷ் சண்டைக் கப்பல்கள் அநேகம் அமெரிக்கா கரையோரத்திற்கு அனுப்பப் பட்டன. அமெரிக்காவில் ஆங்காங்கு எதிர்ப்புக் கூட்டங்கள் பல உண்டாயின. மசசூசெட்ஸ் மாகாணக் கூட்டம் தீவிரமாய் எதிர்த்துப் போராட மற்றக் கூட்டங்களைத் தன்னோடு சேர்த்துக் கொண்டது. எல்லாரும் ஒரே மனதாய் ஒன்று சேர்ந்து சர்க்காரை எதிர்க்க ஆரம்பித்தது இதுவே முதல் தடவை. ஆனால் வழக்கம்போல் பிரிட்டன் இப் பெருந் தேசிய மணங் கமழுங் கூட்டத்தையும், அதனோடு கலந்து கொள்ளத் தயாரா யிருந்தவர்களையும் கலைத்து விட ஆரம்பித்தது. இதனால் கலகங்கள் உண்டாயின. 1770ம்-வருஷம் பாஸ்டன் நகரத் தெருவில் கலகக்காரர்கள் பிரிட்டிஷ் யுத்த வீரர்களைத் தாக்க வந்ததால் அவர்கள் அநியாயமாய்ச் சுட்டு வீழ்த்தப் பட்டனர். இப் படுகொலை 'அணையும் நெருப்புக்கு அகிற் கட்டை' சேர்ந்தது போல, ஜனங்களை அதிக ஒற்றுமைப் படுத்தித் தீவிர வேலைக்கு உற்சாகப் படுத்தி விட்டது. இந் நெருக்கடியான சமயத்தில் லார்ட் நார்த் என்பவர் முதல் மந்திரியாக ஏற்பட்டு நன்றாய் வியாபாரம் நடந்து கொண்டிருந்த தேயிலை தவிர மற்ற இறக்குமதிச் சாமான்களின் தீர்வையை நீக்கி

ஜனங்களின் மனதைச் சிறிது சமாதானப் படுத்தினர்.

இச் சமாதான சமயத்தில் ரோட் என்ற தீவிலுள்ள கள்ளச் சரக்குக்காரர்கள் , தங்களைத் பிடிக்க வந்த காஷ்பி என்ற பிரிட்டிஷ் கப்பலைத் தாக்கி நெருப்பு வைத்து அதன் மாலுமிகளையும் காயப் படுத்தி பட்டப்பகலில் பயமின்றி வீட்டுக்கும் திரும்பி வந்தனர். ஒற்றுமையின் காரணத்தால் அங்குள்ள ஜனங்கள் இத் தீய செய்கையைச் செய்தவர்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. இதனால் பிரிட்டனுக்கு அளவற்ற ஆத்திரமும், அடங்காக் கோபமும் ஏற்பட்டது. இச் சமயத்தில் அமெரிக்காவில் மிகச் செல்வாக் குடைய பிராங்லின் (Franklin) என்பவர் இங்கிலாந்தில் தன் தேசத்துக்குத் தபால் அதிகாரியா யிருந்தார். அப்பொழுது மசசூசெட்ஸ் மாகாணத்திற்குக் கவர்னராயிருந்த ஹச்சிசன் என்பவர் அமெரிக்கா ஜனங்களை அடக்கும் முறைகளை எழுதி இங்கிலாந்துக்கு அனுப்பிய கடிதத்தை பிராங்லின் உடைத்து வெளிப்படுத்தி விட்டதால் அவரை வேலையினின்று விலக்கி அதிக நஷ்டப்படும்படியான நிலையில் வைத்து விட்டனர். இப் பெரியார் தன் தாய் நாட்டின் கடமைக்காக தான் செய்த நம்பிக்கைத் துரோகத்தையும், தான் அடைந்த பெரும் நஷ்டங்களையும் ஒரு பொருட் படுத்தாது மேன்மேலும் தேசாபிமானம் ஏற்பட்டு ' தாலியில்லாக் கழுத்துக்குத் தங்கக் காசுமாலை யெதற்கு ?' என்றபடி விடுதலை யடையா ஜனங்களுக்கு வீண் வேஷம் எதற்கு என்று தன் தாய் நாட்டின் விடுதலைக்குத் தீவிர வேலை செய்ய ஆரம்பித்தார்.

பாஸ்டன் தேயிலைக் கோள்ளை

பிராங்லின் விஷயமாய் அமெரிக்கா ஜனங்களுக்கு ஏற்பட்ட மனவெழுச்சி அடங்கு முன் தேயிலையை யேற்றிக் கொண்டு அநேக பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் பாஸ்டன் துறைமுகத்திலும் மற்ற அமெரிக்கத் துறைமுகப் பட்டணங்களிலும் வந்து சேர்ந்தன. லார்ட் நார்த் தேயிலைத் தீர்வையை மாத்திரம் நீக்காமல் விட்டு விட்டதால் அநேக மாகாணங்கள் தேயிலைக் கஷாயம் அருந்தும் பழக்கத்தை நிறுத்தி விட்டன. அதனால் இங்கிலாந்திலிருந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் பண்டசாலையில் ஏராளமான தேயிலை வியாபாரத்திற்குக் கஷ்டமுண்டாகவே கம்பெனியார்கள் அநேக கப்பல்களில் தேயிலையை ஏற்றி அதற்குண்டான சர்க்கார் தீர்வையை வேண்டுமானால் தாங்களே செலுத்தி விடுவதாக யோசித்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அமெரிக்கா ஜனங்களோ பல துறைமுகங்களில் தேயிலைக் கப்பல்களை இறக்குமதி செய்யவிடாது திருப்பி அனுப்பி விட்டனர். வேறு சில விடங்களில் தேயிலை இறக்குமதியாகி பண்டசாலைகளில் தேடுவாரின்றிப் பழுத்துப் புழுத்துக் கிடந்தது. ஓரிரவு (1773) நகரவாசிகள் சிவப்பு இந்தியர்களைப் போல மாறு வேடம் பூண்டு தேயிலைக் கப்பல்களிலேறி மாலுமிகளைக் கயிற்றால் கட்டிவிட்டு 18,000 பவுன் விலை பெறுமான தேயிலையைத் துறைமுகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தனர். இக் கொள்ளை இங்கிலாந்து பார்லிமெண்டில் அநேகருக்குக் கோபத்தை மூட்டிற்று. ஜெனரல் கேஜ் என்பவர், 'நாம் ஆட்டுக் குட்டிகளாயிருந்தால் அமெரிகா ஜனங்

கள சிங்கமாயிருப்பார்கள்; நாம் நிர்ணயமுள்ள வேலைகள் செய்தால் அவர்கள் சந்தேகமின்றிச் சக்தியற்றவர்களாவார்கள்' என்று அரசனுக்கு எடுத்தோதினார். சார்லஸ் பாக்ஸ் (Charles Fox) என்னும் வாலிப மந்திரிகளில் ஒருவர்தான் இக் கண்டிப்பான ஏற்பாடுகளுக்கு நேர் விரோதமாயிருந்தார். இராஜனும் அடக்குமுறையில் ஆவல் கொண்டதை லார்டு நார்த் கண்டு, தன் அந்தரங்கக் கருத்து வேறாயிருப்பினும், அரசன் எப்படியோ தானும் அப்படியேயென்று பேசாதிருந்தார்.

பாஸ்டன் நகரின் துறைமுகம் முற்றுகை போடப்பட்டது. ஜெனரல் கேஜ் என்பவரை மசசூசெட்ஸ் மாகாணத்திற்கு கவர்னராக்கி, அம்மாகாண தேசியக் கூட்டம் செய்யும் தீர்மானங்களை விலக்கும் (To Veto) படியான அதிகாரமும் அளிக்கப்பட்டார். மேலும் கவர்ன்மெண்ட் அதிகாரிகளின் மீது யாரும் குற்றம் சாட்டினால் அக்குற்றங்களை வடக்கே வெகு தூரத்திலுள்ள நோவாஸ் கோஷியா என்ற இடத்திலும், இங்கிலாந்திலு மட்டிலுமே கேட்டுக் கொள்ளப்படு மென்று ஏற்பட்டது. ஆதலால் எவ்விதக் குற்றங்களையும் ஜனங்கள் கவர்மெண்டிடம் தெரிவித்துக் கொள்ளப் பணச் செலவு செய்து அவ்வளவு தூரம் போக முடியாமல் போகவே சர்க்கார் அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் நடக்க ஆரம்பித்தனர். இந் நெருக்கடியான சமயத்தில் வியாதியஸ்தராயிருந்த மூத்த பிட் (Elder Pitt) அல்லது லார்ட் சேதம் என்பவர் சிறிது சௌக்கியப்பட்டுப் பார்லிமெண்டுக்குத் திரும்பி வந்து சர்க்கார் செய்யும் சகிக்க முடியாச் செய்கையைக் கண்டித்து ஆத்திரமாய்ப் பேசினார். அவர் பின் வருவதை முன்னறிந்து 'வெகு தூரத்திலிருக்கும் சிநேகிதர்களின் (பிரிட்டிஷ் இராஜ்யங்களின், உதவியை விரும்பி நிற்க இங்கிலாந்துக்குச் சமயம் வந்துவிட்டது' என்றும் அமெரிக்கா ஜனங்களைக் கோபமூட்டும் நடத்தைகள் கூடாதென்றும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் பயன் படவில்லை.

1760-ம் ஆண்டில் கானடா என்ற அமெரிக்காவின் வடபாகம் இங்கிலாந்தின் ஆதீனத்திற்குட் பட்டது. இங்கே பிரான்சுக் காரர்களே அதிகமா யிருந்தனர். இவர்களெல்லாம் 'ரோமன், கத்தோலிக்' மதத்தினர். பிரிட்டன் குபெக் ஆக்ட் என்ற சட்டமுண்டாக்கி கானடாவில் கத்தோலிக்க மதத்தையும், பிரெஞ்சு பிரிட்டிஷ் சட்டங்களையும் ஸ்தாபித்தது. இதைக் கண்ட அமெரிக்காவின் புதிய இங்கிலாந்து மாகாணத்திலுள்ள அநேக 'ப்யூரிட்டன்' வகுப்பினர், தங்கள் மதக் கொள்கைக்கு இடையூறுகள் வந்து விட்டனவென்று மிகவும் கலக்க முற்றனர். 'சரியாக நடத்தத் தெரியாத குறுகிய நோக்கத்தின் அரசு முறையையுடைய, முதல்தரமான சக்தி வாய்ந்தவரொருவருமற்ற அமைச்சர் கூட்டம், ஆழ்ந்த யோசனையற்ற, பிடிவாதமான அரசரின் நோக்கப்படி நடந்து கொண்டதே அமெரிக்காவின் அமைதியைக் கெடுத்ததற்கு உண்மையான காரணம்.

* E. M. Wilmont Buxton, an English historian.

தேசீயக் காங்கிரஸும் சுதந்திரப் போரும்

'பீனல் ஆக்ட்ஸ்' என்ற தண்டனை விதிக்கிற சட்டங்களை மசசூசெட்ஸ் மாகாணத்திலும், மற்ற முக்கிய நகரங்களிலும் அமுலுக்குக் கொண்டு வந்தவுடன் பிலடெல்பியா (Philadelphia) என்ற நகரில் பெரிய பொதுக் காங்கிரஸ் ஒன்று கூடிற்று. இப் பெருங் கூட்டத்திற்கு எல்லா அமெரிக்க மாகாணங்களும் (ஜ்யார்ஜியா மாகாணந் தவிர) தங்கள் பிரதிநிதிகளை அனுப்பின. இந்தக் காங்கிரஸில் 'பீனல் ஆக்ட்டு' களும், நிலத் தீர்வைகளும் அநீதமானவைகளென்று தீர்மானித்தனர். ஆனால் அமெரிக்கா இங்கிலாந்தை விட்டுப் பிரிந்து போகக் கூடாது என்று காங்கிரஸ் மிகவும் அழுத்தமாகக் கூறிற்று. மசசூசெட்ஸ் மாகாணத்தில் 12,000 மனிதர்கள் யுத்தத்திற்கு ஒரு நொடியில் ஆயுதங்களுடன் தயாராயினர். சுதந்திரக் கொடியுடன் மற்றொரு கூட்டமுங் கூடிற்று. அமெரிக்காவின் சுதந்திரப் போர் தொடங்கலாயிற்று.

இச் சுதந்திரச் சண்டையை நான்கு பகுதியாகப் பிரிக்கலாம். முதலாவதாக (1775-1778) அமெரிக்காவின் குடியேறிய மாகாணங்களுக்கும், இங்லாந்துக்கும் அநியாயமான வரிகளை நீக்குவதற்கு மாத்திரம் போர் நடந்தது. அந்த விடங்களில் பிரிட்டிஷார் வெற்றி யடைந்தனர். ஏனெனில் அமெரிக்க யுத்த வீரர்கள் யுத்தத்தில் பழக்க மற்றவர்களும், காட்டு வேலைகளிலேயே பெரிதும் ஈடுபட்டவர்களும், சரியாக உண்ணுதவர்களுமாயிருந்தனர். முதன் முதலாக அமெரிக்க ஜனங்கள் திரண்டு சண்டை மருந்துகளை கான்காட் என்ற இடத்தில் சேர்த்து வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டதும் ஜெனரல் கேஜ் அந்த இடங்களை அழிக்கும்படி தன் படைக்கு உத்திரவு கொடுத்ததில் 1775ம் வருஷம் லெக்ஸிங்டன் என்ற இடத்தில் பெருஞ் சண்டை நடந்தது. இதில் சுதந்திரப் போர் வீரர்கள் தங்கள் எதிரிகளை 10 மைல் தூரத்திலுள்ள பாஸ்டன் வரை ஓடியோடித் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். அதே தருணத்தில் காங்கிரஸ் போர் வீரர்களை ஜ்யார்ஜ் வாஷிங்டன் என்ற வீரசிகாமணியின் அதிகாரத்தின் கீழ் தயாரித்தனர். இங்கிலாந்திலிருந்து நான்கு படைக் கூட்டங்களும் பாஸ்டன் நகரில் வந்து சேர்ந்தன. வாஷிங்ட்ன் பாஸ்டனுக்குப் போகு முன்னேயே பங்கர்ஸ் ஹில் என்ற விடத்தில் பெரிய யுத்தம் நடந்து விட்டது. இதில் பிரிட்டிஷாருக்கு ஜெனரல் ஹோவ் என்பவர் அதிக நஷ்டத்துடன் வெற்றியை யுண்டாக்கினார். புதிதாய் வரும் பிரிட்டிஷ் படையைத் தடுப்பதற்கு வாஷிங்டன் தன் படையுடன் பாஸ்டனுக்கு வெளிப்புறமாகச் சகிக்க முடியாத பனியில் காத்துக் கொண்டிருந்தார். பனியில் ஆகாரமின்றி யுத்தப் பயிற்சியுமில்லாத ஜனங்களைச் சிதறவிடாமல், தைரியஞ் சொல்லிக் கூட்டிவைத்திருந்தது, வாஷிங்டனுடைய மனோ வல்லமையையும், போர் வீரன் ஆற்றலையும், பலருக்கு அறிவுறுத்தின. அமெரிக்க ஜனங்கள் கோழைகள் என்று இலேசாய் நினைத்து இங்கிலாந்திலிருந்து பலமில்லாத கொஞ்சம் போர் வீரர்களை அனுப்பியதால் ஹோவ் என்

பவர் தன்னால் நிர்வகிக்க இயலாது 1776-ம் ஆண்டில் பாஸ்டன் நகரை விட்டுத் தன் படையுடன் வெளியேறி விட்டார். அதிலிருந்து பிரிட்டிஷாருக்கு வடபாகத்தில் உறுதியான நிலையில்லாமற் போய் விட்டது.

இதனால் இங்கிலாந்து அரசன், பிரிட்டனில் படை சேர்க்க முடியாமல் உடனே ஜெர்மனி தேசத்திலிருந்த சிறு அரச குமாரர்களுக்குப் பணமுதவி அமெரிக்கக் 'கலகக்காரர்களை' அழித்துவிட ஜெர்மானியப் போர் வீரர்களை அனுப்பினார். அமெரிக்காவில் குடியேறியிருக்கும் பிரிட்டிஷ்காரர்களை அழிக்க அயல் நாட்டுப் படையை அனுப்பியதால் அமெரிக்க ஜனங்களின் யுத்தத்தின் நோக்கம் வேறு விதமாக மாறி விட்டது. 1776-ம் வருஷம் ஜூலை மாதம் 4-ந் தேதி தேசீய காங்கிரஸ் கூடி, அமெரிக்கா இங்கிலாந்து தேசத்திலிருந்து பூரணமாய்ப் பிரிக்கப்பட்டு எல்லா மாகாணங்களையும் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் என்ற பெயருடன் சுதந்திரமடைந்து விட்டதாகத் தெரியப் படுத்தினது. இதே வருஷக் கடைசியில் ஹோவ் என்பவர் நியூயார்க் நகரைக் கைப்பற்றினார். ஆகவே வாஷிங்டன் உடனே பிலடெல்பியாவுக்குப் போக நேர்ந்து மிகக் கஷ்டமான நிலைமையிலிருந்தார். இச் சமயத்தில் பிரிட்டிஷ் யுத்த அதிகாரிகள் ஒன்று சேர்ந்து உடனே சண்டை செய்திருந்தால் வாஷிங்டன் படையைப் பறக்க விட்டிருப்பார்கள். 1777-ம் வருஷம் பனிக் காலத்தில் ஹோவ் படையெடுத்து வாஷிங்டனைத் தோற்கடித்து பிலடெல்பியா நகரையும் பிடித்துக் கொண்டார். இச் சமயத்தில் அமெரிக்காவின் வட பாகத்தில் ஜெனரல் கேட்ஸ் என்பவரின் கீழ் அமெரிக்கப் படை அதிகம் சேர்ந்து, வடக்கிலிருந்து வந்த ஜெனரல் பர்கோய்ன் அதிகாரத்திற்குட்பட்ட பிரிட்டிஷ் படையை சரட்டோகா என்ற இடத்தில் ஜெயித்து எல்லாரையும் அப்படியே கைப்பற்றிக் கொண்டது. இந்த வெற்றியே அமெரிக்காவுக்குப் பின் வெற்றியைக் கொண்டு வந்தது.

இதே சமயங்களில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் எங்கு பார்த்தாலும் யுத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. ஆதலால் பிராஞ்சுக்காரர்கள் சரட்டோகா யுத்தத்திற்குப் பின் அமெரிக்காவோடு உடன்படிக்கை செய்து கொண்டு அதற்கு உதவி செய்யக் காத்துக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட பிரிட்டனும் கலக்கமுற்றது. லார்ட் நார்த் சுதந்திரந் தவிர மற்றெல்லா வகைக்கும் உடன்படுவதாயிருந்தார். ஆனால் ராக்கிங்காம் கூட்டத்தார் பிரான்சு தன் கடற் படையுடன் தயாராயிருப்பதாலும், தாங்களும் சண்டை செய்து களைத்து விட்டதாலும், சுதந்திரத்தையுங் கொடுத்து விடும்படி வற்புறுத்தினார்கள். பார்லிமெண்டிலும் அமெரிக்காவின் சுதந்திரத்தை ஒப்புக்கொள்ளும்படி ஓர் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இப் பிரேரணையை எதிர்த்துப் பேச அப்பொழுது சாகுந்தறுவாயிலிருந்த லார்ட் சேதம் சுமந்து கொண்டு வரப்பட்டார். இவர் அமெரிக்காவை எப்படியும் இழந்து விடக் கூடாதென்று எதிர்த்துப் பேசி முடிக்கு முன் ஜன்னியால் பீடிக்கப்பட்டு அவரை வீடு

கொண்டு சேர்த்தவுடன் இறந்து போனார். இவ் விஷயங்கள் முற்றுப் பெறு முன் பிரான்சு தேசத்தின் எதிர்ப்பைக் கவனிக்க நேர்ந்து விட்டது.

பிரிட்டிஷ் கப்பல்களை அமெரிக்கா தேசம் செல்லவிடாது வழியில் சண்டை இழுத்துக்கொண்டால் அமெரிக்கா ஜனங்கள் இலேசாய் யுத்தஞ் செய்து ஜெயிப்பார்களென்று பிரான்சு தேசம் யோசனை செய்தது. 1779-ம் வருஷம் ஜூன் மாதம் ஸ்பெயின் தேசமும் பிரான்சு தேசத்தோடு சேர்ந்து பிரிட்டிஷ் கப்பல்களைத் தாக்க ஆரம்பித்தது. இதை இங்கிலாந்து சகிக்க முடியவில்லை. ஜிப்ரால்டர் மைனுர்கா என்ற இடங்களை ஸ்பெயின் கைப்பற்றிக் கொண்டது. 1780-ம் ஆண்டில் பிரிட்டன் பல சங்கடங்களுக் குட்பட்டது. ருஷியா, ஸ்வீடன், டென்மார்க் தேசங்கள் ஒன்று சேர்ந்து பிரிட்டனுக்குக் கடைசி காலம் வந்து விட்டதென்று எண்ணி பிரிட்டனின் எதிரிகளுக்குச் சாமான்கள் ஏற்றிச் செல்லும் வெளிக் கப்பல்களைக் கைப்பற்றிக்கொள்ள விடாது தடுக்க ஆரம்பித்தன. ஹாலண்டு தேசமும் சேர்ந்து கொண்டது. ஆகவே பிரிட்டன் அவ் வருஷத்தில் தன் குடியேற்ற நாடுகளோடும், பிரான்சு ஸ்பெயின் முதலிய ஐரோப்பிய தேசங்களோடு யுத்தஞ் செய்ய நேரிட்டதோடும் இந்தியாவில் ஐதர் அலி தொந்திரவு கொடுத்துக் கொண்டிருந்தான். அயர்லாந்து தேசமும் அமெரிக்காவைப் போலச் சுதந்திரமடைய சமயம் பார்த்துக் கொண்டிருந்தது. இப்படியாகப் பிரிட்டிஷ் இராஜ்யம் ஆட்டமுற்றுக் கொண்டிருந்தது.

1781-ம் வருஷத்து வசந்த காலத்தில் இங்கிலீஷ் ஜெனரல் கார்ன் வாலிஸ் அமெரிக்காவி லுள்ள யார்க் டவுன் என்ற இடத்திலிருந்து கொண்டு நியூயார்க்கிலுள்ள படைக்குச் சமுத்திர மார்க்கமாய்ச் செய்திகள் அனுப்பிக் கொண்டிருந்தான். டி கிரஸே என்ற அதிகாரத்தின் கீழ் பிரான்சு சண்டைக் கப்பல்கள் வந்து கார்ன் வாலிஸ் செய்திகளனுப்பிக்கொண்டிருக்கும் சமுத்திர மார்க்கத்தைக் தடுத்து விட்டார். அதே சமயத்தில் வாஷிங்டன் தரை மார்க்கமாய் யார்க் டவுனை நோக்கிச் சென்றான். கார்ன்வாலிஸ் தப்பிக்க இடமில்லாமல் எதிரிகள் வசம் தன்னையும் தன் படையையும் ஒப்புக் கொடுத்து விட்டார். யார்க் டவுனில் அடைந்த ஜயத்தோடு சுதந்திரப் போர் அமெரிக்காவில் முடிவடைந்ததென்றே கூற வேண்டும். ஆனால் சமுத்திரத்தில் பிரான்சும், ஸ்பெயினும் சேர்ந்து பிரிட்டிஷாரோடு யுத்தஞ் செய்து வந்தன. மற்ற தேசத்தார்கள் இதில் தலை யிட்டுக்கொள்ளவில்லை. 12 வருஷ காலமாய் ஓயாக் கவலைக்கிடமா யிருந்த முதல் மந்திரி ஸ்தானத்தை லார்ட் நார்த் ராஜீநாமா செய்து விட்டார்.

பூரண சுதந்திரம்

பல வருஷங்களாகத் தரையிலும், சமுத்திரத்திலும் சண்டைகள் செய்து ஒவ்வொரு தேசமும் (இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்சு தளர்ந்து விட்டது. ஆகவே ஒவ்

வொரு தேசமும் சமாதானத்திற்குத் தயாராயிருந்தது. 177 -ம் வருஷம் ஜனவரி மாதம் வார்சேய்ல்ஸ் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதில் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் பூரண சுதந்திரம் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஸ்பெயின் தேசம், மைனர்கா என்ற தீவை மாத்திரம் எடுத்துக்கொண்டது. யுத்தத்தில் கைப்பற்றிய மற்றவைகள் அவரவர்களிடம் ஒப்படைக்கப் பட்டன. இந்த யுத்தங்களில் பிரிட்டன் தன் இராஜ்யத்தில் ஓர் பெரும் பகுதியை இழந்ததுமன்றி 10 கோடி பவுனுக்கும் உள் நாட்டுக் கடனாளியாயிற்று.

தற்போதுள்ள முன்னேற்றத்திற்கு வெகு சீக்கிரத்தில் வர அமெரிக்காவுக்குச் சுதந்திரமே மிகவும் அத்தியாவசியமாயிருந்தது. 1789-ம் வருஷம் ஜனவரி மாதம் 7-ந்தேதி அமெரிக்காவின் சுதந்திரத்துக்குத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் பண்ணிய ஜியார்ஜ் வாஷிங்டன் என்பவரை அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கு முதல் பிரஸிடெண்டாக நியமித்தனர். அமெரிக்கா தேசம், அத்லாந்திக் சமுத்திரக் கரையோரம் சில மாகாணங்களை மாத்திரம் உடையதோடு நில்லாமல் கீழ் மேலாய் அத்லாந்திக் சமுத்திரத்திலிருந்து பஸிபிக் சமுத்திரம் வரையிலும், தென் வடக்காய் மெக்ஸிகோவிலிருந்து கானடா வரைக்கும் மாகாணங்களையுடையதாய் முன்னேற்றத்தில் முன்னணியிலிருந்து, செல்வத்தில் சீர்பெற்று, உலகத்தில் முக்கிய தேசமாய் விளங்கா நிற்பதின் காரணம் அதை அடக்கி ஆண்டவர்களிட மிருந்து காலா காலத்தில் விடுதலை யடைந்ததாலன்றே?

அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?

அனுக்கிரமிப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்வது, இந்த இருபதாவது நூற்றாண்டு ராஜ தந்திர நாகரிகமாகி விட்டது. சிறப்பாக, 1914ம் வருஷத்திற்குப் பின்னரும், 1939ம் வருஷத்து யுத்தத்திற்கு முன்னரும் இந்த அனுக்கிரமிப்பு ஒப்பந்தங்களுக்கு சுக்ர தசையென்று சொல்லலாம். ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் ஏதேனும் விவகாரங்கள் ஏற்பட்டால் அவற்றைச் சமாதான முறையிலேயே தீர்த்துக் கொள்வதென்றும், பலாத்காரத்தை ஒருவர் மீது ஒருவர் உபயோகிப்பதில்லை யென்றும் இரண்டு நாடுகள் சேர்ந்து செய்து கொள்கிற ஒப்பந்தத்திற்கே அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் என்று பெயர். ஆனால் இந்த ஒப்பந்தங்கள் எவ்வளவு தூரம் கௌரவிக்கப் படுகின்றன? தற்காலிகமான ஒரு தற்காப்புக் கருவியாகவே ஒவ்வொரு தேசமும் இந்த அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தை உபயோகித்துக் கொண்டு வருகின்றன. அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்திற்கு ஓர் உதாரணம்: ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் 1939ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23ந் தேதி ஏற்பட்ட ஒப்பந்தம்.

லாலா லஜபதிராய்

ஜனனம் - **1865**

மரணம் - **1928**

——"ஒரு காங்கிரஸ்வாதி"

'பால், லால், பால்' என்று மூன்று தலைவர்களை ஒன்று படுத்திப் பேசுவது, சென்ற தலைமுறையின் வழக்கம். அதாவது பால கங்காதர திலகர், லாலா லஜபதி ராய், விபின சந்திர பாலர் ஆகிய மூவரும் இந்திய தேசீய இயக்கத்தின் அதிநாயகர்களாகக் கொண்டாடப் பட்டார்கள். இவர்களில் லாலா லஜபதி ராயை 'பஞ்சாப் கேசரி' என்று சொல்வதுண்டு. 1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஜலியன் வாலா பாக் படுகொலை நடைபெற்றது. அப்பொழுது லஜபதிராய் அமெரிக்காவில், தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு வசித்துக் கொண்டிருந்தார். ஜலியன் வாலா பாக் சம்பவத்தைக் கேள்வியுற்றதும் இவர் பத்திரிகைகளின் வாயிலாகப் பின் வருமாறு கதறினார்:— 'அந்தோ! எனக்குச் சிறகுகள் இல்லையே! இருந்தால் என் தாய் நாட்டுக்குப் பறந்து சென்றிருப்பேன். என் பாரத தேசம் க்ஷேமமடையும் பொருட்டு நான் பிச்சை யெடுப்பேன்; இரவல் வாங்குவேன்; திருடவும் செய்வேன்.'' இப்படி யெல்லாம் இவர் கதறினர். இவர் காலமானதை அறிந்து, மகாத்மா காந்தி 'யங் இந்தியா' பத்திரிகையில் எழுதுகிற போது 'லாலாஜி எப்பொழுதும் பசியால் துடித்துக்கொண்டிருந்தார். அதாவது என்ன பசி? அவருக்கு, இன்னும் அதிகமான தேச சேவை செய்ய வேண்டுமே யென்ற பசி, கடைசி காலம் வரை அவரை வாட்டிக் கொண்டிருந்தது' என்று குறிப்பிட்டார்.

லாலா லஜபதி ராய் 1865-ம் வருஷம் ஜனவரி மாதம் 28-ந்தேதி பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த லூடியானு ஜில்லாவிலுள்ள டோங்கி என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார். இவருடைய தகப்பனர் ராதா கிருஷ்ண ராய் என்பவர், பள்ளிக் கூட இன்ஸ்பெக்டராக இருந்தார். அதனோடு சிறந்த

கல்விமானாகவும் இருந்தார். இதனால், தமது மகனை வீட்டிலேயே வைத்துக் கொண்டு நல்ல முறையில் படிப்புச் சொல்லிக்கொடுத்தார். சிறிது காலங் கழித்த பிறகு தான், பள்ளிக் கூடத்தில் சேர்ப்பித்தார். 1880-ம் வருஷம் லூடியானா மிஷன் ஹைஸ்கூலில் படித்து அதிலிருந்து 'என்ட்ரன்ஸ்' பரீட்சையில் தேறினார். பின்னர் லாகூர் காலேஜில் சேர்ந்து எப். ஏ பரீட்சையில் தேறி, அப்படியே வக்கீல் பரீட்சையிலும் தேறினார். ரோடக் என்னும் நகரத்திலும் ஹிஸார் என்னும் நகரத்திலும் சிறிது காலம் வக்கீல் தொழில் நடத்தினார். இவர் லாகூரில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் குருதேவ வித்தியார்த்தி, மஹாத்மா ஹன்ஸ்ராஜ் முதலிய பெரியோர்களுடைய தொடர்பு ஏற்பட்டது. இதன் காரணமாக, இவருக்கு ஜன சேவை தான், வாழ்க்கையின் பிரதான லட்சியமாயிருக்க வேண்டுமென்ற எண்ணம் உதித்தது.

லஜபதி ராய் ஹிஸார் நகரத்தில் வக்கீல் தொழிலை நடத்திக்கொண்டிருந்த காலத்தில், நகர சபையில் ஓர் அங்கத்தினராக இருந்தார். அப்பொழுது பஞ்சாப் மாகாண லெப்டினெண்ட் கவர்னர் அங்கு விஜயஞ் செய்தார். அவருக்கு நகர சபையார் ஓர் உபசாரப் பத்திரம் படித்துக்கொடுப்பதாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஹிஸார் வட்டத்தின் டெபுடி கமிஷனரே நகர சபையின் தலைவராயிருந்தார். இவர் லெப்டினெண்ட் கவர்னருக்கு ஆங்கில பாஷையிலேயே உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்க வேண்டுமென்று கூறினார். லஜபதிராயோ உர்து பாஷையிலேயே படித்துக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். கடைசியில் லஜபதியின் விருப்பப்படி உருது பாஷையிலேயே உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப் பட்டது.

ஹிஸார் நகரத்தில் சுமார் ஆறு வருஷ காலம் லஜபதி ராய் வக்கீல் தொழில் நடத்தினார். பின்னர் பலருடைய வேண்டுகோளுக்கிணங்க 1892-ம் வருஷம் லாகூர் வந்து வக்கீல் தொழிலை நடத்தத் தொடங்கினார். இதற்கு முன்னரே, 1886-ம் வருஷத்திலேயே, லாகூரில் தயானந்த ஆங்கிலோ-வைதிக காலேஜ் ஏற்படுவதற்கு முக்கிய காரணரா யிருந்து இவர் உழைத்து வந்திருக்கிறார். லாகூருக்கு வந்த பிறகு, இந்த காலேஜை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார். மேற்படி காலேஜில் ஓர் ஆசிரியராகவும், பின்னர் சூப்பரிண்டெண்டாகவும் வேலை பார்த்தார். இது தவிர, பஞ்சாப மாகாணத்தின் பல பாகங்களிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்து அநேக இடங்களில் பள்ளிக் கூடங்களை ஸ்தாபித்தார்.

1888-ம் வருஷம் அலகாபாத்தில் ஜார்ஜ் யூல் என்ற ஆங்கிலேயருடைய தலைமையில் மூன்றாவது காங்கிரஸ் கூடியது. அந்த வருஷந் தான் லஜபதி ராய், முதன் முதலாகக் காங்கிரஸுக்கு விஜயஞ் செய்தார். அப்பொழுது இவருக்கு வயது 23. அந்தக் காங்கிரஸிலேயே இவர், சட்ட சபைகளை விசாலிக்க வேண்டுமென்பதன் சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தைப் பற்றி அதிக வாக்சாதுரியத்துடன் பேசினார். இது முதற் கொண்டு இவர் ஒவ்வொரு காங்

கிரஸைக்கும் ஆஜரா யிருந்து பேசி யிருக்கிறார். இந்தியாவின் அபிலாஷைக ளைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் பொருட்டு, இங்கிலாந்துக்குச் சென்ற இரண்டு பிரதிநிதிக் கூட்டங்களில் லஜபதி ராய் கலந்து கொண்டார்.

வங்காளப் பிரிவினைக்குப் பிறகு ஏற் பட்ட தேசிய கிளர்ச்சியின் பரிணாம மாக லஜபதிராய் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டுச் சுமார் பத்து வருஷ காலம் அமெரிக்காவில் இருந்தார். 1920-ம் வருஷ வாக்கில்தான் இந்தி யாவுக்குத் திரும்பி வந்தார். இதற்கு முன்னரும், இவர் சிறிது காலம் அர சாங்கத்தின் அடக்கு முறைக்கு ஆளாகிச் சிறைவாசம் செய்தார். இவர் அமெரிக்காவிலிருந்த காலத்தில், இந் தியாவைப்பற்றி அமெரிக்கர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லி அநேக விதமான பிரசாரங்களைச் செய்து வந் தார். 'இந்தியன் ஹோம் ரூல் லீக்' என்றும் 'இந்தியன் இன்பர்மேஷன் பீரோ' என்றும் ஸ்தாபனங்களை ஏற் படுத்தி அவை மூலமாகத் தாய் நாட் டுக்காக அரிய தொண்டுகள் பல செய்து வந்தார். இவர் அமெரிக்கா விலிருந்து திரும்பி வந்த வருஷம், காந் தியடிகளின் சத்தியாக்கிரக இயக் கத்தைப் பற்றிய பிரச்னை காங்கிரஸ் முன்னர் வந்தது. இதற்கென்று 1920-ம் வருஷம் கடைசியில் கல்கத் தாவில் விசேஷ காங்கிரஸ் ஒன்று கூடி யது. இதற்கு லஜபதிராயே தலைமை வகித்தார்.

லஜபதி ராய், அரசியல் விவகாரங் களோடு தம் சேவையை வரையறுத் துக்கொள்ளாமல் கல்வி விஷயத்திலும் ஆரிய சமாஜப் பிரசார விஷயத்தி லும் அதிக சிரத்தை யெடுத்துக் கொண்டார். தீண்டாமை விலக்குப் பிரசாரத்தை அந்தக் காலத்திலி ருந்தே செய்து வந்தார். தேசத்திற் காகவே தமது வாழ்நாளை அர்ப்ப ணம் செய்யக் கூடிய ஒரு தொண்டர் கூட்டத்தை நிரந்தரமாக ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவும், ஜனங்க ளுக்கு அரசியல் ஞானத்தைப் புகட்ட வேண்டுமென்பதற்காகவும் 'லோக சேவகசங்கம்' (Servants of people society) என்றொரு சங்கத்தை ஸ்தா பித்தார். இதற்காக வென்று ஒரு கட்டிடம் புத்தக சாலை முதலியன வற்றை அமைத்துக் கொடுத்தார். 1927-28-ம் வருஷத்தில் இந்தியா வுக்கு சைமன் கமிஷன் விஜயஞ் செய்த காலத்தில் இவர் அதைப் பகிஷ் கரிக்கும் இயக்கத்தில் பூரண பங்கெ டுத்துக் கொண்டார். 1928-ம் வருஷம் அக்டோபர் மாதம் 30-ந் தேதி சைமன் கமிஷன் லாகூருக்கு வந்த போது பகிஷ்கார ஊர்வலத்திற்குத் தலைமை பூண்டு லஜபதி ராய் நடத்தினார். இது காரணமாக இவர் தாக்கவும் பட்டார். இவருடைய மரணத்திற்கு இதுவே காரணமென்று சொல்லப்படுகிறது. மரண கால வேதனையினால் இவர் துன் புற்றிருந்த காலத்திலும் இவரிடத்தில் தேசத்தைப் பற்றிய சிந்தனையே குடி கொண்டிருந்தது. கடைசியில் இவர் 1928-ம் வருஷம் காலமானார். இவர் ஆத்மா சாந்தியடைக!

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

: அக்கா :

—எம். வி. வேங்கடராமன்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

எட்டாம் அத்தியாயம்

கல்கத்தா மாளிகையில் இப்போது விரஜ பாபுவுக்குப் பதிலாக சிவ சந்திரன் எஜமானன். மாதவிக்குப் பதிலாக புது நாட்டுப் பெண் எஜமானி. மாதவி இன்னமும் அங்கேயே இருக்கிறாள். அண்ணன் அவளிடம் முன்னைப்போலவே அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்ளுகிறான். ஆனால் அவளுக்கு இங்கே இருக்கப் பிடிக்க வில்லை. வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், காரியஸ்தர்கள் எல்லோருமே இப்பொழுது கூட அவளை 'அக்கா' என்று கூப்பிடுகிறார்கள். ஆனால் எல்லோருக்கும் பெட்டிச்சாவி கைமாறிவிட்டதென்று தெரியும். ஆனால் சிவ சந்திரனுடையமனைவி அவளை அலட்சியம் செய்கிறாள் என்றோ கௌரவக் குறைவாக நடத்துகிறாள் என்றோ சொல்ல முடியாது; ஆனால் 'இந்த புதிய ஸ்திரீயின் அனுமதி இல்லாமல் நானாக ஒன்றும் செய்யக் கூடாது' என்று மாதவிக்குத் தோன்றும்படி நடந்து கொள்ளுவாள்.

அப்போது தகப்பனாரின் ராஜ்யம், இப்போது அண்ணாவின் ராஜ்யம். ஆகையால் கொஞ்சம் வித்தியாசம் உண்டாகி விட்டது. அப்போது அவளுக்கு மரியாதை உண்டு, இப்போது மரியாதை இருந்தாலும் நினைவுகள் நிறைவேற வழி இல்லை. அப்போது அப்பா அவளுக்குச் சர்வாதிகாரங்களும் கொடுத்திருக்கிறார். இப்போது அவள் உறவினர்களில் ஒருத்தி போலத்தான்.

இப்படி சொல்லுவதால் நாம் சிவ சந்திரனை நேரடியாகக் குறை கூறாமல் மறைவாகப் பழிப்பதாக யாராவது நினைத்துக்கொண்டால், அவர்கள் நம்முடைய கருத்தைச் சரிவர உணரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். உலகம் தோன்றின நாள் முதல்கொண்டு இருந்து வரும் பழக்க வழக்கங்களைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். மாதவி பாவம் செய்தவள்; நாதி இல்லாதவள் என்பதற்காகத் தங்களுடைய அதிகாரத்தைக் கைவிட யாருக்கு மனசு வரும்? புருஷனின் சொத்தில் பெண்டாட்டிக்குப் பங்கு உண்டு என்று யாருக்குத் தெரியாது? இந்த விஷயம் சிவ சந்திரனின் மனை

விக்கும் தெரிந்தது தானே? சிவ சந்திரன் மாதவியின் சகோதரன். ஆனால் அவளுக்கும் மாதவிக்கும் என்ன சம்பந்தம்? பிறருக்காக அவள் தன் உரிமையை இழந்து விட வேண்டும் என்று தலை எழுத்தா? மாதவிக்கு எல்லாம் தெரியும். நாட்டுப் பெண் சின்னவளாக இருந்தபோது, விரஜ பாபு உயிரோடிருந்த சமயம், மாதவிக்கு நாட்டுப் பெண்ணும் பிரமீளாவும் சரி சமானம். ஆனால் இப்போது காலம் மாறி விட்டது. அவள் எப்போதுமே ஆத்மாபிமானினி; ஆதலால் அவள் எல்லோருக்கும் கீழே இருக்க வேண்டியதாக இருக்கிறது! அவளுக்குப் பேச்சை சகித்துக் கொள்ளும் சக்தி இல்லை; ஆதலால் அவள் ஒன்றும் பேசுவதில்லை! அதிகாரம் இல்லாத இடத்திலே நிமிர்ந்து நிற்க அவளால் முடியாது; மனசில் ஏதோ வேதனை உண்டானால் அதை அவள் மௌனமாகப் பொறுத்துக் கொண்டு விடுவாள். சிவ சந்திரனிடம் ஒன்றும் சொல்லிக் கொண்டிருக்க மாட்டாள். தன்மீது அன்புள்ளவன் என்பதற்காக அவனுடைய உதவியை நாடுவது அவளுடைய வழக்கத்துக்கு விரோதம். தனக்குச் சொந்தக்காரன் என்பதற்காக அவன் வீட்டில் அதிகாரம் செலுத்த அவளுக்கு ரொம்ப வெட்கமாக இருந்தது. சாதாரண ஸ்திரீகளைப் போல சண்டை சச்சரவு செய்யவும் அவளுக்குப் பிடிக்காது.

ஒரு நாள் அவள் சிவ சந்திரனைக் கூப்பிட்டு, 'அண்ணா, நான் புக்ககம் போகிறேன்' என்றாள்.

'ஏன் மாதவி? அங்கே ஒருத்தருமே இல்லையே!' என்றான் சிவ சந்திரன் ஆச்சரியம் அடைந்து.

மாதவி இறந்து போன தன் கணவரைக் குறிப்பிட்டுக் கூறினாள். அவருடைய சின்ன மருமான் காசியிலே நாத்தனாரோடு இருக்கிறான். அவனை கூட்டிக் கொண்டு போய் கோலாகிராமத்தில் சுகமாக வசிக்கிறேன்.'

பப்னா ஜில்லாவின் கோலா கிராமத்தில்தான் மாதவியின் புக்ககம். சிவ சந்திரன் கொஞ்சம் சிரித்துக் கொண்டே சொன்னான், 'அங்கே உனக்குக் கஷ்டமாக இருக்காதா, மாதவி?'

'கஷ்டம் ஏன் அண்ணா? அங்கே இருக்கிற வீடு இன்னமும் அப்படியே இருக்கிறது. பத்து, பதினைந்து பீகா நிலமும் இருக்கிறது. ஒரு கைம் பெண்ணுக்கு இது போதாதா?'

'போதாது என்று நான் சொல்லவில்லை. ஆனாலும் மாதவி, அங்கே உனக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கும்.'

'கஷ்டம் ஒன்றும் இல்லை.'

சிவ சந்திரன் கொஞ்சம் யோசனை செய்து, 'ஆனால் நீ ஏன் அங்கே போக வேண்டும்? என்ன நடந்தது என்று நிஜத்தைச் சொல்லு. நான் சண்டை எல்லாம் தீர்த்து வைக்கிறேன்.' என்று சொன்னான்.

இதற்கு முன் அவன் மனைவி மாதவிக்கு விரோதமாக ஏதோ புகார் செய்தாள் போலிருக்கிறது. அது இப்பொழுது ஞாபகம் வரவே இப்படிச் சொல்லி விட்டான் போலும். ஆனால் மாதவியின் முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது.

'நான் சண்டை போட்டுக் கொண்டு உன்னுடைய வீட்

டை விட்டுப் போவேன் என்று நீ நினைக்கிறாயா?'

சிவ சந்திரனும் வெட்கிப் போய் விட்டான். 'சட்' டென்று சொன்னான், 'இல்லை, இல்லை; நான் அப்படிச் சொல்ல வில்லை. ஆனால் இந்த வீடு எப்போதும் உன்னுடையதுதான். அப்படி இருக்க இன்று ஏன் போக வேணும் என்கிறாய்?'

அப்போது இருவருக்கும் ஏக காலத்தில் தங்களுடைய அன்புள்ள தகப்பனாரின் ஞாபகம் வந்தது. இருவருடைய கண்களிலும் ஜலம் தோன்றத் துவங்கியது. மாதவி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சொன்னாள், 'நான் மறுபடியும் உன் மகனுக்குப் பூணூல் போடும் சமயம் வருகிறேன்; இப்போது போகிறேன்.'

'பூணூல் போடும் போதா? இன்னும் பத்துப் பன்னிரண்டு வருஷம் கழித்தல்லவா அது?'

'அது வரை உயிரோடிருந்தால் கட்டாயம் வருகிறேன்.'

என்ன சொல்லியும் மாதவி அங்கே இருக்கச் சம்மதிக்க வில்லை. பயணத்திற்காக ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தாள். அவள் புது நாட்டுப் பெண்ணைக் கூப்பிட்டு வீட்டு விஷயங்களை எல்லாம் விளக்கமாகச் சொன்னாள். வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் கூப்பிட்டு ஆசி கூறினாள்.

பயணத்தன்று சிவசந்திரன் கண்ணீரும் கம்பலையுமாகத் தங்கை அருகில் வந்து, 'மாதவி! உன் தமையன் உன்னை ஒன்றும் தாழ்வாகச் சொல்ல வில்லையே?' என்று கேட்டான்.

'ஏன் இப்படிக் கேட்கிறாய் அண்ணா?'

'இல்லை, ஏதாவது கெட்ட வேளையில் வாயிலிருந்து அஜாக்கிரதையாக ஏதாவது வெளிப்பட்டிருந்தால்—'

'சீச்சி!'

'நிஜந்தானா?!'

'ஆம், நிஜந்தான்.'

'அப்படியானால் போ; நீ உன் வீட்டிற்குப் போவதை நான் தடுக்கவில்லை. உனக்கு எங்கே இருக்கப் பிடிக்கிறதோ அங்கே இரு. ஆனால் அடிக்கடி தகவல் தெரிவிக்க மறந்து விடாதே.'

மாதவி நேராகக் காசிக்குப் போனாள். மருமானைக் கூட்டிக் கொண்டு கோல கிராமத்தில் தன் கணவருடைய வீட்டில் ஏழு வருஷங்களுக்குப் பிறகு காலடி எடுத்து வைத்தாள்.

அவள் வந்ததும் ஸ்ரீமான் சட்டர்ஜிக்கு சங்கடமாகி விட்டது. அவரும் யோகேந்திர நாதனின் தகப்பனாரும் நெருங்கிய நண்பர்கள். ஆதலால் சாகும் தருவாயில் யோகேந்திரன் தன் நிலபுலங்களை எல்லாம் அவரிடமே ஒப்படைத்து விட்டுச் செத்தான். அவன் உயிரோடிருந்த போதும் அவர் தான் நிலங்களை கவனித்துக்கொண்டிருந்தார்; யோகேந்திரன் அவைகளைப் பற்றி அதிக கவலைப்படுவதில்லை. மாமனாரிடம் நிறையப் பணம் இருந்ததால் தன் தகப்பனாருடைய கொஞ்ச சொத்து அவனுக்கு பிரமாதமாகப்பட வில்லை. பிறகு அவன் இறந்ததும் சட்டர்ஜீ நியாயமான உரிமையோடு

எவ்வித தடையும் இல்லாமல் அந்த சொத்தை அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருந்தார். இவ்வளவு நாள் கழித்து மாதவி திடீர் என்று குறுக்கிட்டதும் சட்டர்ஜீக்கு மிகவும் கவலையாகி விட்டது. அவள் பொறாமையால்தான் இப்படி செய்தாள் என்று அவருக்கு நம்பிக்கை உண்டாகி விட்டது. ஆகவே ரொம்ப கோபமாக வந்து சொன்னார், 'ஹூ! இங்கே பார், உனக்கு இருந்த இரண்டு பீகா நிலத்துக்கு பத்து வருஷக் கிஸ்தி வட்டி சேர்த்து நூறு ரூபாய் பாக்கி இருக்கிறது. அதைத் தராவிட்டால் உன்னுடைய நிலம் ஏலத்தில் போய் விடும்.

மாதவி தன் சந்தோஷ குமாரன் மூலம்,'ரூபாயைப்பற்றிக்கவலையில்லை,' என்று சொல்லி உடனே நூறு ரூபாயையும் கொடுத்தனுப்பினாள். அந்த ரூபாய்கள் சட்டர்ஜீக்கு வேறு விதத்தில் உபயோகப்பட்டன.

ஆனால் மாதவி இத்துடன் லேசில் விடவில்லை. அவள் மறுபடியும் சந்தோஷ குமாரனை அனுப்பி, என் மாமனார் ரெண்டு பீகா நிலத்திலா ஜீவனம் நடத்தினார்? பாக்கி நில பலங்கள் எங்கே யாரிடம் இருக்கின்றன?' என்று கேட்டு வரச் சொன்னாள்.

சட்டர்ஜீக்கு ஒரே கோபம் கோபமாக வந்து விட்டது. ஏதோ கொஞ்சம் மிச்சம். எட்டு வருஷம் பத்து வருஷம் ஜமீன்தாருக்குக் கிஸ்தி கட்டாவிட்டால் நிலம் எப்படித் தக்கும்?

"நிலத்திலிருந்து வரும்படி ஒன்றுமே இல்லையா? அதிலிருந்து நிலவரி ஏன் கட்டப்படாது? நிஜமாகவே விற்றுச்சு என்றால் அதை எவன் எவனிடம் விற்றான் என்று சொல்லுங்கள்; எல்லாம் தெரிந்து கொண்டு வாங்கினவனைக் கிளப்ப வேணும். அதுக்கு பத்திரம் எல்லாம் எங்கே?"

சட்டர்ஜீ ஏதோ பதில் கொடுத்தார்; ஆனால் மாதவிக்கு ஒன்றும் புரியவில்லை. முதலில் ரொம்ப நேரம்வரை பிராமண தேவதை ஏதேதோ உளறிக் கொண்டிருந்தார். அப்புறம் நெற்றியில் திலகம்இட்டு, மூலைக் கச்சத்தை இழுத்துக் கட்டி கொண்டு வாலதா கிராமத்துக்கச்சேரிக்கு புறப்பட்டார். அந்த கிராமத்தில் தான் சுரேந்திரனின் வீடும் மதுராபாபுவின் ஆபீஸும் இருந்தன. பிராமணர் பத்து பன்னிரண்டு குரோச தூரம் நடந்து சென்று, மதுராபாபுவிடம் அழுது கொண்டே, 'ஸர்க்கார்தான் காப்பாற்ற வேணும்! இல்லாவிட்டால்ஏழைப்பார்ப்பான் தெருத் தெருவாய் அலைய வேண்டியதாகி விடும்—' என்று ஆரம்பித்தார் தம் கதையை.

'இப்படி எத்தனையோ பேர்வழிகள் வருகிறார்கள்!' என்று முகத்தை திருப்பிக் கொண்டே மதுரா பாபு கேட்டார் 'என்ன விசேஷம்?'

'அண்ணா என்னைக் காப்பாற்றுங்கள்!'

'விஷயத்தை சொல்லுங்காணும்!'

உடனே விது சட்டர்ஜீ மாதவியிடம் வாங்கிய நூறு ரூபாயை மதுராபாபுவின் கையில் தக்ஷிணையாக வைத்துச் சொன்னார், 'நீங்கள் தர்மாவதாரம்! நீங்கள் ஒத்தாசை செய்யாவிட்டால் நான் நிர்மூலமாகப் போய் விடுவேன்.

'சரி, விஷயத்தைப் புரியும்படி சொல்லும்.'

'கோலா கிராமத்தின் ராமதனு ஸன்யாலுடைய விதவை நாட்டுப் பெண் எங்கே இருந்தோ வந்து என் நிலங்களை அபகரிக்கப் பார்க்கிறாள்.'

பிறகு அந்தண தேவதை மானேஜரின் கையைப் பிடித்துக் கொண்டு, 'நான்தான் சர்க்காருக்கு பத்து வருஷமாக வரி கொடுக்கிறேன்' என்று சொன்னார்.

'நீர்தானே பயிர் செலவு செய்கிறீர்? நீர்தானே வரி கொடுக்க வேணும்?'

'சர்க்கார் தயவு பண்ண வேணும்.'

மதுர பாபுவுக்கு அவருடைய நினைவு தெரிந்து விட்டது.

'விதவையை ஏய்க்கப்பார்க்கிறீரா?'

பிராமணர் பேச வில்லை.

'எத்தனை பீகா நிலம்?'

'இருபத்தஞ்சு.'

மதுர நாதர் கணக்குப் போட்டுச் சொன்னார். 'குறைந்த பக்ஷம் மூவாயிரம் ரூபாயாவது ஆகும். ஜமீன்தாருடைய கச்சேரிக்கு என்ன மரியாதை செய்வீர்?'

'உத்திரவுப்படி செய்கிறேன்—முந்நூறு ரூபாய்.'

'முந்நூறு கொடுத்து மூவாயிரம் அடிப்பிராக்கும்! போமையா, நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.'

பிராமணர் வறண்ட சிரிப்பு செய்து கேட்டார், 'எவ்வளவுக்கு உத்திரவிடுகிறீர்கள்?'

'ஆயிரம் கொடுக்க முடியுமா?'

பிறகு ரொம்ப பேரம் நடந்தது. அதன் பலனாக யோகேந்திரனுடைய விதவை மீது பத்து வருஷத்து வரி பாக்கி அசலும் வட்டியும் சேர்த்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு பிராது கொடுக்கப்பட்டது. 'ஸம்மன்' வந்தது என்னவோ வாஸ்தவம்; ஆனால் அது மாதவியிடம் வரவில்லை. பிறகு 'டிக்கிரி' ஆயிற்று. அப்புறம் ஒன்றரை மாசம் கழித்து ஜமீன்தாரிட மிருந்து நிலத்தை ஏலம் போட கட்டளை வந்தது. பின்னர் அவளுடைய நிலம் எல்லாம் ஜப்தி ஆகிவிட்டது.

மாதவி பக்கத்து வீட்டுக்காரியிடம் கேட்டாள், 'இது கொள்ளைக்காரர்கள் தேசமா?' என்று.

'ஏன், என்ன விஷயம்?'

'இல்லா விட்டால் வேறே என்ன? ஒரு மனுஷன் என்னை ஏமாற்றி என்னுடைய சொத்தை எல்லாம் கொள்ளையடிக்கிறான்; உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையா?'

'நாங்கள் என்ன செய்ய முடியும்? ஜமீன்தார் பார்த்து ஏலம் போடும் போது ஏழைகளான நாங்கள் என்ன செய்ய முடியும்?'

'சரி; ஆனால் என் வீடு ஏலம போடப்படும் விஷயம் எனக்கே தெரிவிக்காமல் இருப்பதா? அப்பேர்ப்பட்ட ஜமீன்தார் யார்?'

அந்த ஸ்திரீ விவரமாக ஜமீன்தாரை வருணிக்க ஆரம்பித்தாள், 'இந்த மாதிரி கொடுமை செய்கிற ஜமீன்தாரைப் பார்த்ததும் இல்லை, கேட்டதும்

இல்லை—,' என்று அவள் தான் வாக்கில் கேட்டதை எல்லாம் சொன்னாள்.

மாதவி பயந்து கொண்டே கேட்டாள், 'ஜமீன் தாரையே நேரில் போய் பார்த்தால் காரியம் நடக்குமா?'

தன் மருமானுக்காக அப்படி செய்யவும் அவள் தயாராக இருந்தாள். அந்த ஸ்திரீ மறுநாள் தன்மகனிடம் விவரமாகக் கேட்டுச் சொல்லுவதாகக் கூறிவிட்டாள். அவள் மகன் அடிக்கடி லாலதா கிராமத்துக்குப் போவான். அவனுக்கு ஜமீன்தாரின் விஷயம் எல்லாம் தெரியும்; அன்று தோட்டத்தில் நடந்த ஏலோகேசி சம்பவம் கூடத் தெரியும்.

ராமதனுவின் விதவை நாட்டுப் பெண் ஜமீன்தாரை நேரில் போய்ப் பார்க்கலாமா என்று கேட்டதும் அவன் கம்பீரமாகக் கேட்டான்,

'இந்த விதவைக்கு என்ன வயசு?',

'இருபது இருபத்தொண்ணு இருக்கும்.'

'அழகாக இருப்பாளா?'

'தெய்வகன்னிகை போல இருப்பாள்—'

'உம்—அவரைப் போய் பார்த்தால் காரியம் நடந்து விடும்—ஆனால் இன்றைக்கு ராத்திரியே அவள் ஒரு படகை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு பிறந்தகம் போய் விட்டால் தேவலே.'

'ஏன்?'

'அவள் தேவ கன்னிகை போல் இருக்கிறாள் என்று சொன்னாயே அதற்காக—'

'அதனால் என்ன?'

'அதனால்தான் எல்லாம், பார்ப்பதற்கு அழகாக இருப்பதால் அவள் ஜமீன்தாரை அண்டக்கூடாது.'

'சீ போடா!

'ஆமாம்; தேசம் முழுவதும் தெரிந்த விஷயம் ஆச்சே!'

'அப்படியானால் அவரைப் பார்க்கப் போவது சரியல்ல என்கிறாயா?'

'ஆமாம்.'

'அப்படியானால் அவளுடைய ஆஸ்தி போக வேண்டியதுதானா?'

'சட்டர்ஜீ இந்த வழக்கில் சம்பந்தப் பட்டிருக்கிறார் என்றால் ஆஸ்தி திரும்புவது கஷ்டம்தான். அவள் நல்ல வீட்டுப் பெண் என்கிறாய். சொத்தோடு தர்மத்தையும் இழப்பதா?'

மறுநாள் அந்த ஸ்திரீ மாதவியிடம் விஷயம் எல்லாம் சொன்னாள். மாதவிக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. நாள் முழுவதும் ஜமீன்தார் சுரேந்திர நாதரைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள்.

'சுரேந்திர நாதர்! இந்தப் பெயர் எனக்குத் தெரிந்தது போல் இருக்கிறதே!........ஆனால் அந்த மனுஷருக்கும் இவருக்கும் எவ்வித ஒற்றுமையும் காணோமே!' அந்தப் பெயரை அவள் பல தடவை மனதிற்குள் உச்சரித்த காலமும் உண்டு. ஐந்து வருஷங்கள் ஆகி விட்டன! அவள் அதை மறந்து விட்டாள்; இப்போது திடீரென்று ஞாபகம் வந்து விட்டது.

கனவிலும் தூக்கத்திலுமாக அன்று இரவு எப்படியோ கழிந்தது.

பல தடவை பழைய சம்பவங்கள் ஞாபகம் வந்தன. பல முறை கண்ணீர் விட்டாள். சந்தோஷ குமாரன் அவளுடைய முகத்தைப் பயத்துடன் பார்த்துக்கொண்டே, 'அத்தை! நான் அம்மாவண்டை போகிறேன்' என்று சொன்னான்.

மாதவியே அப்படி பலமுறை யோசித்தது உண்டு. இங்கிருக்க வழி இல்லா விட்டால் காசிவாசம் தானே செய்ய வேண்டும்? சந்தோஷ குமாரனுக்காகத்தான் அவள் ஜமீன்தாரைப் பார்க்கயோசித்தது. ஆனால் அப்படிச் செய்ய வேண்டாம் என்று அண்டை அயலில் உள்ளவர்கள் தடுத்தார்கள். அதைத் தவிர அவள் எங்கே போனாலும் இன்னொரு தகராறு இருந்து கொண்டே யிருக்கும்; அவளுடைய அழகும், இளமையும்! இந்த உபத்திரவம் எல்லாம் இப்போது எதுக்கு என்று அவள் தன்னையே நொந்து கொண்டாள். ஏழு வருஷமாக அவள் அதை எல்லாம் கவனிக்க வில்லை. புருஷன் இறந்து அவள் தன் தந்தை வீட்டுக்கு வந்ததும் அவள் எல்லோருக்கும் 'அக்கா,' 'அம்மா' ஆகி விட்டாள். இந்த கௌரவமான சம்போதனங்களால் அவளுடைய மனசுக்குக் கிழடு தட்டி விட்டது! அழகாவது இளமையாவது! அப்போது அவைகளைப் பற்றி யோசிக்க அவளுக்கு நேரம் இல்லை. அவள் 'அக்கா'; 'அக்கா' கடமைகளை சரிவர செய்ய வேண்டியவள் அல்லவா? ஆனால் இப்போது அவை ஞாபகம் வந்து விட்டன. கவலையும் உண்டாகி விட்டது. அதுவும் அந்த இளமையைப் பற்றின பேச்சு! வெட்கத்துடன் உலர்ந்த சிரிப்பு சிரித்து, இங்கே இருப்பவர்கள் எல்லாரும் மிருகங்களா? என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். ஆனால் அவளுடைய நினைவு தவறு; அவளைப் போலவே எல்லோருடைய மனசும் இருபத்தோராவது வயசிலேயே கிழடாகி விடுமா, என்ன!

மூன்று நாள் கழித்து ஜமீன்தார் புதுசாக ஒரு புகழைச் சம்பாதித்து விட்டார் என்ற செய்தி கிராமத்தில் பரவியது. உடனே அவள் சந்தோஷ குமாரனின் கையைப் பிடித்துக் கொண்டு, வேலைக்காரியை முன்னால் அனுப்பி, அவள் படகில் ஏறி உட்கார்ந்தாள்.

வீட்டுக்குப் பக்கத்திலேயே ஆறு. படகோட்டியிடம், 'சோமாபுரம் போக வேணும்,' என்று சொன்னாள்.

சோமா புரத்தில் பிரமீளாவின் புக்ககம் இருந்தது. கோலகிராமத்திலிருந்து பதினைந்து குரோச தூரம். பிரமீளாவை ஒரு முறை பார்த்து விட்டுப் போகலாம் என்று மாதவிக்கு ஆசை.

பொழுது விடிந்ததும் படகு புறப்பட்டது. நீரோட்டத்தின் போக்கோடு படகு சென்றது. காற்று அனுகூலமாக இல்லாததால் படகு மூங்கில்களின் நடுவிலிருந்தும் முள் மரங்களின் அருகிலிருந்தும் தட்டித் தடவிச் சென்றது. சந்தோஷ குமாரனுக்குப் பரம ஆனந்தம்; படகிலிருந்தபடியே மரங்களின் இலைகளைப் பிடுங்கி எறிந்து கூச்சல் இட்டுக் கொண்டிருந்தான்.

'காற்று நிற்கா விட்டால் நானே

வேதாந்த ரகசியங்கள்

—ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள்

மறந்தும் பாவம் செய்யாமை:—

மனிதரும் மதங் கொண்ட யானையும்.

கொழுத்து மதஜலம் பொழிந்து கொண்டிருக்கின்ற ஒரு யானையினது முன் செல்வதற்கு ஒருவரும் துணியார். ஏனெனில், யார் அதன் பக்கத்தில் செல்லுகின்றார்களோ அவர்களை அது நிச்சயமாகக் குத்திக் கொன்றுவிடும். அது போல், ஒருவன் செய்கின்ற கொடும் பாவச் செயல்கள் மதங்கொண்ட யானைகட்குச் சமமாகுமென அறிய வேண்டும். எவன் மத யானைக் கூட்டத்தினிடையில் அகப்பட்டுக் கொள்ளுகின்றானோ அவனை அம்மதகரிகள் தமது கொம்புகளால் குத்திக்கிழி எமனுலகுக்கனுப்பிவிடும். ஆனால் இந்த பிரத்தியக்ஷ யானைகட்கு இச்சென்மத்தில்கிடைத்துள்ள சரீரத்தை மட்டுமேகொல்ல முடியும். மஹா பாவங்களாகிய அப்பிரத்தியக்ஷ மதயானைகளோவென்றால், எவ்வளவோ ஜென்மங்களைக் கெடுத்துச் சிவனைச் சிதைத்து விடும். ஆதலால், வாழ்க்கையின் மேன்மையையும் அபி விருத்தியையும் விரும்புகின்றவர் யாரும் கொடிய

மத்தியானம் தான் சோமா புரம் போக முடியும்' என்றார்கள் படகோட்டிகள்.

அன்று மாதவி ஏகாதசி விரதம். ஆனால் சந்தோஷ குமாரனுக்காகப் படகை எங்காவது நிறுத்தி சமைத்துப் போட வேணும். படகோட்டிகள், 'திஸ் தேபாடாவின் கடைவீதியில் படகைக்கட்டி விட்டால் ரொம்ப சல்லிசாகப் போய்விடும். அங்கே எல்லா சாமானும் கிடைக்கும்,' என்றார்கள்.

'சரி அண்ணே! பையனுக்கு எப்படியாவது பத்து பதினொரு மணிக்குள்ளே சாப்பாடு கிடைக்கும் படி செய்' என்றாள் வேலைக்காரி.

பாவச் செயல்களைச் செய்யாதிருக்க வேண்டுமெனத் தனியே ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படி இக்கதை வற்புறுத்துகின்றது.

கருமப்பற்று:—

குருடனைக்காத்த கிணற்றுப்புல்.

ஒரு சமயம் சிறிது கண் மங்கிய ஒரு வழிப்போக்கன் யாத்திரை செய்து போகும்பொழுது வழிதவறி ரோட்டுக்குச் சமீபத்தில் புற்களடர்ந்திருந்த ஒரு பாழுங் கிணற்றில் விழுந்தான். அப்பொழுது அவன் திகிலடைந்து அக்கிணற்றிலடர்ந்துண்டாயிருந்த புற்களைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு அவ்வழியே செல்கின்ற ஜனங்களின் செவியிற்படும்படி உரத்த சத்தமிட்டுக் கேட்போர் பரிதபிக்கும்படி கதறிக் கொண்டிருந்தான். இவ்விசனகரமான குரலைக் கேட்ட யாத்திரைக் காரர்கள் பர பரப்புடன் சென்று கிணற்றைப் பார்த்தார்கள். அப்பொழுது பேரிருள் சூழ்ந்திருந்த அக்கிணற்றில் பலமற்றவைகளாகிய சில பசும் புற்களைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த அவனது பேராபத்தான நிலைமையைக் கண்டவுடன் வழிப்போக்கர்களுக்கு இரக்கமுண்டாகி அவன் பிடித்துக் கொண்டு மேலே ஏறிவரும்படிக்கு ஒரு நல்ல பலமுள்ள கயிற்றைக் கிணற்றினுள்ளே விட்டார்கள். வடக்கயிற்றைக் கண்ட அக்கணமே அவன் பரமஆனந்த மடைந்தவனாய் முன் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த புற்களை விடுத்து அக்கயிற்றைக் பிடித்துக் கொண்டு மேலே ஏறிவந்து உயிர் தப்பினான். இது போல அஞ்ஞானமாகிய காரிருளால் மூடப்பட்டுள்ள சம்சாரமாகிய கிணற்றினுள் வீழ்ந்து பரிதவிக்கின்ற மானிடர்க்கு சதாசாரம், சத்திய நிஷ்டை, (உண்மை பேசுதல்) ஜீவகாருண்யம், தெய்வ பக்தி, பயனை விரும்பாது புண்ணியஞ் செய்தல், கடவுளை பல மூர்த்திகளாக வழிபடுதல், ஜபம், தபம், யோகம் பூஜை, சற்கிரந்த பாராயணம், பிராணாயாமம், தியானம் என்பன வெல்லாம் கிணற்றில் வீழ்ந்தவனுக்குப் புல்லைப் போன்று முதன் முதலில் பிடித்துக் கொள்ளுதற்குரிய சாதனங்களாம். ஞானமாகிய வடக்கயிறு கிடைக்கும் வரையில் மேற்கூறிய சற்கரும நியமங்களை நன்றாகப் பிடித்துக்கொள்ள வேண்டியது (அதாவது சிரத்தையோடு அநுஷ்டித்து வரவேண்டியது) அத்தியாவசியகமாகும். வடக் கயிறு கிடைக்கின்றவரை கிணற்றிற் கிடந்தவன், புற்களைப் பிடித்துக் கொள்ளாதிருப்பானாயின் அத்தண்ணீரிலேயே மூழ்கி இறக்க வேண்டியவனாவான்.

அது போல், பிரம்மஞானம் சித்திப்பதற்கு முன்னர், எவன் சற்கர்மாநுஷ்டானங்களைச் செய்யாது அலக்ஷியஞ் செய்கின்றானோ அவன் இகபரமிரண்டினையும் இழந்தவனாய், பாமரர் போற்றுந் தலைவனாய் துன்பமிக்கதாமிவ்வுலக வாழ்வெனும் பாழ்ங்கிணற்றில் மூழ்கியவனாய் எல்லாக் கஷ்டங்களாலுஞ் சூழப்பட்டவனாய் கரையேற வகையறியாதவனாய் பரிதவிப்பான்.

இதன் சாரம்.

மோக்ஷமடைவதற்கு விரும்புகின்றவர்கள் அம்மோக்ஷத்தின் முக்கிய காரணமாகிய (அதாவது மிகவும் அந்தரங்க சாதனமாகிய) அபரோக்ஷ ஞானம் கிடைக்கின்ற வரையில்

வெளிச் சாதனமாகிய சதாசாரம் தொடங்கி தியானம் ஈறுகவுள்ள சுப கர்மங்களையும் அத்தியாவசியமாய் அனுஷ்டித்து வரவேண்டியதாம்.

அபேதஞானம் :—

(ஒரு நாய் இருநாயான விந்தை)

நாயும் கண்ணாடி யுத்தமும்

இராமனென்பவன் ஒரு நாயை வளர்த்து வந்தான். அது சமயம் இராமனுடைய படுக்கை யறையிலிருந்ததோர் பெரிய நிலைக்கண்ணாடிக்குள் தன்னைப் போன்ற ஒரு நாயைப் பார்த்தவுடன் அங்கு வேறோர் நாய் இருக்கின்றதென நினைத்து நாய்களின் ஜாதி சுபாவத்தை ஒரு சிறிது காண்பிக்கலாயிற்று. உடனே கண்ணாடிக்குள் இருந்த நாயும் அவ்விதமான சேஷ்டைகளை அபிநயஞ் செய்தது. (அவ்வாறே திருப்பிக் காட்டியது) பல பல மொழிவதேன்? சொற்ப நேரத்திற்குள் இரண்டு நாய்களுமாகச் சேர்ந்து ஒரு பிரமாதமான யுத்தஞ் செய்தது என்று சொன்னால் போதுமல்லவா? பெருங் கோபாவேசத்தால் கண்ணாடியிற் கடித்தலும் முட்டலுமாகிய பல காரணங்களால் இரண்டு நாய்களுடையவும் பற்களிலிருந்து இரத்த வெள்ளம் புறப்பட்டுப் பெருகவுந் தொடங்கிற்று. கண்ணாடியிலுள்ள நாய், 'தனது, 'உருவத்தின் நிழல்' என்று இராமனது நாய்க்குத் தெரிந்திருக்குமாயின், இப்பெருங் கலகத்திற்குக் காரணமே இருந்திராதல்லவா? இது போல ஒவ்வொருவரும் இப்பூலோகமாகிய கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அதில் தோற்றுகின்ற உருவங்களெல்லாந் தங்களுடைய பிரதி ரூபங்களென்று தெரிந்து கொள்ள முடியாதவர்களாய், அந்நாயினைப் போல ஒவ்வொருவருடனும் வீணே குத்திச் சண்டையிட்டு, பிறர் இம்சை, சதியாலோசனை, துரோகம், நிந்தை முதலிய நீசத் தொழில்களைப் புரிந்தும் வருகின்றார்கள். கண்ணாடியிற் கண்ட நாயினது பற்களினிடையே தோன்றியொழுகிய இரத்தம் தன்னுடையதே யெனவுணர வியலாதநாயினைப் போல, பிறர் மீது காண்கின்ற குற்றங்கள், தம் மீதே இருக்கின்றன வென்பதை அறிவீனர்கள் உணருவதில்லை.

இக்கதையின் சாரம்.

காணப்படுகின்ற சகல சராசரங்களும், தன்னுடைய ரூபமே என்று எந்த மஹாபுருஷன் திடமாய் நம்புகின்றானோ அம் மஹாத்துமாவிற்கு விரோதியாகவோ அல்லது துரோகியாகவோ உலகத்தில் ஒரு பிராணிகளுமிரா. இவ்வுண்மையை (அதாவது தனது சுவரூபமே) என்று உறுதியாக நம்பி யாவரும் மஹாசாந்த நிலையை யடைந்து அச்சமரச பாவனையுடனேயே உலகுடன் பழகி வருவார்களாக!

துரேண்ணம் துன்பந்தரும் :—

ஜோஸ்யரின் தந்திரமும் மாயமாய்ப்போன ராஜகுமாரியும். (வெள்ளத்தில் மிதந்துவந்த காடிப்பெட்டி.)

முன்னொரு காலத்தில் ஒரு அரண்மனையில் நம்பிக்கையுள்ள ஒரு ஜோஸ்யன் வசித்து வந்தான். அந்த ஜோஸ்யனது சொற்கள் அரசனுக்குக் கடவுளின் வாக்கியம் போல் விளங்கின. எந்தக் காரியஞ் செய்ய வேண்டிய

தாயிருந்தாலும் ஜோஸ்யருடன் ஆலோசியாது செய்கின்ற வழக்கமே இல்லை. அரசனுக்கு ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. விதி முறைப்படி செய்ய வேண்டிய மங்களச் சடங்குகளை யெல்லாஞ் செய்து முடித்த மேல் ஜோஸ்யரைவரவழைத்துச் சாதகமெழுதும்படி உத்தரவிட்டான் அரசன். ஜோஸ்யர் குழந்தையினுடைய கிரக நிலைமைகளை ஸ்புடஞ் செய்து அஷ்டவர்க்கம் போட்டுப் பார்த்ததில் இந்த ராஜ புத்திரியை விவாஹஞ் செய்கின்றவன் ஏகசக்கிராதிபதியாயும் சர்வகலா வல்லவனாயும் தீர்க்காயுசுள்ளவனாயு மிருப்பான் என்று தெரிந்து கொண்டார். படிக்கு மன்பர்களே! இதற்கிடையில் ஜோஸ்யருடைய மனநிலைமை மாறியதானது பின்னர் அவர் அநுபவிக்கப் போகின்ற மகா தசையின் வைபவ மல்லவா என்று நினைக்க வேண்டியதாய் வருகின்றது! இராஜ குமாரியை எவ்விதமாவது நமக்குச் சுவாதீனஞ் செய்து கொள்வோமானால், அவளுடைய யோக பலத்தினால் நமக்கு ஏகசக்கிராதிபத்தியஞ்சித்திப்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆதலால் அதற்குத் தக்க உபாயங்களைத் தீர்மானித்து இது முதலே ஏற்பாடு செய்துவைக்க வேண்டியது மிக்க அவசியமாம் என நினைத்து சாதகத்தில் வெகு யுக்தியை நுழைத்து அதன் பலன் முழுதையும் சிலேடையாகவே எழுதித் தீர்த்து விட்டார் ஜோஸ்யர்!

அரசனோ வெனில் சிசுவினது பாலியகாலம் கடக்கும் வரையில் சாதக பலன்களை யறிந்து கொள்ள வேண்டுமென அவ்வளவாகக் கருதவில்லை. கன்னிகையின் விவாகப் பருவம் கிட்டிய பொழுது ஜோசியரைத் தருவித்து, சாதக பலன்களைக் கூறும்படி கேட்டான் அரசன். ஜோசியருடைய மனோ ராஜ்ஜியம் முன்னினும் பன்மடங்கு செழிக்கலாயிற்று. பலன் சொல்வதில் மிகவும் விசனமுண்டாவது போல் அபிநயித்துக் கொண்டிருக்கின்ற ஜோசியரைப் பார்த்து 'உண்மையைக் கூறுவதில் எக்காரணங் கொண்டும் அதைரியப் படவேண்டாம்; உள்ளதை உள்ளபடி வெளியிட்டே சொல்லுதல் வேண்டும்' என வேந்தன் கேட்டுக் கொண்டான். ஆயினும் யாதொன்றையும் கூறாமையால் அரசனுக்கு விசனம் அதிகமாவதைக் கண்ட ஜோஸ்யர் தனக்கு ஏதேனும் கேடு சம்பவிக்குமோ எனும் பயத்தால் முடிவில் இங்ஙனம் தெரிவித்தார் :—

'என் அரசே! தாம் ஏகாந்தமாயிருக்கும் பொழுதே சொல்லத் தக்கது இச்சாதக பலன். அதற்கு........ .... அனைத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்' எனக்கூற, மகா சாதுரியமான அவ்வசனத்திற்கு அரசன், சம்மதித்தா னென்று சொல்லத் தேவையில்லை! 'இந்த ராஜகுமாரி ஜெனித்த காரணத்தினால்தான் தங்களுக்குப் புத்திர சந்தான முண்டாகவில்லை; பலவிதமாகக் கஷ்டங்கள் இப்பெண் குழந்தையினால், எனது மகாப் பிரபுவுக்கு நேரிடப் போகின்றது; ஆதலால் இப்பெண்ணை எங்கேனும் விட்டு விட்டாலல்லது, இத்தோஷங்கட்குப் பரிகாரமில்லை யென்று திருவாய் மலர்ந்தருளி, அவ்வண்ணமே அரசனை நம்பும்படிக்குஞ் செய்து விட்டார் நமது ஜோஸ்யப் பண்டிதர். இதைக் கேட்ட அரசன்

இன்னது செய்வதென்னத் தோன்றாதவனாய் 'அதற்குச் செய்ய வேண்டிய பரிகாரத்தை அக்கணமே தெரிவிக்கும்படி ஜோசியரிடஞ் சொல்ல, ஜோசியரும் பின் வருமாறு தெரிவிக்கலானார்—: 'ஜென்மாந்தரக் கடனாய் வந்து பிறந்த கன்னிகையினுடைய எல்லாக் கடனையும் தீர்ப்பதற்காக, அநேக விதமான ஆபரணங்களையும் பற்பல நவரத்தினங்களையும் ஒரு பெட்டியினுள் வைத்து கன்னிகை தூங்கும் பொழுது அத்தூக்கத்திற்கு இடையூறின்றி மெல்லெனஅப் பெட்டிக்குள் வைத்து ஒருவரு மறியாது நள்ளிரவிலே எடுத்துச் சென்று சமுத்திரத்தை நோக்கிச் செல்லும் நதியில் விட்டு விடவேண்டும். இவ் விதம் ஜோஸ்யரிட்ட கட்டளைப்படி அரசனும் வேலையாளரைத் தருவித்து உத்திர விடலானான். ஷை வேலைக்காரர்கள் ஜோசியருடைய கபட எண்ணத்திற்கு அனுகூலமாக விருப்பவர்கள். அவர்களிடம் அப்பெட்டியை ஆற்றில் விட்டுத் தள்ளிக் கொண்டே தனது வீட்டிற் கொணர்ந்து சேர்க்கும்படி ஜோசியர் அந்தரங்க மாய்ச் சொல்லி ஏற்பாடு செய்திருந்தார். அவ்விதமே பெட்டியை ஆற்றில் விட்டுப் பின் தொடர்ந்து வரும் பொழுது ஓர் சக்ரவர்த்தியினது அரும்புதல்வன் தனது பரிவாரங்களுடன் வேட்டையாடித் திரும்பி வந்து கொண்டிருந்தான். இதைக் கண்ட வேலைக்காரர்கள் பயந்து கரைவழியாகச் சிறிது தூரம் முன்சென்று, பின்னர் பிடித்துக் கொள்ளலா மெனக் கருதி பெட்டியை அங்ஙனமே விட்டு விட்டுப் போயினர். அப்பால் தெய்வாதீனமாய் அவ்விளவரசன் பெட்டியைக் காண்டலும் அதனை யெடுத்துத் திறந்து பரிசோதிக்கலானான். பெட்டியைத் திறந்தவுடன் அதற்குள் வெகு ரூபலாவண்ணியமுள்ள ஒருராஜ கன்னிகை நித்திரை செய்வதையும் பற்பல இரத்தினாபரணங்களிருப்பதையுங்கண்டு ஆச்சரியமுற்று, பெண்மணியுடன் அவற்றை யெடுத்துக்கொண்டு அப்பெட்டியினுள் (தான் வேட்டையாடிப் பிடித்து வந்த) ஒரு பெரிய புலியை அடைத்து முன்போலவே முத்திரையிட்டு ஆற்று வெள்ளத்தில் விட்டு விட்டான். இவ்வுண்மையை யுணராது முன்பு சென்ற வேலைக்காரர்கள் வெகு சந்தோஷத்துடன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஜோசியரின் வீட்டிற் சென்று அவர் கட்டளையிட்டவண்ணம் 'அலங்கரித்த ஒரு வீட்டினுள்' வைத்தனர். இவ்வளவும் கைகூடி வந்ததினால் உண்டான பெரு மகிழ்ச்சியைத் தாங்கமுடியாதவராகிய ஜோசியர், அவ் வீட்டினுட் சென்று "கதவை நான் திறக்கச் சொன்னாலன்றித் திறக்க வேண்டாமெனப்" பெருமையுடன் ஆக்ஞை செய்து, கதவினை உள்ளே தாளிட்டுக் கொண்டு பெட்டியைத் திறந்தார். பசி தாகத்தாலும் தன்னைப் பெட்டிக்குள் அடைத்ததினாலும் மகா கோபா வேசங்கொண்டுள்ள புலி, தனக்கெதிரில் தோன்றிய ஜோசியரிடம் தன்னுடைய பராக்கிரம முழுதையும் ஏககாலத்திற் காட்டியது. 'ஆகா! என்ன கஷ்டம்! சக்கிரவர்த்தியாக வேண்டுமென விரும்பிய ஜோசியர்', அப்புலியின் வாய்க்கு இரையாக அல்லவோ ஆகிவிட்டார்! என்ன பரிதாபகரம்!

இதன் சாரம்

யாரொருவன் தன்னுடைய

துரெண்ணத்தை நிறைவேற்றுதற்காக உண்மையை மறைத்துக் கபட தந்திரங்களால் யாதொரு குற்றமுஞ் செய்யாத நல்லோர்களை வஞ்சனை செய்வதற்குத் துணிகின்றானோ அவனுக்கு ஜோசியனடைந்த ஆபத்தைப்போலும் வெகு கொடிதான விபத்துக்கள் சம்பவிக்கும். ஆதலால் ஒவ்வொருவரும் தனக்குக் கிடைத்துள்ளதைக் கொண்டு திருப்தியடைந்தும், கபட முதலிய தீக்குணங்களுக்கு அடிமையாகாமலும் மெய்யே பேசுகின்றவர்களாயும் பரிசுத்தர்களாயும் இருத்தல் வேண்டுமென்பதாம்.

புத்தியின் சக்தி :—

பச்சைக் குடமும் பழுத்த ஞானியும்.

சூளையில் வைத்துச் சுடப்பெறாத ஓர் மட்பானையில் தண்ணீர் வார்த்து அரிசி களைவது பிரயாசமாகும். ஏனெனில் (பச்சை மண்ணினால் செய்திருக்கின்றமையின்) தண்ணீர் விட்டவுடன் அப்பானை கரைந்து விடும். ஜலத்தைத் தாங்கி நிற்பதற்காதாரமாகிய மண்பானை கரைந்து விடுவதால் ஜலம் முழுவதும் வெளியே போக வேண்டியதேயன்றி வேறுகதியில்லையல்லவா? அது போல் உலகத்தினைக் கடந்து அதற்கப்பா லுள்ளதாகிய பிரும்ம சமாதி (அக்கினி)யினால் எல்லாவற்றினும் மேலானதாம் வண்ணம் ஸமஸ்காரஞ் செய்யப்படாத ஒருவனுடைய புத்தி, மேற்புகன்ற மட்பாத்திரத்திற்குச் சமமாம். தனது ஆத்தும சொரூபத்தினும் வேறல்லாததாகிய பிரம்மாநு சந்தானமாகிய ஜலத்தைத் தத்துவ ஆராய்ச்சியாகின்ற புத்தியில்—விட்டு..........சமரச ஆனந்தமாகிய அரிசியைப் பக்குவஞ் செய்து, நிஜானந்த சுவானுபவமாகிய போஜனத்தால் திருப்தி யடைந்து எல்லாவற்றையுங் கடந்ததான 'பராவஸ்தையில்' சாந்தமா யிருப்பதற்கும் ஒருவராலும் முடிவதில்லை. ஏனென்றால் பெரிய எண்ணமாகிய பொருளைத் தாங்குவதற்கு அதனிலும் எத்தனையோ பெரிதாகிய புத்தி வேண்டப் படுகின்றது. புத்தி பலமில்லாதவர்களின் எண்ணங்களாகிய சக்திகள் பச்சை மட்குடத்தில் வார்த்த நீரே போல் வீணே போய் விடுகின்றது.

குற்றம் பற்றாதிருத்தல் :—

பிஞ்சும் பழமும்

புளியமரத்தின் காய்கள் பிஞ்சாக இருக்கும்பொழுது அதன் ஓடானது அதற்குள்ளே இருக்கின்ற சதையுடன் ஒட்டிக் கொண்டே யிருக்கும். அக்காய்கள் நன்றாகப் பழுத்து விட்டால் ஓட்டுக்கும் பழத்தின் சதைக்கும் யாதொரு சம்பந்தமு மில்லாததாய்க் காணப்படுகிறது.

அது போல் அஞ்ஞானிகள் புளியின் பிஞ்சுக்கு நிகராவர். இராகம், துவேஷம், முதலிய கெட்ட செய்கைகள் அவர்களுடன் கலந்து உறவாடும். ஆத்தும ஞானிகள் பழுத்த பழங்கட்குச் சமபாவர். முற்கூறிய தோஷங்கள் (குற்றங்கள்) இவர்களைப் பற்றாது அகன்றே இருக்குமெனவறிக.

தமயனின் கடிதம்-11

(சென்ற இரண்டு ஆண்டுகளாக நமது கிராமத்தில் மழை பெய்யாமல் வயல்கள் காய்ந்தன. வயல் காய வயிறு காய்ந்தது' இவ்வாண்டு ஓர் நாள் நல்ல மழை பெய்தது. அன்றிரவு தவளைகள் களிவெறி கொண்டு கத்தின. எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. நானும் களி வெறி கொண்டு கத்தினேன் அடியில் வருமாறு.)

கொட்டிடு கொட்டிடு வானே!—ஏரி
குளங்கள் நிறைந்திட வானே!
தட்டுத் தடங்க லின்றி—பசித்
தணல் அவிந்திடக் கொட்டு! 1

மாதமும் மாரியாய்க் கொட்டு—எங்கள்
மனைக்கடல் களியலை வீச!
பாதகம் பயிர்வகைக் கின்றி—பட்ட
மரமும் தழைத்திடக் கொட்டு. 2

வானே நீ தவறாது பெய்யின்—எங்கள்
வாழ்வில் களிவீறு பொங்கும்
கானையும் விளைபுல னாக்கி—நாங்கள்
காணுவோம் கண்குளிர் பயிர்கள்! 3

ஏர்வளம் உயர்ந்திடக் கொட்டு—எங்கள்
இல்நலங் கண்டிடக் கொட்டு
பார்சிறப் புற்றிடக் கொட்டு—கொல்லும்
பசிப்பிணி யகன்றிடக் கொட்டு. 4

வஞ்சம் பொய் சூதுக ளின்றி—உலக
வாழ்வு சிறந்திடக் கொட்டு

"*தேவி தாஸன்*"

கஞ்சம்போ லெம்முகமும் மலர—அதிற்
காண்மது போலெண்ணம் வளர்க. 5

சாரை சாரையாய் மக்கள்—வயல்
சார்ந்து பணிமிகச் செய்ய
தாரை தாரையாய்க் கொட்டு—அறம்
தழைத்தினி தோங்கிடக் கொட்டு. 6

சஞ்சலம் தீர்ந்திடக் கொட்டு—வீண்
சழக்குகள் ஒழிந்திடக் கொட்டு
பஞ்சம் அஞ்சிடக் கொட்டு—நீ
பாட்டம் பாட்டமாய்க் கொட்டு 7

இடித்து முழங்கியே கொட்டு—மிடி
இல்லை யினியென்று வானே!
மடிந்தன பகைக்குலம் என்றே—கண்கள்
மயங்கிட மின்னியே கொட்டு- 8

பெருத்த கருமியைப் போல—நீ
பிசு பிசு வென்று பெய்யேல்!
தருமியைப் போல்பொழி வானே!—சோர்வுத்
தாகந் தணிந்திட வானே! 9

அளவுக்கு மிஞ்சிடில் வானே—தேவ
அமுதம் ஆலமா மென்பர்
அளவோ டினிதுநீ பொழிவாய்—நின்
அருளுக்கு வாழ்த்துகள் செய்வோம்! 10

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

—வெ. சா.

பிரசங்கம் 6

ஒரு நாட்டின் அந்தஸ்தை உயர்த்துவதெப்படி?

நம்முடைய தேசத்தின் தன் மதிப்பை எப்படிக் காப்பாற்றுவது என்பது தான் இன்று நான் பேசப்போகும் விஷயம். நமது தேசத்தின் இன்றைய அந்தஸ்து என்ன? இன்றைய உலகத்தில் நமது நாடு, நமது அரசாங்கம் இவற்றின் நிலைமை யென்ன? நமது அரசியல் அறிஞர்கள் சிலர், சீனா ஒரு பாதி குடியேற்ற நாடு என்று கூறுகின்றனர். அதாவது, அன்னாம் தேசம் பிரான்சின் குடியேற்ற நாடாகவும், கொரியா ஜப்பானின் குடியேற்ற நாடாகவும் இருப்பதைப்போல் சீனா இல்லை. ஆனால் எல்லா நாட்டினரும் இங்கே சலுகையோடு வாழ்கிறார்கள். இதனால் சீனாவை ஒரு பாதி குடியேற்ற நாடு என்று கூறுவது பொருந்தும் என்பதுதான் மேற்படி அரசியல் அறிஞர்களுடைய வாதம். ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தில் மேற்கண்ட அன்னாம், கொரியா முதலிய நாடுகளை விட சீனா ஒரு படி கீழாகவே இருக்கிறது.

ஒரு காலத்தில் சீனா உலக வல்லரசுகளில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. செல்வாக்கும், நாகரிகமும் இதற்கு நிறைய இருந்தன. இப்பொழுது பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் முதலிய தேசங்கள் உலக அரசியலில் எந்த ஸ்தானத்தை வகித்திருக்கின்றனவோ, அந்த ஸ்தானத்தை முன் காலத்தில் நமது சீனா வகித்திருந்தது. அப்படி உன்னத ஸ்தானத்திலே நமது நாடு இருந்தமையாலும் நமது மூதாதையர்கள் அவ்வளவு புகழ் பெற்று விளங்கி வந்ததனாலும் தான் இப்பொழுது நாம் ஒரு குடியேற்ற நாடாகக் கூட இல்லை யென்று நான் சொல்லுகிறேன். உச்ச நிலையிலே யிருந்த சீனா எப்படி ஒரு சறுக்கலில் பதினாயிரம் அடி பள்ளத்திலே வந்து விழுந்து விட்டது! இதற்கு ஒரே ஒரு காரணந் தான் உண்டு. அது தான் நமது தேசிய உணர்ச்சியை நாம் இழந்து விட்டது. அப்படி இழந்து விட்டதனால்தான் நம்முடைய ராஜ்யமும் நாளுக்கு நாள் சீரழிந்துகொண்டு வந்து விட்டது. ஆகையால் நமது தேசிய அந்தஸ்தை நாம் மீண்டும் பெற வேண்டுமானால் நமது தேசிய உணர்ச்சியையும் கிளப்ப வேண்டும். அப்படி தேசிய உணர்ச்சியைக் கிளப்

புவதற்குச் சோபானமாக இரண்டு முக்கிய நிபந்தனைகளையும் நாம் பூர்த்தி செய்ய வேண்டும். முதலாவது நாம் இப்பொழுது மிக ஆபத்தான நிலை யிலிருக்கிறோம் என்பதை ஜனங் களுக்கு உணர்த்த வேண்டும். இரண் டாவது அந்த ஆபத்தை உணர்ந்து நமது புராதன சமுதாய அமைப்பு களாகிய குடும்பம், ஜாதி, இவைகளை ஒன்று சேர்ப்பித்து தேசிய அமைப் பாக மாற்ற வேண்டும். இதை நாம் நிறைவேற்றி விட்டோமானால் நமது நாற்பது கோடி மக்களும் ஒற்றுமை யாக இருந்து போராடுவார்கள். இப் பொழுது நாம் எவ்வளவு கீழான நிலை மை யிலிருந்த போதிலும் இந்த ஒற்று மையின் விளைவாக மேலுக்கு வந்து விடுவோம். ஆகையால் தற்போதைய நமது நாட்டின் நிலையை உணர வேண் டும்; பின்னர் ஒற்றுமைப் பட வேண் டும். நமது தேசிய உணர்ச்சியைத் தூண்டுவதற்கு இவையிரண்டும் முக் கியமானவை. இந்த முக்கியத்துவத் தை நீங்கள் மட்டும் உணர்ந்தால் போ தாது. நமது நாற்பது கோடி மக்க ளுக்கும் இதனைத் தெரியப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் இதனை உணர்கிற வரை நீங்கள் இந்த வேலை யைச் செய்ய வேண்டும். நமது பழைய தேசிய உணர்ச்சி இப்பொ ழுது தூங்கிக் கிடக்கிறது. அதனை நாம் விழிப்பித்தல் வேண்டும். அப் படி விழிக்கச் செய்தால்தான் நாம் ஒருபடி முன்னேறலாம். அதாவது நம்முடைய தேசிய அந்தஸ்தை—தன் மதிப்பை—எப்படி நிலை நிறுத்து வது என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யலாம்.

ஒரே ஒரு வழியைப் பின்பற்றி மட் டும் சீனா முற்காலத்தில் உன்னத ஸ்தா னத்தை அடையவில்லை. ஒரு தேசம் எப்படி மேன்மை யடைகிறது என்று பார்த்தோமானால் சாதாரண மாக முதலில் தனது ராணுவ பலத் தைப் பெருக்கிக் கொண்டு பின்னர் தனது கலைஞானத்தை விர்த்தி செய்து கொள்வதினாலேயேதான். ஆனால் அந்த நாடும் அந்த நாட்டின் அர சாங்கமும் நிரந்தரமான ஒரு அந்தஸ் தை அடைய வேண்டுமானால் அது ஒழுக்க முடையதா யிருக்க வேண் டும். அப்பொழுதுதான் மற்றவர் களுடன் அது சமாதானமாக வாழ முடியும். முற் காலத்தில், ஆசியா கண்டத்தில் மங்கோலியர்கள் மிகவும் வலிமையுள்ளவர்களா யிருந்தார்கள். கிழக்கில் சீனாவையும் மேற்கில் ஐரோப் பாவையும் அவர்கள் தங்கள் ஸ்வா தீனப் படுத்திக் கொண்டார்கள். ஆயி னும் அந்த மங்கோலிய ஜாதி நிலைத்து வாழவில்லை. ஒழுக்கக் குறைவுதான் இதற்குக் காரணம். மங்கோலியர்களை விட சீனர்களின் ஒழுக்க நிலை மேம்பாடுடையதாக இருந்தது. அதனாலேதான் மங்கோலி யர்கள் சீனாவை ஆக்கிரமித்துக் கொண்ட போதிலும் சீன ஜாதிக்குள் ளேயே ஐக்கியமாகி விட்டார்கள். இதே மாதிரிதான், மஞ்சு ஜாதியின ரும்—இவர்கள் இரண்டு முறை மிங் வமிசத்தினரால் முறியடிக்கப் பட்ட போதிலும்—சீன ஜாதிக்குள் ஐக்கிய மாகி விட்டார்கள். நமது ஜாதியின் மகத்தான ஒழுக்க முறையின் காரண மாக நம்முடைய ராஜ்யாதிகாரம் வீழ்ந்து பட்டபோதிலும், நமது ஜாதி அழிந்து படவில்லை. ஆனால், மற்ற அந்நிய ஜாதிகளையும் நமது ஜாதிக்குள் ஐக்கியப் படுத்திக் கொண்டு விட் டோம். ஆதலின் நமது ஜாதியின்

கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டு மானால், நமது புராதன ஒழுக்க முறையைப் பின்பற்றி நடக்க வேண்டும். அப்பொழுதுதான், நமது தேசிய அந்தஸ்தும் உயரும்.

சீனாவின் புராதன ஒழுக்க முறைகளைச் சீனர்கள் இன்னும் மறந்து விடவில்லை. அந்த ஒழுக்க முறைகள் தான் யாவை? முதலில் ராஜபக்தி; பெற்றோரிடம் பக்தி; பின்னர் தயையும் அன்பும்; அதற்குப் பிறகு நன்றி மறவாமை, நியாய மனப்பான்மை; அதற்குப் பின்னர் சௌஜன்ய பாவம், சமாதான நோக்கம். இப்பொழுது கூட சீனர்கள் இந்தப் புராதன ஒழுக்க முறைகளைப் பற்றி அடிக்கடி பேசுகிறார்கள். ஆனால் அந்நிய ஜாதியினர் நம்மை ஆதிக்கம் கொண்டு விட்ட பிறகு அந்த அந்நியருடைய கலைஞானத்தின் செல்வாக்கு சீனா வெங்கணும் பரவத் தொடங்கியது. இதன் விளைவாகச் சிலர்பழைய ஒழுக்க முறைகளைப் புறக்கணிக்கத் தொடங்குகின்றனர். நமது பழமையில் என்னென்ன நல்ல அம்சங்கள் இருக்கின்றனவோ அவற்றைக் கிரகித்துக் கொண்டு தீயனவற்றை ஒதுக்கி விட வேண்டுமென்பதை இவர்கள் உணரவில்லை. தற்போதைய சீனாவில் பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் நடை பெறுகிறது. இதனால் பெரும்பாலானமக்கள் எந்த வழியையும் பின்பற்ற முடியாமல் திகைக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் ஓர் ஊருக்கு நான் சென்றிருந்தேன். அங்கு புராதனமான கோவிலொன்றிருக்கிறது. அந்தக் கோவிலின் உள்ளே நுழைந்து சுற்றிப் பார்த்து வருகையில் வலது புறத்திலிருந்த ஒரு சுவற்றின் மீது 'பெற்றோர்களிடம் பக்தி' என்ற வாக்கியம் காணப்பட்டது. ஆனால் இடது புறச் சுவற்றின் மீது ஒன்றும் காணப்படவில்லை. அந்த இடத்தில் ஏதோ ஒன்று எழுதப்பட்டிருந்து அழிக்கப்பட்டிருப்பதாய்த் தென்பட்டது. 'ராஜபக்தி' என்றிருந்த வாக்கியம் கலைக்கப் பட்டிருக்க வேண்டுமென்பதாய்த் தெரிந்தேன். இதே மாதிரி பல கோவில்களில் நான் பார்த்திருக்கிறேன். அதாவது நம்மவரிலே ஒரு சிலர் நினைக்கிறார்கள், 'நமக்குத்தான் குடியரசு ஏற்பட்டு விட்டதே; இனி ராஜ பக்தி எதற்கு?' என்று, முற்காலத்திலே அரசர்கள் இருந்தமையால் அவர்களிடம் பக்தி செலுத்த வேண்டுவது அவசியமாயிருந்த தென்றும், இப்பொழுது அரசர்கள் இல்லாமையால் நமக்கு ராஜ பக்தியும் தேவையில்லை யென்றும் இவர்கள் வாதம் செய்கிறார்கள். இது தவறான வாதம். நமக்கு அரசர்கள் தேவையில்லாமலிருக்கலாம். ஆனால் ராஜ பக்தி தேவையில்லையா? அஃதின்றி நாம் வாழ முடியாதே. ராஜ பக்தி யென்பதை ராஜாங்கத்துக்குப் பக்தி யென்று நாம் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஜன சமுதாயத்திற்கும் நம்முடைய கடமைகளுக்கும் பக்தி செலுத்த வேண்டாமா? ஏதேனும் ஒரு காரியத்தைத் தொடங்கி விட்டோமானால் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை அதினின்றும்நாம்பிறழக் கூடாது. அந்தக் காரியத்தில் நாம் வெற்றி பெறு விட்டால் நமது உயிரையே அதற்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். இதைத்தான் பக்தி யென்று கூறுகிறோம். நமது பெரி

யோர்கள், பக்தியின் எல்லை மரணந்தான் என்ற முடிவுக்கு வந்தனர். அரசர்களிடம் செலுத்துவது தான் பக்தியென்றும், மற்றவையெல்லாம் பக்தியல்லவென்றும் சொல்வது தவறு. தற்போது ஜன நாயகத்தைப் பற்றிப் பேசுகிற எல்லோரும் சீனாவின் இந்தப் பழைய ஒழுக்க முறைகளை அலட்சியப்படுத்துகின்றனர். ஜன நாயகத்தின் கீழ் நாம் அரசர்களுக்குப் பக்தி செலுத்த வேண்டுவது இல்லையானாலும் ஜன சமுதாயத்திற்கும் குடி மக்களுக்கும் பக்தி செலுத்த வேண்டுவது அவசியமாகும். ஒரு தனி மனிதனிடத்தில் செலுத்துகிற பக்தியைக் காட்டிலும் நாற்பது கோடி மக்களிடம் செலுத்துகிற பக்தி மிக உயர்தரத்தது. இதனாலேயே நாம் (ராஜாங்கத்துக்கு) பக்தியுடையவர்களாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறேன்.

பெற்றோர்களிடம் பக்தி செலுத்துதல் என்னும் குணமானது சீனாவுக்கே தனிச் சிறப்புடையதாகும். மற்றச் சமூகத்தினரை விட நாம்தான் இதனை அனுஷ்டான பூர்வமாக நடத்திக் காட்டி வந்திருக்கிறோம். பெற்றோர்களிடம் பக்தி செலுத்துதல் என்னும் இந்த ஒழுக்க முறையானது மானிட சமூகம் அனைத்தையுமே தழுவி நிற்பதாயிருக்கிறது. இது சம்பந்தமான நூல்கள் நமது பாஷையில் ஏராளமாயிருக்கின்றன; வேறு எந்த பாஷையிலும் இல்லை.

தயை, அன்பு இவை இரண்டும் சீனாவின் பிரதானமான ஒழுக்க முறைகள். மோத்ஸே என்ற அறிஞன் இதைப்பற்றி விரிவாக எழுதியிருக்கிறான். "எவ்வித வேற்றுமையும் பாராட்டாமல் எல்லாரிடமும் அன்பு செலுத்து" என்ற அவனுடைய தத்துவம் ஏசுநாதருடைய விசுவ பிரேமைத் தத்துவத்திற்கு இணைந்ததாயிருக்கிறது. நமது முன்னோர்கள் அன்பு செலுத்துதலாகிற இந்தக் குணத்தை அரசாங்க விஷயத்திலும் அனுஷ்டித்துக் காட்டினார்கள். "உன் குழந்தைகளைப் போல் எல்லா ஜனங்களையும் நேசி." 'எல்லா ஜனங்களிடத்திலும் அன்பாக நடந்து கொள். எல்லா ஜீவப் பிராணிகளையும் நேசி' என்பன புராதன காலத்து வாசகங்கள். ஆனால் அன்னியர்களுடைய ஆதிக்கம் சீனாவில் ஏற்பட்ட பிறகு சீனர்களுடைய அன்பு, தயை முதலியன அன்னியர்களுடைய அன்பு, தயை இவைகளுக்குத் தாழ்ந்தவை என்ற எண்ணம் பரவலாயிற்று. ஏனென்றால் சீனாவில் அன்னியர்கள் வந்து ஆங்காங்கு ஆஸ்பத்திரிகளையும் பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தி தங்களிடத்திலேயுள்ள அன்பு தயை முதலிய குணங்களை அனுஷ்டான பூர்வகமாகக் காட்டிவருகிறார்கள். வெளிப்படையாக இங்ஙனம் தங்கள் அன்பையும் தயையையும் தெரியப்படுத்திக் கொள்ளாததின் காரணமாக சீனர்களுக்கு இவ்விரண்டு குணங்களும் அறவே இல்லையென்று அன்னியர்களும் நம்மவர்களிற் சிலரும் கருதி விடுகிறார்கள். ஆனால் சீனர்கள் தங்கள் அன்பையும் தயையையும் செயல் பூர்வகமாகக் காட்டவில்லை யென்றுதான் சொல்ல வேண்டும். ஆதலின் நாம் அன்னிய நாடுகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொண்டு அவை இவ்விரண்டு சுபாவங்களையும் எப்படி

செயல் பூர்வகமாகக் காட்டி யிருக்கின்றன என்பதை அறிந்து நம்மிடத்திலே மங்கிக் கிடக்கும் இந்த இரண்டு குணங்களையும் பிரகாசிக்கச் செய்வோமாக.

அடுத்தது நன்றி மறவாமையும் நியாய மனப்பான்மையும். பிறநாடுகளுடனாகட்டும், நண்பர்களுடனாகட்டும் சம்பந்தம் வைத்துக் கொள்கிற போது நன்றி மறவாமை வேண்டும் என்று நமது முன்னோர்கள் கூறிப் போந்தார்கள். அன்னியர்களைக் காட்டிலும் சீனர்கள்தான் நன்றி மறவாமலிருக்கும் தன்மையர்கள என்பது என் அபிப்பிராயம். வியாபார விஷயங்களில் இதை நிதரிசனமாகக் காணலாம். சீனர்கள் பரஸ்பரம் வியாபார சம்பந்தங்கள் வைத்துக் கொள்கிற போது எழுத்து மூலமான ஒப்பந்தங்கள் செய்து கொள்வது வழக்க மில்லை. வாய் மொழியால் சொன்ன வாக்கைத்தான் அனைவரும் நம்பினார்கள். அவரவர்களுடைய கணக்குப் புத்தகங்களில் அந்த வியாபார சம்பந்தமான விபரங்கள் பதிவு செய்து கொள்ளப்படும். அவ்வளவுதான். ஆனால் ஒரு சீன வியாபாரி ஓர் அன்னிய வியாபாரியிடம் ஆர்டர் கொடுப்பானேயாகில் அதற்கு எழுத்து மூலமான ஒப்பந்தம் தேவையா யிருக்கிறது. சீனாவின் உட் பிரதேசங்களில் வியாபாரம் செய்யும் அன்னியர்கள் சீனர்களுடைய வியாபார நாணயத்தை மிகவும் பெருமைப்படுத்திப் பேசுகிறார்கள். ஆனால் ஜப்பானில் வியாபாரம் செய்யும் அந்நியர்கள் ஜப்பானியர்களுடைய வியாபார நாணயத்தைப் பற்றி அவ்வளவு பெருமையாகப் பேசுவதில்லை.

சீனாவின் நியாய மனப்பான்மை:— சீன ஏகாதிபத்தியம் மிகச் செல்வாக்காக இருந்த காலத்திலும் மற்றொரு நாட்டை அழித்ததே கிடையாது. கொரியா தேசத்தைப் பாருங்கள். பெயரளவில் அது சீனாவுக்கு உட்பட்டிருந்தபோதிலும் உண்மையில் அது சுதந்திர நாடாகவே இருந்தது. 20 வருஷங்களுக்கு முன்னர் வரையில் அது சுதந்திரமாகவே இருந்தது. சென்ற பத்து வருஷங்களுக்குள் தான் அது சுதந்திரத்தை யிழந்து விட்டது. சென்ற ஐரோப்பிய மகா யுத்தம் நடந்துகொண்டிருக்கிற சமயத்தில் ஒரு நாள் ஜப்பானிய நண்பர் ஒருவருடன் உலகப் பிரச்னைகள் பலவற்றைப்பற்றி நான் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஜப்பான், ஜெர்மனிக்கு விரோதமாக நேசக் கட்சியினருடன் சேர்ந்து கொண்ட சமயம். அந்த ஜப்பானிய நண்பர் ஜெர்மனிக்கு விரோதமாக ஜப்பான், யுத்தம் தொடுத்திருப்பதை தான் அங்கீகரிக்க முடியவில்லை யென்றும், ஆனால் ஜப்பானும் இங்கிலாந்தும் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறபடியால் அந்த ஒப்பந்தப்படி அது நடந்தாக வேண்டி யிருந்ததென்றும் கூறினார். அப்பொழுது நான் கேட்டேன்:—"சீனாவும் ஜப்பானும் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கவில்லையா? அந்த ஒப்பந்தப்படி கொரியாவின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமில்லையா'? என்று. இங்கிலாந்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மட்டும் காப்பாற்ற வேண்டும்; சீனாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் புறக்கணித்து விடலாமென்று ஜப்பான் ஏன் கருதுகிறது

தெரியுமா? பிரிட்டன் பலமுள்ள நாடு; சீனு பலஹீனமான நாடு: இது தான் காரணம். ஐரோப்பிய யுத்தத்தில் ஜப்பான் தலையிட்டது நேச வல்லரசுகளின் பலவந்தத்தினுல் தான்; நியாய மனப்பான்மை கொண்டல்ல. ஆயிரக் கணக்கான வருஷங்களாக சீன ஏகாதிபத்தியம் வலுவுள்ளதாயிருந்தது. ஆயினும் கொரியாவின் சுதந்திரம் அழிக்கப்படவில்லை. சென்ற இருபது வருஷங்களாகத்தான் ஜப்பான் வலுத்து வருகிறது. ஆனுல் அதற்குள் கொரியாவின் சுதந்திரம் ஜப்பானுல் அழிக்கப்பட்டு விட்டது. இவ்வொன்றைக் கொண்டே ஜப்பானுடைய நியாய புத்தியைக் காட்டினும் சீனுவின் நியாய புத்தி எவ்வளவோ சிறப்பு வாய்ந்தது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

எல்லோருடனும் சமாதானமாக வாழ வேண்டும் என்ற குணம் சீனுவுக்கு மட்டுமே சிறப்புடையதாகும். இன்றைய உலகில் சீனு ஒன்று தான் சமாதான உபதேசம் செய்கிறது. மற்ற நாடுகள் யுத்த தொனியிலேயே பேசுகின்றன. ஏகாதிபத்திய முறைகளைக் கையாண்டு மற்ற நாடுகளை அழிக்கப் பார்க்கின்றன. சமீப காலமாகத் தான் பல் யுத்தங்கள், பல மரணங்கள், எண்ணிலாத துன்பங்கள் இவைகளை யெல்லாம் அனுபவித்த பிறகு, யுத்த முறைகளைக் கைவிட்டு விட வேண்டுமென்று அந்த மேனுடுகள் யோசிக்கின்றன. சமாதான மகா நாடுகளா! ஹேக் மகா நாடென்ன, வார்ஸேல் மகா நாடென்ன, ஜினீவா மகா நாடென்ன, வாஷிங்டன் மகா நாடென்ன, லாசேன் மகா நாடென்ன இப்படி எத்தனையோ மகா நாடுகள் கூடிக் கூடிக் கலைந்தன. ஆனுல் இந்த மகா நாடுகளிலே கூடும் வல்லரசுப் பிரதிநிதிகள் யுத்த பயத்தினுல் சமாதானத்தைப்பற்றிப் பேசுகிறூர்களே தவிர உலகம் சமாதானமாக இருக்க வேண்டும் என்ற இயற்கை ஆவலினுல் சமாதான நிபந்தனைகளைப்பற்றிப் பேசுகிறூர்களில்லை. எல்லாம் அவசியத்தை முன்னிட்டுத்தான். ஆனுல் சீனர்களுடைய இயற்கையான சுபாவத்திலேயே இந்தச் சமாதான எண்ணம் நிரம்பி யிருக்கிறது. சீனுவின் சென்ற ஆயிர வருஷ கால சரித்திரமே இதற்குச் சான்று பகரும். தனிப்பட்டவர்களுடைய சம்பந்தத்தில் அடக்கத்தையும் மரியாதையையும் காட்டும். அரசாங்க விஷயத்திலே எவனொருவன் மற்றொருவனைக் கொன்று அதனுல் ஆனந்தம் அடையாமல் இருக்கிறூனே அவன் தான் ஜனங்கள் அனைவரையும் ஒற்றுமைப் படுத்த முடியும்' என்ற வாசகங்கள் சீனுவில் பரம்பரையாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. ஆனுல் இவையெல்லாம் அந்நியர்களின் கோட்பாடுகளுக்குப் புறம்பானவை.

நமது பழைய ஒழுக்க முறைகளைப் புதுப்பிக்க வேண்டுவதோடல்லாமல், கல்வி முறையையும் புதுப்பிக்க வேண்டுவது அவசியமாகும். மஞ்சு அரச பரம்பரையினருக்கு நாம் அடிமைப் பட்டு விட்ட பிறகு, நமது நாற்பது கோடி மக்களும் தூங்குகிறூர்கள்; நமது பழைய ஒழுக்க முறைகளும், நமது கல்வி முறையும் தூங்குகின்றன. நாம் நமது தேசிய உணர்ச்சியை மீண்டும் பெற வேண்டுமானுல் அந்த ஒழுக்க முறைகளையும் கல்வி

முறையையும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இந்தப் பழைய கல்வி முறைதான் யாது? ஓர் அரசாங்கம் எப்படி இருக்க வேண்டுமென்பதைப் பற்றி நமது மூதாதையர்கள் கூறியுள்ளதைப்போல் யாரும் கூறவில்லை. ஐரோப்பாவும் அமெரிக்காவும் சமீப காலத்தில் முன்னேறியிருக்கின்றன வென்று சொல்லப்பட்டதேயானாலும், அவை, சீன அரசியல் தத்துவத்தைப்போல் பூரணத்துவம் பெறவில்லை. சீனாவின் அரசியல் தத்துவந்தானென்ன?

> பொருள்களின் இயற்கைகளை ஆராய்ச்சி செய்; அறிவின் எல்லையை விசாலமாக்கு; உனது நோக்கத்தில் சிரத்தையை ஊட்டு; மனத்தை ஒழுங்கு படுத்து; தன் மதிப்பை விருத்தி செய்; குடும்பத்தை ஆட்சி செய்; ராஜாங்கத்தை நிருவாகம் பண்ணு; உலகத்தைச் சமாதானப்படுத்து

இந்தத் தத்துவமானது, மனிதன், முதலில் அந்தர் முகமாக நோக்கித் தன்னைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டுமென்றும், உலகனைத்திலும் அமைதி ஏற்படுகிற வரையில் அவன் உழைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் கூறுகிறது. இந்த உயர்ந்த 'கோட்பாட்டை, வேறு எந்த அரசியல் தத்துவத்திலும் நீங்கள் காண மாட்டீர்கள். ஆனால் இந்த உயர்ந்த தத்துவத்தை இப்பொழுது மறந்து விட்டோம். நம்மிலே படித்தவர்கள், மேலே நான் எடுத்துக் காட்டின வாக்கியத்தை ஒரு சம்பிரதாயமாகத்தான் எடுத்துச் சொல்கிறார்களே தவிர, அதன் ஆழ்ந்த கருத்தை அறிகிறார்களேயில்லை. 'மனிதனுடைய தன் மதிப்பை உயர்த்திக் கொள்வது, ராஜாங்கத்தை நிருவாகம் செய்வது முதலிய புறச் சீர் திருத்தங்களை நாம் அநுஷ்டானத்தில் கொண்டு வரவேயில்லை. சென்ற நூறு வருஷ காலமாக, இவ் விஷயத்தில் நாம் ஒன்றுமே செய்ய வில்லையென்றுதான் சொல்ல வேண்டும். இதன் பயன் என்ன? அந்நியர்கள், நமது நாட்டில் வந்து நிருவாகம் செய்யப் பார்க்கிறார்கள்.

சீனாவை நம்மால் ஏன் ஆளமுடியவில்லை? அந்நியர்கள் நம்மிடத்திலே என்ன குறையைக் காண்கிறார்கள்? நமது குடும்பங்களைச் சரியாக ஆள்கிறோமோ இல்லையோ வென்பது அந்நியர்களுக்குத் தெரியாது. அதை அவர்கள் தெரிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பமும் கிடைத்திராது. ஆனால் நம்மிடத்திலே, தன் மதிப்பைக் கொடுக்கக் கூடிய நாகரிகம் இல்லையென்பதை அந்நியர்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சீனன் சொல்கிற ஒவ்வொரு வார்த்தையிலும் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் மரியாதைக் குறைவு காணப்படுகிறது. ஒரு சீனனுடன் ஒரே ஒருமுறை பழக்கம் ஏற்பட்டு விட்டால் இந்தக் குறை நன்கு வெளிப்பட்டு விடும். இதனால், சீனர்கள் படிப்பில்லாதவர்களென்றும், நாகரிகமற்றவர்களென்றும், அந்நியர்கள் கருதுவதற்கு ஏதுவாகிறது. சீனாவிலேயே இருபது அல்லது முப்பது வருஷகாலம் வசித்து, சீனர்களோடு நெருங்கிப் பழகியவர்கள், சீன நாகரிகம் மிகச் சிறந்ததென்று கருதுகிறார்களேயாயினும், பொதுவாக ஓர் அந்நியன் சீனாவை முதன் முதலாக வந்து பார்க்கிற போது, சீனர்

களைப்பற்றி அவன் தவறாகவே நினைக்கிறான். இதற்குக் காரணம், நமது சொந்த நடவடிக்கைகளில் நாகரிகமாக நடந்து கொள்ளாததாகும். அதாவது நமது தினசரி நடவடிக்கைகளில் மிகக் கவலையீனத்துடன் நடந்து கொள்கிறோம். சீனர்கள் முதன் முதலாக அமெரிக்கா சென்றபோது, அமெரிக்கர்கள் சீனர்களை சம அந்தஸ்துடனும் மரியாதையுடனும் நடத்தினார்கள். ஆனால் பின்னர், சீனர்கள் நாகரிகமாக நடந்து கொள்ளாததன் காரணமாக, ஹோட்டல்களிலே கூட அநுமதி மறுக்கப்பட்டார்கள்.

நான் கப்பலில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த ஒரு சமயம், அந்தக் கப்பல் காப்டனுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஓர் அமெரிக்கர். அவர் என்னிடம் ஒரு விஷயம் சொன்னார். அதாவது, இந்தக் கப்பலின் முந்திய பிரயாணத்தில் சீன அரசாங்கத்தின் மந்திரி யொருவர் சென்றாராம். அவர் கப்பலின் மேல் தளத்தில்—பலரும் நடமாடுகிற இடத்தில்—மூக்கைச் சிந்தியும் எச்சில் துப்பியும் வந்தாராம். எவ்வளவு வெட்கக் கேடான காரியம்! இதற்கு என்ன செய்தீர்க ளென்று நான் காப்டனைக் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்:—'வேறு ஒரு வழியும் எனக்குத் தோன்றவில்லை. என்னுடைய பட்டுக் கைக் குட்டையை எடுத்து அவர் எச்சிலுமிழ்ந்ததை யெல்லாம் துடைத்தேன். ஆயினும் அவர் இதைக் கவனிக்கவேயில்லை.' இந்த மந்திரியைப் போல்தான் எல்லாச் சீனர்களும் இருக்கிறார்கள். அதாவது நமது நாகரிகக் குறைவையே இது காட்டுகிறது.

நமது நாட்டின் பெரிய ஞானியாகிய கன்பூஷியஸ் கூறினார், 'நீ உட்காருகிற பாய் முடங்கியதாயிருந்தால் அதன் மீது உட்காராதே' யென்று. அதாவது, உட்காருதல்,' எழுந்திருத்தல் முதலிய சில்லரை விஷயங்களில் கூட நமது முன்னோர்கள் எவ்வளவு கவனஞ் செலுத்தி வந்தார்க ளென்பது நன்கு புலப்படும். இப்பொழுது நம்மவரிலே பலர், நகத்தை நீள வளர்த்துக் கொள்கிறார்கள். அப்படி வளர்த்துக் கொள்வதுதான் நாகரிகமென்றும் கருதுகிறார்கள். பிரெஞ்சுக் காரர்களுக் கிடையிலே கூட இந்தப் பழக்கம் இருக்கிறது. அதாவது தாங்கள் தொழிலாளர்கள் இல்லையென்பதைக் காட்டிக் கொள்வதற்காக இங்ஙனம் வளர்த்துக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் நமது 'கோமிண்டாங்' கட்சியின் முக்கிய நோக்கமே, தொழில் செய்வதிலே சிறுமை பெருமை இல்லை யென்பதுதான். இன்னும், சீனர்கள் பற்களைத் துலக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்வதில்லை. இந்த மாதிரியான சில்லரை விஷயங்களை நாம் கவனித்து ஒழுங்கு படுத்திக் கொண்டோமானால் எவ்வளவோ நல்லது. ஆனால் சீனர்களாகிய நாம் இவைகளைப் பற்றிக் கவனிப்பதேயில்லை. அந்நியர்களிடத்தில் நாம் நாகரிகத்துடன் நடந்து கொண்டால், அந்நியர்களும் நம்மிடத்தில் மரியாதையாக நடந்து கொள்வார்கள். இளைஞர்களாகிய நீங்கள், அந்நியர்களின் தற்கால நாகரிகத்தினின்று அநேக அம்சங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலில் உங்கள் சொந்த நடவடிக்கைகளையே சீர் திருத்திக் கொள்ள வேண்டும். உலகத்திலுள்ள எல்லா நாடுகளும்

முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சீனா மட்டும் ஏன் பிற்போக்கடைந்து கொண்டிருக்கிறது? அந்நியர்களுடைய அரசியல் பொருளாதார ஆதிக்கத்திலிருப்பது ஒரு காரணம். மற்றொரு காரணம், நமது சொந்த விஷயங்களில் நாகரிகமாக நடந்து கொள்ளாமை. ஆகையால் இந்த நாகரிகத்தை நாம் அபிவிருத்தி செய்து கொள் வேண்டும்.

நமது பூர்விகக் கல்வி அதிகரித்திருந்ததோடு, நமது சக்திகளும் அதிகரித்திருந்தன. இப்போது, அந்நிய நாடுகளில் இயந்திரங்களின் பெருக்கத்தையும், நவீன விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்தியையும் சீனர்கள் பார்க்கிற போது, தங்களுடைய திறமை, அந்நியர்களின் திறமையைக் காட்டிலும் குறைவானதென்று கருதி விடுகிறார்கள். ஆனால் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர், சீனர்கள் எவ்வளவு திறமை சாலிகளாயிருந்தார்கள்! இப்பொழுது மேனாட்டினரால் வியந்து பாராட்டப் படும் அநேக விஷயங்கள் சீனர்களால் கண்டு பிடிக்கப்பட்டவையேயாகும். உதாரணமாக, மேனாட்டுக் கப்பல்களில் பெரிதும் உபயோகிக்கப் படும் திசையறி கருவியை எடுத்துக் கொள்ளுங்கள். சீனர்களால் அஃது ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னரேயே கண்டு பிடிக்கப் பட்டது. அச்சு இயந்திரத்தைக் கண்டு பிடித்ததும் சீனர்கள்தான். பீங்கான் சாமான்களை உற்பத்தி செய்யும் முறையைக் கண்டு பிடித்து அதனைப் பண்பட்ட நிலைக்குக் கொண்டு வந்தது சீனர்களல்லாமல் வேறு யார்? துப்பாக்கி மருந்தையும் சீனர்கள்தான் முதன் முதலாகக் கண்டு பிடித்தார்கள்.

இங்ஙனமே மானிட சமுதாயத்திற்குத் தேவையான உணவு, உடை, வசிக்க இடம், போக்குவரத்து வசதிகள் முதலியவற்றைக் கண்டு பிடித்து உதவி புரிவதிலும் சீனர்கள் அதிக பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய நாகரிக உலகத்தினரால் மிகவும் அவசியமான உணவுப் பொருளாகக் கருதப்படுகிற தேயிலை, முதன் முதலில் சீனாவில்தான் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தத் தேயிலைப் பானப் பழக்கம் ஏற்பட்ட பிறகு, உலகத்தில் குடிப் பழக்கம் குறைந்திருப்பதை யாவருமே அங்கீகரிக்கப்பர். இதே மாதிரி, பட்டாடை தரிப்பது இப்பொழுது நாகரிகமென்று கருதப்படுகிறது. ஆனால் ஆரிரக் கணக்கான வருஷங்களுக்கு முன், பட்டுப்பூச்சி கண்டு பிடிக்கப் பட்டது சீனாவில்தான். தற்கா காலத்தில் பலமாடிகள் கொண்ட வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் முதன் முதல் மனையடி சாஸ்திரம் சீனாவிலிருந்துதான் பிறந்தது. இதே மாதிரி, போக்கு வரத்து வசதி விஷயத்திலும் உயர்ந்த மலைகளையும் ஆழ்ந்த பள்ளத் தாக்குகளையும், அகண்ட நதிகளையும் கடப்பதற்கு உபயோகமான தொங்கும் பாலங்களைக் கண்டு பிடித்தது சீனர்கள் தான். இத்தகைய உதாரணங்களால்நாம் தெரிந்து கொள்வதென்னவென்றால், புராதன சீனர்கள் திறமைசாலிகளாக இருந்தார்கள்; ஆனால் பின்னர் இந்தத் திறமையை இழந்து விட்டார்கள். இதனால் நமது தேசீய அந்தஸ்தும் வீழ்ச்சியுற்றது என்பது தான். எனவே

நமது பழைய அந்தஸ்தை மீண்டும் பெற வேண்டுமானால், பழைய சக்திகளையும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

ஆனால் இப்படி பழைய சக்திகளை மீண்டும் பெறுவதனால் மட்டும், தற்கால உலக வல்லரசுகளோடு போட்டி போட்டு ஒரு ஸ்தானத்தை சீனா பெற முடியுமா? முடியாது. அந்நிய நாட்டு நாகரிகங்களில் என்னென்ன நல்ல அம்சங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நாம் பின்னடைந்துதான் போவோம். அந்நிய நாட்டு இயந்திர வகைகள் சிக்கலானவை யென்றும் அவைகளைக் கற்றுக்கொள்வது மிகவும் கடினமென்றும் நாம் எண்ணிக் கொண்டு வந்திருக்கிறோம். மேனாடுகளில் ஆகாய விமானங்களைச் செலுத்துவது மிகவும் கடினமென்று கருதப்படுகிறது. தவிர, ஆகாய விமானங்கள் சமீப காலத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது தினந்தோறும் காண்டன் நகரத்திலிருந்து ஏராளமான ஆகாய விமானங்கள் பறந்து செல்லவில்லையா? சீனர்கள், இந்த விமானங்களைச் செலுத்தும் கஷ்டமான காரியத்தைத் தெரிந்து கொண்டுவிட்டபோது மற்ற எந்தக் காரியந்தான் அவர்களுக்குக் கடினமானது? நமது புராதன நாகரிகம், கல்விமுறை முதலியவற்றைத் துணையாகக்கொண்டு வெளி நாட்டு நல்ல அம்சங்களை யெல்லாம் நாம் சுலபமாகக் கற்றுக்கொள்ள முடியும். மேனாட்டார், தங்களுடைய விஞ்ஞான அறிவைக் கொண்டுதான் பெருமை பாராட்டிக்கொள்கின்றனர். சென்ற மூந்நூறு வருஷ காலமாகத்தான் இந்த விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெறத் தொடங்கி யிருக்கிறது. சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டவைகளில் மின்சாரமும் ஒன்று. ஆரம்பத்தில் நிலக்கரியிலிருந்து சக்தி, உற்பத்தி செய்யப்பட்டது; இப்பொழுது மின்சாரத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. அமெரிகாவில் தற்போது ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதாவது அந்த நாட்டிலுள்ள எல்லாத் தொழிற்சாலைகளையும் ஒரே மின்சார ஸ்தாபனத்தினின்று உண்டாகும் மின்சார சக்தியைக்கொண்டு இயக்குவதாகும். சீனாவும், நவீன முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் அது நிலக்கரியிலிருந்து ஆரம்பிக்கக் கூடாது; மின்சாரத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அதாவது முற்போக்கான சக்திகளை மட்டும் நாம் கிரகித்துக்கொண்டு விட்டோமானால், இன்னும் பத்து வருஷ காலத்திற்குள் நாம் மற்ற வல்லரசுகளுடன் சம அந்தஸ்துக்கு வந்து விடுவோம். இதற்கு ஜப்பான்தான் சிறந்த உதாரணம். ஜப்பானுடைய நாகரிகம் முதன் முதலில் சீனாவிலிருந்துதான் காபியடிக்கப்பட்டது. அதாவது சீனாவின் நாகரிகத்தை விட மிகக் குறைவானது, ஆனால் சமீப காலத்திலிருந்து, ஜப்பான, ஐரோப்பிய அமெரிக்க நாகரிகங்களை மட்டும் பின்பற்றத் தொடங்கி, மிகச் சுருக்கமான காலத்தில், உலக வல்லரசுகளில் ஒன்றாகி விட்டது. ஜப்பானியர்களை விட நமது அறிவு எவ்விதத்திலும் குறைந்ததாக மாட்டாது. ஆகையால், நமக்கு மேனாட்டு நல்ல அம்சங்க

னைக் கிரகித்துக்கொள்வது மிகவும் சுலபமாகும். எனவே, அடுத்த பத்து வருஷ காலம், நமக்குப் பெரிய சோதனை காலமாகும். ஜப்பானைக் காட்டிலும் சீனாவின் ஜனத்தொகை பத்து மடங்கு அதிகமாகவும், விஸ்தீரணத்தில் முப்பது மடங்கு பெரிதாகவும் இருக்கிறது. எனவே, ஜப்பான் தற்போது அடைந்திருக்கும் நிலைமைக்கு சீனா வந்து விடுமானால் அப்பொழுது பத்து வல்லரசுகளுக்குச் சமமாகும் ஒரு சீனா. உலகத்திலே இப்பொழுது பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, இத்தலி, ஜப்பான் ஆகிய ஐந்து வல்லரசுகள்தான் இருக்கின்றன. ஜெர்மனியையும் ருஷ்யாவையும் வருங்கால வல்லரசுகளுடன் சேர்த்துக் கொண்டால் ஏழு வல்லரசுகள் தானாகின்றன. எனவே, ஜப்பானுடைய நிலைமைக்கு சீனா வருமானால், தன்னுடைய ஒரே ராஜாங்கத்தில் பத்து வல்லரசுகளின் சக்தியைப் பெற்றதாயிருக்கும்.

அப்படிப் பட்ட உன்னத ஸ்தானத்தை அடைந்து விட்ட பிறகு சீனாவின் கடமை யென்ன? புராதன சீனாவில் ஒரு பழமொழி வழங்கி வந்தது. பலஹீனர்களைக் காப்பாற்று; விழுந்தவர்களை எழுப்பு என்பது தான் அந்தப் பழமொழி. இந்த உயர்ந்த கொள்கையைக் கொண்டிருந்ததனால் தான் சீனா, ஆயிரக்கணக்கான வருஷங்களாகச் சுபிட்சமாயிருந்தது. இதனைத் தழுவியிருந்த அன்னாம், பர்மா, கொரியா, சையாம் முதலிய நாடுகள் சுவாதீனமாயிருந்தன. கீழைப் பிரதேசத்தில் ஐரோப்பியருடைய செல்வாக்குப் பெருக பெருக அன்னாம் பிரதேசத்தை பிரான்ஸும், பர்மாவை கிரேட் பிரிட்டனும், கொரியாவை ஜப்பானும் முறையே ஆக்ரமித்துக் கொண்டன. சீனா, முழுச் சக்தியையும் பெற வேண்டுமானால், நமது தேசிய அந்தஸ்தை மீட்டிக் கொள்வோதடல்லாமல், உலகத்திற்கும் ஒரு பொறுப்பைச் செலுத்த வேண்டும். இந்தப் பொறுப்பை சீனா ஏற்றுக்கொள்ளா விட்டால் உலகத்திற்கு அதனால் தீமையே உண்டாகும். அப்படியானால் சீனா செய்ய வேண்டிய கடமை யென்ன? இன்று, கிரேட் பிரிட்டன் முதலிய ஐரோப்பிய வல்லரசுகள் செல்லுகின்ற பாதை சிறிய நாடுகளின் அழிவிலே தான் கொண்டு விடும். சீனாவும் பலம் பெற்று ஏகாதிபத்திய முறைகளைக் கையாளுமானால் அதுவும் மேற்படி வல்லரசுகளின் வழியைத் தான் பின்பற்றிச் செல்லும். ஆகையால் முதலில் நமது கொள்கை இன்னதென்று நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். பலஹீனர்களைக் காப்பாற்றி, விழுந்தவர்களை எழுப்பினால், நாம்—பலஹீனமான நாம்—ஒரு தெய்விகக் கடமையைச் செய்தவர்களாவோம். நாம் பலஹீனமான நாடுகளுக்கு உதவி செய்து வல்லரசுகளை எதிர்த்து நிற்க வேண்டும். நமது நாட்டு ஜனங்களனைவரும் இந்த விதமாகத் தீர்மானித்துக் கொண்டால், நம்முடைய ஜன சமூகம் க்ஷேமமடையும். ஆகையால், சீனாவின் வளர்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னர், விழுந்தவர்களை எழுப்பி விடுவதாகவும், பலஹீனர்களைக் காப்பாற்றுவதாகவும் சங்கல்பம் செய்து கொள்வோமாக. அப்பொழுதுதான் நாம் ராஜ்யத்தை ஆண்டு, உலகத்தைச் சமாதானத்திற்குட்படுத்தினவர்களாவோம்.

-: ரஜபுத்திர ரமணி :-

—“ தனிராம் பிரேம்ஜீ ”

ஹிந்தியிலிருந்து வெ. பத்மநாபன் மொழிபெயர்த்தது

சென்ற மாதத் தொடர்ச்சி.

4.

அஜயக் கோட்டையின் எல்லையில் மதன சிம்மனுடைய சேனைகள் முற்றுகை யிட்டன. மோகன சிம்மனுடைய சேனைகளும் மிகுந்த உற்சாகத்துடன் யுத்தத்திற்கான முஸ்தீபுகளைச் செய்யத் தொடங்கின. யுத்தமும் ஆரம்பித்து விட்டது. ஆனால் யுத்தம் இந்த இரண்டு ஜமீந்தார்களுடைய சேனைகளுக்கிடையே மாத்திரம் அல்ல. மதன சிம்மன் தன்னுடைய சேனைகளுடன் மாத்திரம் வந்திருந்தால் அவன் தோற்றுப் போவது நிச்சயம்தான். மோகன சிம்மனுடைய சேனையிலுள்ள ஒவ்வொருவரும் தம்முடைய ராஜாவுக்காகத் தயாராக இருந்தனர். ஒவ்வொரு சிப்பாயும் யுத்தம் தனக்காகவே நடக்கிறது என்றும் யுத்தத்தின் ஜயாபஜயங்களும் தங்களையே சார்ந்தவை என்றும் எண்ணிப் போராடமுன் வந்திருந்தான்.

மதனசிம்மனுக்குச் சகாயம் செய்ய அவுரங்கசீப்பின் சேனையின் ஒரு பகுதியும் வந்திருந்தது. கோரமான யுத்தம் மூண்டது. மோகன சிம்மனுடைய சேனைகளால் நெடு நேரம் எதிர்த்து நிற்க முடியவில்லை. மோகன சிம்மனுடைய சிப்பாய்கள் தம் முயிருள்ளளவும் தேசத்திற்காகப் போராடி வீர சுவர்க்க மெய்தினர்.

மதன சிம்மனுடைய சேனைகள் அஜயக் கோட்டையை தம் அதிகாரத்தினுள் கொண்டு வந்து விட்டனர். மோகன சிம்மன், ராஜ குமாரன், ராஜகுமாரி மீரா ஆகியமூவரும் கைது செய்யப்பட்டு விட்டனர். மோகன

வருங் காலத்தில், இந்த லட்சியத்தை நாம் அடைய வேண்டுமானால், நமது தேசிய உணர்ச்சியைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். தேசிய அந்தஸ்தை மீட்டுக்கொள்ள வேண்டும்; நமது பழைய ஒழுக்க முறைகளை ஆதாரமாகக் கொண்டு, உலகத்தை ஒற்றுமைப் படுத்த வேண்டும்; உலகத்திலே சமத்துவமும் சகோதரத்துவமும் நிலவும்படிச் செய்ய வேண்டும். நமது நாற்பது கோடி ஜனங்களுக்கும இந்தப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது.

சிம்மனுடைய பிரஜைகள் தாங்கள் தோற்று விட்ட போதிலும் கோட்டையின் அதிகாரம் மதன சிம்மனிடமே தான் இருக்கும் என்ற நம்பிக்கையோடிருந்தனர். மதன சிம்மனும் ஒரு க்ஷத்திரியன். அவன் க்ஷத்திரியப் பெண்களின் கற்புக்கு பங்கமேற்படா வண்ணம் கவனித்துக் கொள்வான் என்று அஜயக் கோட்டை நிவாசிகள் நம்பியிருந்தனர். ஆனால் முடிவு வேறு விதமாகி விட்டது. கோட்டையை மதன சிம்மனே ஜயித்தான். என்றாலும் கோட்டையின் அதிகாரத்தை வகிக்க அவனுக்குத் திறமையில்லாமற் போய் விட்டது. மொகலாய சேனையின் அதிபனான ஸத்தார் என்பவன் கோட்டையின் அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டான்.

ஸத்தார் தனியாக ஓர் அறையில் உட்கார்ந்து கொண்டு கைதிகளைத் தன்னெதிரே கொண்டு வருமாறு கட்டளையிட்டான். மோகன சிம்மனும் அவனுடைய குழந்தைகளும் அழைத்து வரப்பட்டனர்.

'இன்னுமா உனக்குக் கர்வம்?'

'ஆம்'

'தோல்வியடைந்த பின்னுமா?'

'இதைத் தோல்வி என்று கருதுவதற்கில்லை.'

'அப்படியானால் தோல்வி என்பது என்ன?'

'சத்ருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல்தான்'.

'அந்த ஆசை வேறு பாக்கியிருக்கிறதா?'

'வீண் ஏளனப் பேச்சு எதற்கு? என்னுடைய வீரர்கள் தம்மில் சக்தியிருந்தவரை ஒரு அடிகூடப் பின் வாங்காமல் போராடியே வீரசுவர்க்கமடைந்தனர். நான் ஜீவித்திருக்கும் வரையில் அஜயக்கோட்டை தோற்று விட்டது என்று சொல்வதற்கில்லை.

'தோற்றுப் போனேன் என்று சொல்லிக் கொள்ள நீ ஆசைப்படுகிறாய் போலும்.'

'ஒருபொழுதும் கிடையாது.'

'உன்னை, தோல்வியை ஒத்துக் கொள்ளும்படி செய்யும் விதத்தை நான் நன்கு அறிவேன்.'

'அவ்விதம் செய்ய நான் இடம் தர மாட்டேன். உன்னுடைய எண்ணத்தை நான் அறிவேன். கெட்ட எண்ணத்துடன் நீ என்னை அவமதிக்க விரும்பு முன்னமே நான் உன்னைப் பழி வாங்காது விடேன்.'

ஸத்தார், ஹ்............ஹ என்று ஒரு ஏளனச் சிரிப்பு சிரித்துக் கொண்டே 'இன்று வரை மொகலாயரிடம் அகப்பட்டுக் கொண்ட எவரும் தப்பியதில்லை. எல்லா இராஜபுத்திரர்களும் ஏகாவது ஒரு விதத்தில் தத்தம் வீட்டு ஸ்திரீகளை மொகலாயரிடம் அளித்து விட்டிருக்கின்றனர். இப்பொழுது உன்னுடைய முறை, நீ எனக்கு என்ன அளிக்கப் போகிறாய் என்பதை இப்பொழுதே நீ எனக்கு அறிவித்து விடு. ஒரு வேளை உன்னுடைய அழகிய பெண்ணை எனக்கு வெகு மதியாக............'

'ஜாக்கிரதை! உன்னுடைய துச்சமான நாக்கினால் பவித்திரமான அந்தப் பெயரைச் சொல்லாதே.'

'இதனால் என்ன கெட்டு விடும்? நான் அவளை என்னுடைய மனைவியாக்கிக் கொள்வேன். இதற்கு நீ சம்மதித்தால் உன்னுடைய கோட்டையையே நான் உனக்குத் திருப்பியளித்து விடுகிறேன்.'

'சீ........சீ இனியும் அம்மாதிரி பேசாதே.'

ஸத்தார், மோகன சிம்மனுடைய வார்த்தைகளை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. அவன் தன்னுடைய இருப்பிடத்தை விட்டு எழுந்திருந்து மீராவின் பக்கமாகச் செல்லலானான். அவன் அவளருகில் சென்று கையை நீட்டினான். இதற்குள் மீரா 'ஜாக்கிரதை' என்றாள்.

ஸத்தார் ஹோ........ஹோ என்று சிரிக்க ஆரம்பித்தான். அவன் மீராவின் சொற்களில் தொனித்த தீவிரத்தை அறியாமலில்லை. என்றாலும் ஸத்தார் மீராவை நெருங்கி அவளைப் பிடிக்க எத்தனித்தான். ஆனால் மோகன சிம்மன் அவனுக்குப்பின்னால் வந்து அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டான். ஆனால் மறுகணம் ஸத்தாருடைய ஒரு உத்திரவின் பேரில் பத்து பணியாட்கள் மோகன சிம்மனைப் பிடித்துக் கொண்டனர்.

'ஓஹோ! நான் தனியாக இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா?' என்று வெற்றியுடன் கூறினான் ஸத்தார்.

'நான் உன்னுடைய ஏவலாட்களுக்காக பயப்படுகிறேன் என்று நினைக்கிறாய். என் உயிருள்ளளவும் உனக்குத் தகுந்த தண்டனை யளிக்கவே பிரயத்தனம் செய்வேன்' என்று மோகன சிம்மன் தைரியத்துடன் மொழிந்தான்.

'இவனுடைய கைகளைக் கட்டுங்கள்' என்று ஸத்தார் தன்னுடைய இரு வேலையாட்களை ஏவி மோகன சிம்மனுடைய கைகளைப் பிணித்து விட்டான். வேலையாட்கள் வெளியில் சென்றதும் ஸத்தார் மறுபடியும் மீராவின் பக்கமாகச் சென்றான்.

'என் மீது கையை வைக்காதே' என்று சொல்லிக் கொண்டே மீரா ஒரு புறமாக ஒதுங்கினாள்.

'நீ என்னுடைய கைதி. உன்னை நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.'

'ஒரு பொழுதும் இது நடவாது.'

ஆனால் ஸத்தார் மீராவின் கைகளைப் பற்றினான். மீரா தன் கைகளை அவனுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கும் போதே, மீராவின் தம்பி ராஜகுமாரன் ஸத்தாருக்கும் மீராவுக்கும் நடுவில் வந்து நின்று கொண்டான். கோபத்தினால் அச்சிறுவனுடைய முகம் சிவந்து போயிருந்தது. அவன் மிகவும் தைரியத்துடன் கீழே கிடந்த ஒரு தடியை எடுத்துக் கொண்டு ஸத்தாரின் கைகளின் மீது ஒரு அடி கொடுத்து விட்டு 'நான் இருக்கும் வரையில் என்னுடைய அக்காவின் மேல் கையை வைக்காதே' என்றான்.

ராஜகுமாரனுடைய செய்கையைக் கண்டு ஸத்தார் என்ன செய்வதென

றறியாமல் சிறிது நேரம் நின்று கொண்டிருந்தான். ஆனால் மறுகணம் ஒரு சிறுவன் தன்னை அவமதித்து விட்டதைக் கண்டு 'நகர்ந்து போ;. இல்லா விட்டால் என்னுடைய கத்திக்கு இரையாவாய்' என்றான்.

ராஜகுமாரன் தான் இருந்த இடத்தை விட்டு நகரவேயில்லை. மோகன சிம்மன் தன்னுடைய புத்திரனின் வீரத்தனத்தைக் கண்டு சந்தோஷித்தான். ஸத்தார் குழந்தையோடு சண்டை போடாமலிருக்க வேண்டுமே யென்று அவன் மனம் பதைத்தான். மீராவும் தன்னாலல்லவோ ராஜ குமாரனின்கதி இப்படியாகி விட்டது என்று ஏங்கினாள். அவள் ராஜகுமாரனிடம் "ராஜ குமார், நீ நகர்ந்து செல். என்னைக் காப்பாற்றிக்கொள்ள எனக்குத் திறமை யுண்டு" என்றாள்.

ராஜ குமாரன் மீரா சொன்னதைக் கேட்கவே யில்லை. அவன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். ஸத்தாரின் கோபம் அளவு கடந்து கொண்டிருந்தது. அவன் தன்னுடைய கத்தியை வெளியிலெடுத்து,

'நகர்ந்து செல்வாயா? மாட்டாயா?' என்றான்.

'முடியாது'

அந்தோ! என்ன கொடூரம்!

இராஜ குமாரனுடைய தேகம் இரண்டு துண்டுகளாயிற்று.

மீரா 'ஐயோ' என்று கதறிக் கொண்டே ராஜ குமாரனுடைய சரீரத்தைத் தன்னுடைய துடையின் மீது எடுத்து வைத்துக் கொண்டாள். மோகன சிம்மனும் வெகு நேரமட்டும் திடமாக விருந்தான். ஆனால் முடிவில் பாவம், அவனும் ஒரு மனிதன் தானே! தன்னுடைய ஒரே மகன், தன்குலத்தின் விளக்கு, தன்னுடைய ராஜ்ஜியத்தின் மாணிக்கம், தன் கண்ணெதிரேயே கொலை செய்யப் பட்டால் அதை அவனால் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அவனுடைய கண்களிலிருந்து இரண்டு துளி கண்ணீர் வெளிப்பட்டது. அவனுடைய கைகளும் கால்களும் கட்டப் பட்டிருந்தும் கூட அவன் எப்படியோ நகர்ந்து நகர்ந்து தன் பிள்ளையின் சவத்தருகே வந்தான்.

ஸத்தார் மறுபடியும் ஓர் ஏளனச் சிரிப்பு சிரித்துக் கொண்டே மோகன சிம்மனைக் காலால் ஒரு ஓரமாகத் தள்ளினான்.

'இன்னுமா உன்னுடைய இரத்த வெறி அடங்கவில்லை.'

இரத்த வெறியா? நான் இரத்த வெறி கொண்டவனல்ல. நான் அழகில் வெறி கொண்டவன். அழகில் வெறி கொண்ட என்னை யாராவது தடுக்க முயற்சித்தால் அவர்களுடைய இரத்தத்தை என்னுடைய கத்தி குடிக்கும்.'

மோகன சிம்மன் ஓர் புறமாக செயலற்றுக் கிடந்தான். அவனால் தன்னுடைய புத்திரியைக் காப்பாற்றத்திறனில்லாமற் போய் விட்டது. இராஜ புத்திரப் பெண்மணிகள் தங்களுடைய கற்புக்கு பங்கம் ஏற்படும் என்பதை அறிந்தால் பிராணத்தியாகம் செய்து கொள்வார்கள் என்பதை ஸத்தார் அறிந்து கொண்டான். அதனால் அவன் வேறொரு வழியைக் கையாண்டான்.

'ராஜகுமாரி! நான் சொல்வதற்குக் கீழ்ப்படியா விட்டால் உனக்கு நான் இன்னும் கடுமையான தண்டனை யளிக்கத் தீர்மானித்து விட்டேன்.'

"நான் உன்னுடைய மிரட்டலுக்குப் பயப்பட மாட்டேன். என்னை நீ கொலை செய்வதா யிருந்தாலும் நான் உன் சொல் கேட்க மாட்டேன்" என்று மீரா கர்ஜித்தாள்.

"மீண்டும் சொல்கிறேன். நான் சொல்வதைக் கேட்பாயா மாட்டாயா?"

"என்னால் முடியவே முடியாது."

"சரி! அப்படியானால் உன்னுடைய தந்தையின் உயிரின் மேல் கூட உனக்குப் பிரியமில்லையா?"

மீரா ஸத்தார் கூறுவதின் அர்த்தத்தை உணர்ந்து கொண்டாள். அவள் தன்னுடைய தந்தையைப் பரிதாபமாகப் பார்த்தாள். முதலில் அவளுக்காக அவளுடைய தம்பி உயிரைக் விடுத்திருக்கிறான். இரண்டாவதாக அவள் பொருட்டு அவளுடைய தந்தையும் உயிரிழக்க நேரிடுமோ என்னவோ? அவளுடைய உள்ளம் கொதித்தது. அவளுடைய கண்கள் கண்ணீரைப் பெருக்கத் தயாராக இருந்தன. அவளுடைய முகம் வெளுத்துப் போய் விட்டது. நாம் நம்முடைய கஷ்டங்களை திடத்துடன் பொறுத்துக் கொள்வோம்,

ஆனால் நமக்காக யாராவது நம்முடைய துன்பத்தைப்பகிர்ந்து கொள்ள முன் வந்தால் நம் மனது மிகவும் வேதனைக்குள்ளாகிறது. மீராவும் இராஜ புத்திர ரமணி தான். வீரப் பெண் மணி தான். உயிரின் மேல் அவளுக்குக் கிஞ்சிற்றேனும் பற்றுதல் கிடையாது. ஆனாலும அவளும் ஒரு பெண் தானே. மோகனசிம்மனுடைய வாயில் துணியடைக்கப்பட்டிருந்த போதிலும் அவன் தன்னுடைய கண்களின் மூலம் மீராவை திடமாக இருக்கும்படி சொல்லி வந்தான்.

"இப்பொழுது என்ன சொல்கிறாய்? தந்தையின் உயிரைக் காப்பாற்ற விரும்புகிறாயா? இல்லையா? உன் கண்களுக்கெதிரிலேயே உன்னுடைய தந்தை வதை செய்யப்படுவதைப் பார்க்க இச்சைப்படுகிறாய் போலும்."

"உன் இஷ்டம் போல் செய்து கொள்" என்று மீரா தீரமாகக் கூறினாள்.

"நான் உன்னையும் கொன்று விடுவேன் என்று யோசிக்கிறாயா? உன்னுடைய உயிர் எனக்குத் தேவையில்லை. ஆனால் உன்னுடைய தந்தையின் தேகம் துண்டாக்கப்பட்டு துடிதுடிக்கும் போது நீ பார்த்துக் கொண்டுதானிருக்க வேண்டும்."

மீரா யாதொரு பதிலும் கூறாமல் கண்களை மூடிக்கொண்டு பிரார்த்தனை செய்யத் தொடங்கினாள்.

ஸத்தார் கட்டுண்டு கிடக்கும் மோகனசிம்மனின் அருகில் சென்று தன்னுடைய உறையிலிருந்த கத்தியை வெளியிலெடுத்தான்.

"இனியாவது என் சொல் கேட்பாயா மாட்டாயா? என்று ஸத்தார் வினவினான்.

"முடியாது" என்று மீரா தலை குனிந்த படியே கூறினாள்.

'ஜன்' என்று கத்தியின் முதல் சத்தம் கேட்டது. மோகன சிம்மனுடைய புஜத்திலிருந்து இரத்தம் பீறிட்டது அடுத்தபடியாக ஸத்தாருடைய கத்தி மோகன சிம்மனுடைய ஹ்ருதயத்திலேயே புதைந்தது.

மோகன சிம்மன் அமைதியாகப் படுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வெளிவரவில்லை. மீராவும் மௌனமாக ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தாள். அவள் அழவுமில்லை. கூச்சலிடவுமில்லை.

ஸத்தார் மோகன சிம்மனுடைய வாயிலடைக்கப்பட்டிருந்த துணிகளை வெளியிலெடுத்தான். மோகன சிம்மனை தான் சித்திரவதை செய்யும் போது அவன் கதற வேண்டுமென்பது ஸத்தாருடைய எண்ணம். ஆனால் மோகன சிம்மன் கதறவில்லை. மிகவும் மெல்லிய குரலில் 'மீரா' என்றான்.

'அப்பா!'

'நான் ராஜகுமாரனிடம் செல்கிறேன். நீ துக்கப்படாமல் தைரியமாக இரு. ஆனால் ஒரு வேண்டுகோள்.'

'என்ன அப்பா?'

'ஒரு வேளை நீ மட்டும் பிழைத்திருப்பாயானால் ராஜ குமாரனுடைய கொலைக்குப் பழி வாங்கியே தீர வேண்டும். க்ஷத்திரிய தர்மத்தின் பேரில் ஆணை இடு.'

'அவ்விதம் செய்கிறேன் அப்பா!'

மோகன சிம்மனுடைய மனம் இந்த பதிலால் சந்தோஷமடைந்தது போலும். அவனுடைய முகம் மலர்ந்தது. அவனுடைய ஆத்மா சாந்தி பெற்றது!

ஸத்தார் இந்தக் காட்சியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தான், ஏதோ ஒரு ஹாஸ்ய நாடகத்தை மிகவும் ரஸிப்பவன் போல் தோன்றினான் ஸத்தார்.

'பழிக்குப் பழி வாங்கப் போகிறாய்?' என்று கேட்டுக் கொண்டே ஸத்தார் மீராவின் அருகில் நெருங்கினான். மீரா பின்னால் நகர்ந்தாள்.

ஸத்தார் அவள் தன்னை ஏசுவதையும் பொருட்படுத்தாமல் மீராவை நெருங்கலானான். மீராவின் கோபம் கட்டு மீறியது. அவள் தன் கையால் ஸத்தாரின் நெற்றியில் ஓங்கி ஒரு குத்து விட்டாள். ஸத்தார் கீழே சாய்ந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் மெல்ல தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு எழுந்து ஒரு மணியை அடித்தான். உடனே பல சிப்பாய்கள் அந்த அறையில் நுழைந்தனர்.

'ஹூம்........ஒரு ஸ்திரீயை எதிர்க்க இவ்வளவு புருஷர்களா? தைரியமிருந்தால் என்னெதிரே தனியாக நில்' என்று மீரா வீரவேசத்துடன் கூறினாள்.

ஸத்தார் மீராவினுடைய பேச்சுகளைச் சட்டை செய்யாமல் அவள் மேல் கத்தியுடன் பாய்ந்தான். இதற்குள் யாரோ பின் பக்கத்திலிருந்து ஸத்தாருடைய கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி தூர எறிந்து விட்டு அவனுடைய வாயில் துணியைத் திணித்தான்.

(தொடரும்)

லெனின்

லெனின் எப்படி வேலை செய்வது வழக்கம்?

—"கிருபாகரி"

லெனினைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கூறுவதுண்டு. சிலர் அவனை ஒரு ராட்சதனென்பர்; இன்னுஞ் சிலர் அவனை ஒரு தெய்வமென்று போற்றுவர். ஆனால் அவன் ராட்சதனுமில்லை; தெய்வமுமில்லை. சாதாரண மனிதன் தான். நம்மைப்போலவே தான் அவனுக்கும் உணர்ச்சி பாவங்கள் இருந்திருக்கின்றன. எல்லோரையும் போலவே அவனும் சிரித்து விளையாடி பரிகசித்து வாழ்க்கையை நடத்தி யிருக்கிறான். அவனுடைய வாழ்க்கைச் சரித்திரம் மிக ருசியுடையது. அதனை நாம் படிக்கிறபோது, 'லெனின் நம்மால் எட்டிப் பிடிக்க முடியாத ஓர் அவதாரமல்ல; நம்மால் பின்பற்றக் கூடிய ஒரு புருஷன்' என்ற எண்ணந்தான் யாருக்குமே உண்டாகும். இந்தக் கட்டுரையில், லெனின் எப்படி, தான் எடுத்துக்கொண்ட ஒரு காரியத்தைத் திருத்த முறச் செய்வான் என்கிற ஓர் அம்சம் மட்டும் விளக்கப் பட்டிருக்கிறது.

லெனின், எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலுஞ் சரி தான், அதைத் திருத்த முறச் செய்வான். சாதாரணமாக எல்லாரும்செய்யக் கூடிய சில்லறை வேலைகளையும் தானே மேற் போட்டுக்கொண்டு செய்வான். ஏதேனும் ஒரு விஷயம் முக்கியமென்று அவனுக்குப் பட்டுவிட்டால், அதன் பூரா விவரங்களையும் அவன் தெரிந்து கொள்ள மிகவும் ஆவல் கொள்வான்.

லெனின் 'இஸ்க்ரா' (தீப்பொறி) என்ற ஒரு பத்திரிகையை நடத்தி வந்தான். இதில் பொதுவுடமைத் தத்துவங்கள் எல்லாருக்கும் புரிகிற மாதிரி எழுதப் பட்டு வந்தன. இந்தப் பத்திரிகை ரகசியமாகவே நடைபெற்று வந்தது. இது சம்பந்தமாக எல்லா வேலைகளையும் லெனினே கவனித்து வந்தான். ஒவ்வோர் இதழும் மிகுந்த ஆலோசனையுடனேயே எழுதப்பட்டது. தான் எழுதுகிற ஒவ்வொரு வார்த்தையும் அர்த்த புஷ்டியுடையதாயிருக்க வேண்டுமென்று பார்ப்பான். பத்திரிகை ப்ரூப் படிப்பது திருத்துவது முதற் கொண்டு எல்லா வேலைகளையும் தானே கவனிப்பான். இந்த வேலைகளைக் கவனிக்க வேறொருவரும் இல்லை யென்று அர்த்தமில்லை. ஆனால் பத்திரிகைகளில் எவ்விதமான பிழையும் வரக் கூடாதென்பது லெனின் கவலை, முதலில் தானே ப்ரூப்களைப் படிப்பான்; பிறகு தன் மனைவியிடம் படிக்கக் கொடுப்பான்.

இதே மாதிரிதான் ஒவ்வொரு வேலையிலும். புஸ்தகங்களைப் படிக்கிற போதும், ஏதேனும் ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றி ஆராய்கிற போதும், அவ்வப்பொழுது அகப்படும் புள்ளி விவரங்களைக் குறித்துக் கொள்வான். கணக்குகள் போட்டுப் பரிசீலனை செய்து பார்ப்பான். இவனுடைய பழைய நோட் புஸ்தகங்களை இப்பொழுது புரட்டிப் பார்த்தால் கூட அநேக கணக்குகள்

வரிசை வரிசையாகப் போட்டு வைத்திருப்பதைப் பார்க்கலாம். முக்கியமான புள்ளி விவரங்களாயிருந்தால் தானே கூட்டியும் கழித்தும் சரி பார்த்துக்கொள்வான். ஒவ்வொன்றையும் சரி பார்த்துக்கொண்ட பிறகுதான், அதன் மீது ஏதேனும் ஒரு முடிவு தெரிவிக்க வேண்டுமென்பது லெனின் கருத்து.

லெனின், எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் எழுதினாலும் ஞாபகத்திலிருப்பதை வைத்துக் கொண்டு பேசுவதுமில்லை; எழுதுவதுமில்லை. ஏறக்குறைய அல்லது உத்தேசமாக, அல்லது சுமார் என்ற வார்த்தைகளை லெனின் உபயோகிக்கவே மாட்டான். எதனையும் இவ்வளவு என்று நிர்த்தாரணஞ் செய்துதான் கூறுவான். லெனின் எதனையும் மிக வேகமாகப் படித்து முடிப்பான், எதனையேனும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டுமானால் அதனை உடனே நோட் புஸ்தகத்தில் குறித்துக் கொள்வான். இவன் உபயோகித்த பல நோட் புஸ்தகங்கள் இப்பொழுதும் பத்திரமாக ருஷ்யாவிலுள்ள 'லெனின் ஸ்தாபனத்தினால்' பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

லெனின் தான் எடுத்து வைத்த ஞாபகக் குறிப்புகளைக் கூட அடிக்கடி படித்துப் பார்ப்பான். தான் படிக்கிற புஸ்தகம் சொந்த புஸ்தகமாயிருந்தால், முக்கியமான பாகங்களை கீழ்க்கோடிட்டு வைப்பான். புஸ்தகத்தின் முகப்புப் பக்கத்தில், இன்னின்ன எண்ணுள்ள பக்கங்களில் இன்னின்ன முக்கியமான விஷயங்கள் இருக்கின்றனவென்று சுருக்கமாகக் குறித்து வைப்பான். தான் எழுதிய கட்டுரைகளைக் கூட அடிக்கடி படிப்பான். அப்படித் திருப்பிப் படிக்கிற போது, அதில் ஏதேனும் முக்கிய விஷயம் இருக்கிறதென்று தென்பட்டால் அதனைக் குறித்துக்கொள்வான். இந்த மாதிரியான அப்பியாசங்களின் காரணமாக, லெனினின் ஞாபக சக்தி மிக அதிகமாயிருந்தது. எந்தச்சமயத்தில் யாரோடு எந்த வார்த்தைகளைச் சொன்னோமென்று லெனினுக்கு நன்றாக ஞாபகமிருக்கும் இந்த அதிதீவிரமான ஞாபக சக்தியின் காரணமாகத்தான் லெனினிடம் ஒரு விசேஷமான சக்தி காணப்பட்டது. அதாவது, எதனையும் திருப்பித் திருப்பிச் சொல்ல மாட்டான். ஒரே விஷயத்தைப் பற்றி எத்தனை தரம் திருப்பித் திருப்பிச் சொன்னாலும் சரி, எழுதினாலும் சரி, உபயோகித்த பிரயோகங்களையே திருப்பி உபயோகிக்க மாட்டான்.

லெனின், கண்ட புஸ்தகங்களையும் படிக்க மாட்டான். அப்படிப் படிப்பது, காலத்தை வீணாக்குவதாகுமென்பதே அவன் கருத்து. படிக்கிற விஷயம், ஏதோ ஒரு வகையில் பிரயோஜனப்படுவதாயிருக்க வேண்டுமென்பதே அவன் எண்ணம். லண்டனில் இவன் வசித்திருந்த காலத்தில், புத்தக சாலைகளுக்குச் சென்று ஓயாமல் படித்துக் கொண்டிருப்பான். படித்த புஸ்தகங்களிலிருந்து குறிப்புகள் எடுத்துக்கொள்ள இவன் தவறியதேயில்லை. மார்க்ஸ், எஞ்ஜெல்ஸ் ஆகிய இரண்டு பேரும் எழுதி வைத்துப்போன நூல்களை இவன் திருப்பித் திருப்பி படிப்பது வழக்கம். அது விஷயத்தில் இவன் சலிப்புக் கொள்வதேயில்லை. அப்படிப் படித்தால்தான் மார்க்ஸின் சித்தாந்தத்தைச் சரியாக அறிந்து கொள்ள முடியுமென்பது இவன் கருத்து.

கண்டதும் காதல்

—"வருணன்"

ஞானதுரை மகா புத்திசாலி. எதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்ற ஆசையுடையவன். ஊசி மிளகாய் மிகவும் காரமாய் இருக்கும் என்று பெரியவர்கள் யாராவது சொன்னால் அதைக் கேட்டுத் திருப்தியடைந்துவிட மாட்டான். ஒரு காசுக்கு அதைக் கடையிலே போய் வாங்கிக் கொண்டு வந்து, நாக்கிலே வைத்துக் கடித்துப் பார்ப்பான். ஆஹா! ஒரு நாள் இப்படி இவன் செய்து விட்டு ஆடிய ஆட்டத்தைப் பார்க்க வேண்டுமே. சிதம்பரம் ஸ்ரீ நடராஜாவின் தாண்டவ நிருத்தியமெல்லாம் கெட்டு விட்டது. கண்களிலே ஜலம் தாரை தாரையாகப் பெருகுகிறது. முகத்தையெல்லாம் சுளித்துக் கொள்கிறான். தை தை யென்று ஓரே கூத்தடிக்கிறான். இவனுடைய நாட்டியத்தைப் பார்த்துப் பக்கத்திலுள்ளவர்கள் சிரிக்கத் தொடங்கினால், இவனுக்கு இன்னும் அதிகமான ஆத்திரம் உண்டாகிறது. கண்டபடி திட்டவும் ஆரம்பித்து விட்டான். இவ்வளவெல்லாம் ஆன பிறகுதான் இவனுக்கு ஊசி மிளகாய் எப்படிப்பட்ட குணமுடையதென்று தெரிந்தது. இந்த மாதிரியான அநுபவங்களைப் பெறுவதில்தான் இவன் பெருமைப் படுவானே தவிர, மற்ற எட்டிச் சுரைக்காய் அநுபவங்களை இவன் சிறிதுகூட லட்சியஞ் செய்ய மாட்டான்.

இப்படியேதான் 'கண்டதும் காதல்' என்னும் ஒரு வாக்கியத்தை எங்கேயோ—அது திருக்குறளிலோ அல்லது திருச்சிற்றம்பலக் கோவையிலோ நமக்குத் தெரியாது.—படித்து விட்டான். அஃதெப்படி கண்டதும் காதல் உண்டாகும்? தொட்டாலன்றோ உண்டாகும்? அல்லது ஒருவரோடொருவர் கல கல வென்று பேசி, சிரித்து விளையாடினாலன்றோ உண்டாகும்? இப்படி இவனுக்குப் பல சந்தேகங்கள் உண்டாயின. இந்தக் கண்டதும் காதல் விஷயத்தைப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அவ்வளவுதான். பரிசோதனை செய்யத் தொடங்கி விட்டான்.

ஞான துரை வசித்து வந்தது ஒரு குக்கிராமம். மரியாபுரம் என்று பெயர். அதில் சுமார் இருபது குடிசைகளே இருந்தன. எல்லாரும் பரம ஏழைகள். கறிகாய் விற்றும், வெற்றிலை விற்றுமே இவர்கள் தங்கள்

அன்றாட காலட்சேபம் நடத்தி வந்தார்கள். இந்தக் கிராமத்தின் மொத்த ஜனத்தொகை 33 பேர். இதில் 19 பேர் பெண்கள்; 14 பேர்தான் ஆண்கள். மேற்படி 19 பெண்களில் விவாகமாகாத கன்னிகைகள் 11 பேர். விவாகமாகாத ஆண்களில் ஞானதுரையோடு சேர்த்து மொத்தம் 3 பேர். இந்த மூன்று பேரில் இரண்டு பேருக்கு இனிக் கலியாணம் ஆகாது. ஞானதுரை ஒருவன் தான் விவாகத்திற்குரியவனா யிருக்கிறான். ஏனென்றால் இந்த ஒருவனுக்குத் தான் அங்கப் பழுதொன்றுமில்லை. தவிர, தமிழ்ப் பயிற்சியும் ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் பேசவும் இவனுக்குத் தெரியும். இதனால் விவாகப் பிராப்தியில் இவனுக்கே அதிகமான பாகம் இருந்தது.

மேற்படி கிராமத்தில் மக்கி என்றொரு பெண் இருந்தாள். மக்தலேன் என்பது இவளுடைய ஞானஸ்நானப் பெயராம். அதைப்பற்றி நமக்குத் தெரியாது. மக்கி, அவளுடைய அந்தஸ்துக்கு அவள் அழகுதான். அந்தஸ்துக்கும் அழகுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டு விடாதீர்கள்? இந்தக் காலத்தில் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்று சொல்கிறார்களல்லவா? அந்த அளவைக் கொண்டு மக்கியின் அழகை அளந்து பார்க்க முடியாது. கிராமத்திலே வசிக்கிறவள்தானே. ஆனால் அவள் தினந்தோறும் அருகாமையில் ஓடும் ஓடையில் குளிப்பாள். தன்னுடைய இரண்டு சீலைகளையும் அன்றாடம் துவைத்துக் கொள்வாள். சுத்தமாயிருப்பதிலேதான் அழகிருக்கிறதென்பது அவளுடைய அபிப்பிராயம் போலிருக்கிறது. ஆனால் அவளுக்கு இந்தத் தத்துவங்களெல்லாம் தெரியுமா என்ன? மக்கி, நிரம்ப அடக்கமான பெண். குனிந்து தான் நடப்பாள். உரத்துப் பேச மாட்டாள். பேசுகிற இரண்டொரு வார்த்தைகளும் அர்த்த புஷ்டியுடையதா யிருக்கும். இவளுடைய தகப்பனார் வெற்றிலை விற்று ஜீவனம். இவள், இதற்காகப் பக்கத்துத் தோட்டக் கால்களுக்குச் செல்வது வழக்கம். காலை பல் துலக்கி முகங் கழுவி கஞ்சி குடித்து விட்டு வெற்றிலைத் தோட்டத்துக்குச் சென்றால்; பகல் ஒரு மணிக்கோ இரண்டு மணிக்கோதான் திரும்பி வருவாள். இப்படிச் செல்கிற போது இவள் தனியாகச் செல்வதுதான் வழக்கம்.

இப்படி ஒரு நாள் இவள் வெற்றிலைத் தோட்டத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது எதிர்ப்பக்கமாக ஞானதுரை வந்து கொண்டிருந்தான். அவன் இவளைப் பல முறை இதற்கு முன்னர் பார்த்திருக்கிறான். ஆனால் இன்று அவளிடத்தில் என்றுமில்லாத ஓர் அழகு பிரகாசித்துக் கொண்டிருப்பதாக அவனுக்குப் பட்டது. மக்கியும், ஞானதுரையை இதற்கு முன்பு எத்தனையோ தடவை பார்த்திருக்கிறாள். சந்தித்துப் பேசியுமிருக்கிறாள். ஆனால் அன்று அவன் பார்வையிலே ஏதோ ஒரு புதிய ஒளி வீசுவதாக அவளுக்குப் பட்டது. அவன் நடையிலே ஒரு மிடுக்கு; அவன் தலைமயிரைச் சீவி விட்டிருப்பதிலே கூட ஒரு ஒழுங்கு. இப்படியெல்லாம் இவள் கண்களுக்குப் புலப்பட்டது. இதற்கு முன்

னர் இரண்டு பேரும் பல விஷயங்களைப் பற்றி உரத்தும் தர்க்கம் செய்தும் பேசி யிருக்கிறார்கள். பலர் முன்னிலையிலும் பேசி யிருக்கிறார்கள். யாரும் இவர்களைச் சந்தேகித்தது கிடையாது. ஆனால் இன்று இருவரும் சந்தித்தது இந்த இருவருக்குமே ஏதோ ஒரு புது மாதிரியாக இருந்தது. இத்தனை நாள் சந்திப்புக்கும் இன்றைக்கும் என்ன வித்தியாசம்? இடையிலே யார் வந்து புகுந்து இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தி விட்டது? இருவருக்குமே தெரிய வில்லை. ஆனால் இருவருடைய மனதிலும் ஏதோ புது மாதிரியான கிளர்ச்சி யுண்டாயிற்று. ஞானதுரைக்கு இன்னதென்று தெரிய வில்லை. வழக்கமாக மக்கியைப் பார்த்துப் பேசுகிறவன், இன்று அவளைப் பார்த்துப் பேச வில்லை. அவளும் இவனோடு பேச வில்லை. என்ன ஆச்சரியம்?

ஒருவரை யொருவர் சந்தித்து விட்டு வாய் மூடி மௌனியாய்ப் போய் விட்டார்கள் இருவரும். இரண்டு பேருடைய கண்கள் மட்டுந்தான் சந்தித்தன; இரண்டு பேருடைய உதடுகளிலிருந்தும் ஏதோ ஒரு வகையான சிரிப்பு உண்டாகியது. ஆனால் இத்தனை நாட்களாகச் சிரித்த சிரிப்புக்கும் இந்தச் சிரிப்புக்கும் ஏதோ வித்தியாசம் இருப்பதாக மட்டும் தெரிந்தது. என்ன வித்தியாசம் என்பதை இந்த இரண்டு பேராலுமே சொல்ல முடியவில்லை; ஆனால் அநுபவிக்கத்தான் முடிந்தது.

ஞானதுரையும் மக்கியும் அவரவர் வழியே சென்று விட்டார்கள். ஆனால் ஒருவரை யொருவர் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு மட்டும் சென்றனர். மக்கி, நேராக வெற்றிலைத் தோட்டத்திற்குச் சென்றவள், வெற்றிலையைப் பறிக்க வில்லை. ஓரிடத்திலே உட்கார்ந்து கொண்டு, ஒரு சிறு குச்சியால் பள்ளந் தோண்டிக் கொண்டிருந்தாள். அடிக்கடி பெருமூச்சு விடுகிறாள். வெறிக்க வெறிக்க மேலே பார்க்கிறாள். உடம்பெல்லாம் ஒரே உஷ்ணமா யிருக்கிறது. குளிர்ச்சியான இடத்தில் போய் உட்காரப் பிரயத்தனப்படுகிறாள். ஆனால் மனது, உடம்பை எழுந்திருக்க விடமாட்டேனென்று பலவந்தமாக இழுத்துப் பிடித்து இருத்தி வைத்திருக்கிறது. இப்படியே பகல் பன்னிரண்டு மணியாகி விட்டது. ஒரு பொடிசு வெற்றிலை கூட இவள் பறிக்கவில்லை. வெற்றிலைத் தோட்டக்காரனை கிரிச்சான் 'இந்த பொம்பளைக்கு ஏதோ பைத்தியந்தான் பிடிச்சுகிணு இருக்குது' என்று உரத்துச் சொல்லிக் கொண்டே, தோட்டத்து மூங்கில் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு, அவள் வீட்டுக்குத் தகவல் சொல்லப் போய் விட்டான்.

வீட்டுக்கு வந்த ஞானதுரையோ, ஏதேனும் ஒரு புஸ்தகத்தை எடுத்துப் பார்க்கும் வழக்கமான காரியத்தைச் செய்யாமல், தெருத் திண்ணையிலே போய் உட்கார்ந்தான். இவன் இரண்டு கைகளும் இவன் மோவாய்க் கட்டையில் போய் அடைக்கலம் புகுந்து கொண்டன. இவன் வாய் ஏதோ முணகிக் கொண்டிருந்தது. கால் கட்டை விரலை அடிக்கடி அசைத்துக் கொடுத்தான். இந்தக் கிராமத்

திலே மக்கியின் வீடு ஒன்றுதான் இருப்பதாக இவன் நினைவு. இவன் கண்கள் அந்த வீட்டையே நோக்கிக் கொண்டிருந்தன. இப்படியே இவனும் பகல் பன்னிரண்டு மணிவரை உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வெற்றிலைத் தோட்டத்துக் கிரிச்சான் அப்பொழுது தான் வீதி வழியாக வந்தான். 'என்னப் பேன் துரை! அந்தப் பெண்ணு மக்கிக்கு கிறுக்குப் பிடிச்சு போயிட்சுங்கிறேன். தோட்டத்திலேயே குந்திக்னு, மண்ணை தோண்டிக்னு கிடக்குது' என்று ஞானதுரையைப் பார்த்துச் சொன்னான். ஆனால் ஞானதுரைக்கும் அதே மாதிரியான கிறுக்குப் பிடித்திருக்கிறதென்பது அவனுக்கென்ன தெரியும்?

* * *

ஞானதுரைக்கும் மக்கிக்கும் விவாகமாகி எத்தனையோ வருஷங்களாகின்றன. இப்பொழுது ஐந்து குழந்தைகள். இரண்டு பேரும் ஒரு நாள் வீதியில் நல்ல நிலவில் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, இரண்டு பேருக்கும் ஆதியில் ஏற்பட்ட சந்திப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்றுதான் 'கண்டதும் காதல்' என்றால் என்னவென்பதை இரண்டு பேருமே தெரிந்துகொண்டார்கள். தங்கள் குழந்தைகள் தங்களைப் போல் இனிச் செய்தால் அதற்காக இவர்கள் ஆட்சேபிக்க மாட்டார்களல்லவா?

இந்திய அரசாங்கத்தின் ரயில்வே வரவு செலவுத் திட்டம்

	வரவு லட்சம் ரூ	செலவு லட்சம் ரூ	கூடுதல் லட்சம் ரூ
1939-40ம் வருஷம்			
உத்தேசமாக எதிர் பார்த்தது	94,75	92,62	213
நிகரமாக ஏற்பட்டது	97,30	93,69	361
1940-41			
உத்தேசமாக எதிர் பார்த்தது	103,75	95,46	829



கிருஷ்ண காந்தன் உயில்

வங்க பாஷையில் எழுதியவர்: பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர்; மொழி பெயர்த்தவர்கள்: பண்டித ஸ்ரீ சைல தாதாசாரியாரும் ஸ்ரீ த. நா. குமார சுவாமி பி. ஏ. அவர்களும்; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர்; சென்னை; டபிள் கிரவுன் அளவு 1-16; 270 பக்கங்கள்; விலை; ரூ 1-8-0.

ஒரு குடும்பத்தில் அதிகமான சொத்துக்கள் இருக்குமானால் அதனைப் பங்கிட்டுக்கொள்ள எத்தனை பேர் என்னென்ன விதமான சூழ்ச்சிகளைச் செய்கின்றனர் என்பதை இந்த நூலினின்று நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். கள்ள மனமும், தூய உள்ளமும் மாறி மாறி இந்தக் கதையில் நமக்குக் காட்சி யளிக்கின்றன. ஸ்ரீ பங்கிம் சந்திரர், அவருக்கென்று சொந்தமாயுள்ள சுவாரஸ்யமான நடையில் இந்தக் கதையை பல கற்பனை அலங்காரங்களுடன் சிருஷ்டித்திருக்கிறார். ஆங்காங்கு உயர்ந்த கருத்துக்களடங்கிய நகைச் சுவை பரிமளிக்கிறது. இந்தக் கதையை மொழி பெயர்த்திருக்கிற இரண்டு ஆசிரியர்களும் வங்க மொழி யிலிருந்து தமிழில் மொழி பெயர்ப்பதில் மகா சமர்த்தர்கள். ஏற்கனவே இவர்கள் பல நூல்களை மொழி பெயர்த்திருப்பதினின்று இது நன்கு புலனாகும். பிரஸ்தாப மொழி பெயர்ப்பு மிக நன்றாகவும், வாசகர்களை மேன்மேலும் உற்சாகப் படுத்துகிற மாதிரியாகவும்இருக்கிறது.

படியாதவர் படும் பாடு

ஸ்ரீ தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் இதற்கு முகவுரை எழுதி யிருக்கிறார்கள்; வெளி யிட்டோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்: பவழக்காரத் தெரு. சென்னை; ராயல் 1x16 அளவு; 96 பக்கங்கள்; விலை: ஆறு அணா.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இது வரை சுமார் 245 நூல்களுக்கு மேல் வெளியிட்டிருக்கின்றனர். அவற்றுள், இந்த நூலைத் தலையாய நூலாக நாம் கொள்வோம். இந்த நூல் இந்த முறையில் வெளியாவதற்குமுக்கிய காரணர்களாயிருந்த பல அன்பர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். படியாதவர்கள், இந்த நவ நாகரிக உலகத்தில் எங்கெந்த விதத்தில் அகப்பட்டுத் திணறுகிறார்கள் என்பதை இதில் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள் ஆசிரியர்கள். நூலின் இடையிடையே மனத்தைக் கவரும் படங்கள் பல நிரவி யிருக்கின்றன. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கு நமது மனமார்ந்த பாராட்டுதல் உரியதாகுக.

53வது இந்திய தேசிய காங்கிரஸ்

(ராம்கார்)

தலைவர் தேர்தல் விவரம்

பீஹார் மாகாணத்திலுள்ள ராம்கார் என்னுமிடத்தில் 53வது தேசிய காங்கிரஸ், 1940ம் வருஷ மார்ச் மாதம் மூன்றுவது வாரத்தில் கூடும். அதற்குத் தலைவர் தேர்தல் 15–2–40ல் நடைபெற்றது. தலைவர் ஸ்தானத்திற்கு மௌலானா அபுல் கலாம் அஸாத்தும் ஸ்ரீ எம். என். ராயும் அபேட்சகர்களாக நின்றார்கள். இருவருக்கும் கிடைத்த ஓட்டுகளின் விவரம் வருமாறு:—

மாகாணம்		மௌலானாவுக்குக் கிடைத்த ஓட்டுகள்	எம். என். ராய்க்குக் கிடைத்த ஓட்டுகள்.
ஆஜ்மீர்	....	3	—
ஆந்திரம்	....	173	15
அஸ்ஸாம்	....	45	3
பீஹார்	....	239	19
பம்பாய்	....	19	1
குஜராத்	....	111	1
கர்நாடகம்	....	92	19
கேரளம்	....	86	1
மஹா கோசலம்	....	97	9
மஹா ராஷ்டிரம்	....	117	17
நாகபுரி	....	21	4
வ. மே. எல்லை மாகாணம்	....	48	2
பஞ்சாப்	....	188	23
சிந்து	....	20	22
தமிழ் நாடு	....	178	9
ஐக்கிய மாகாணம்	....	272	49
உத்கல்	....	119	4
விதர்ப்பம்	....	26	5
	மொத்தம்	1,854	183

வங்காள மாகாணமும் டெல்லி மாகாணமும், இந்தத் தேர்தலில் கலந்து கொள்ள வில்லை.

குடியேற்ற நாட்டந்தஸ்தும் : : வெஸ்ட் மின்ஸ்டர் சட்டமும்

— எஸ். கே. நாராயண ஐயர்
B. A. B. L.

கொஞ்ச காலமாகவே இந்தியாவிலும் பர்மாவிலும் குடியேற்ற நாட்டந்தஸ்து என்னும் விஷயம் அதிகமும் உசாவப் பெறுகிறது. முந்திய மஹாயுத்தம் முடிந்ததும் அதனில் பிரிட்டிஷாருடன் சேர்ந்துழைத்ததற்குப் பிரதி பலனென்னும் நிலையில் பிரிட்டிஷ் சட்ட சபையாகிய பார்லிமெண்டு 1919ம் வருஷத்து இந்தியா அரசாங்க சட்டத்தை நிறைவேற்றி இந்திய மக்களுக்கு நாட்டுப் பரிபாலனத்தில் சிறிது அதிகமான பங்கைத் தந்தது. அச் சட்டத்தின் பீடிகையில் இந்திய மக்களுக்குத் தமது தேசத்தின் பரிபாலனத்தில் படிப்படியாக மேன் மேலும் பொறுப்பைத் தந்து கடைசியில் அவர்களுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து தருவதென்று கூறியிருக்கிறது. என்றாலும் இந்திய மக்களிடத்தே போதிய திருப்தியும் உற்சாகமும் உண்டாகவில்லை. ஒத்துழையாமைக் கட்சியினர் பெருகி அரசியல் விஷயங்களைப் புறக்கணித்து தமது அதிருப்தியை வெளியிட்டதோடு அச் சட்டத்தின் குறைகளையும் தெள்ளிதின் புலப்படுத்தினர்.

விடாது நடத்திய கிளர்ச்சியின் பயனாய் பிரிட்டிஷ் சர்க்கார் மறுமுறையும் அரசியல் விஷயங்களை விசாரிக்க ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அவர்கள் விசாரித்து சமர்ப்பித்த யாதாஸ்தைக் கொண்டும் பின்னர் பொது மக்களின் பிரதிநிதிகளை வரவழைத்து வட்ட மேஜை நடவடிக்கைகள் நடத்தியும் விஷயம் உசாவி 1935ம் வருஷத்து இந்தியா அரசாங்கச் சட்டத்தை பார்லிமெண்டில் நிறைவேற்றினர். இச் சட்டத்தில் முந்திய 1919ம் வருஷத்துச் சட்டத்தில் பீடிகையில் கூறப் பெற்றிருந்தது போல் பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம் கடைசியில் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து தருவதுதான் என்று கூறப் பெறவில்லை. நோக்கம் மாறி விட்டதோ வென்று சந்தேகித்து பொதுமக்கள் கிளர்ச்சி செய்யவே, பார்லிமெண்டு ஷை 1935ம் வருஷத்து இந்தியா அரசாங்க சட்டத்தில் இந்த பீடிகையையும் சேர்த்து திருத்தி யமைத்தது.

உலக யுத்தம் முடிந்த இருபது வருஷங்களுக் குள்ளேயே மறுமுறையும் ஒரு பெரிய யுத்தம் ஏற்பட்டிருக்கின்றது. முந்திய யுத்தத்திற்குப் பிறகு

அபிசீனிய யுத்தமும் சீன ஜப்பான் யுத்தமும் நேர்ந்துள்ளன வென்றாலும் அவற்றில் பிரிட்டிஷ் சர்க்கார் யாதும் பங்கெடுத்துக் கொள்ள வில்லை. ஆனால் இப்போது ஐரோப்பா கண்டத்தில் நேர்ந்துள்ள யுத்தத்தில் முந்திய மஹா யுத்தத்தில் போன்றே பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக் காரரும் ஒரு கட்சியிலும் ஜெர்மானியர் மற்றொரு கட்சியிலு மிருந்து யுத்தம் புரிகின்றனர். இந்த யுத்தத்திலும் முந்திய யுத்தத்தில் போன்றே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் குடியரசாட்சியை நிலைநிறுத்தவும் சிறு சிறு இராஜ்யங்களின் சுயேச்சையையும் நிம்மதியையும் ஸ்தாபிக்கவுமே முயன்றுள்ளது. பிரிட்டிஷ் சர்க்கார் யுத்தம் ஆரம்பித்ததும் ஏனைய குடியேற்ற நாடுகளும் தம்மாலியன்ற உதவி புரிய முன் வந்துள்ளன. இந்தியாவும் மற்ற சாம்ராஜ்ய தேசங்களைப் போல யுத்தத்தில் உதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளப் பெற்றது. பெரும்பாலான மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த காங்கிரஸ் மஹா சபை, இந்தியாவைப் பொருத்த மட்டில் பிரிட்டிஷ் சர்க்கார் அபிப்ராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டது. அதாவது மற்ற நாடுகளின் சுயேச்சைக்கும் குடியரசு ஸ்தாபனத்திற்கும் சண்டையிடும் பிரிட்டிஷ் சர்க்கார், அவ்வுரிமைகளை இந்தியாவுக்குத் தர தயாராயிருக்கின்றனரா வென்பதைத் தெரிவிக்கும்படி கேட்டது. கேள்விக்கு நேரிடையான பதிலைத்தருவதற்கு மாறாக, இந்திய ராஜப் பிரதிநிதி பிரிட்டிஷ் சர்க்காரின் உத்தரவின்படி நீண்டதோர் வியாக்கியானம் செய்தார். பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் நேரான நோக்கத்தைக் கூறாது இந்திய நாட்டில் சிறு பான்மையோர் கட்சிகளும் விதண்டா வாதங்களும் மலிந்து கிடக்கின்றன வென்றும் ஒற்றுமை மிகவும் குறைந் திருப்பதாயும் காட்டி குறிப்பிட்ட சிலதலைவர்களுக்குபேட்டியளித்து அவர்களுக்குள்ளே யுள்ள வேற்றுமைகளை நீக்கிக் கொள்ளும்படி கோர, அம் முயற்சியில் ஈடுபட்ட பிரமுகர்கள் வெற்றியடையாது போகவே, இந்தியாவுக்கு சுயேச்சை தருவது குறித்த அபிப்பிராயத்தை இப்போது கூறுவது சாத்தியமில்லை யென்றும் குறிப்பாகத் தெரிவிக்கப் பெற்றது.

இந்தியாவில் இந்த விஷயங்கள் நடந்து கொண்டிருந்த சமயம் அவற்றைக்கவனித்து வந்த பர்மியர்களும் தமது நாட்டைக் குறித்த வரையில் பிரிட்டிஷார் அபிப்பிராயத்தை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டதோடு இந்தியாவைப் போன்று தமது தேசத்தில் சிறு பான்மையோர் கட்சியென்றும் பெரும்பான்மையோர் கட்சி யென்றும் விவாதங்கள்கிடையாதென்றும் இந்து முஸ்லீம் சச்சரவுகள் மருந்துக்கும் அகப்படாதென்றும் ஒரே மக்கள் வாழும் தமது நாட்டிற்கு உடனே சுயேச்சை தருவதே சாலப் பொருத்தமுள்ளதென்றும் தெரிவித்தனர். பர்மா கவர்னரும் இந்திய இராஜப் பிரதிநிதியைப் போலவே பர்மாவிற்கும் படிப்படியாக அரசாட்சியில் பொருப்புக்களை அதிகரிக்கச் செய்து அநுபவமும் நேர்மையும் வளர்ச்சியடைந்தால் கடைசியில் இதற்கும் குடியேற்ற நாட்டந்தஸ்து கொடுக்கப் பெறுமென்றும் கூறினார். தவிர, இக்குடியேற்ற நாட்டந்தஸ்து பண்

டம் பரிசுகளைப் போல் வழங்கக் கூடியதில்லை யென்றும் அரசியல் விஷயங்களில் அதிகமான பழக்கத்தை யடைந்தபின் இந்தக் குடியேற்ற நாட்டந்தஸ்தைத் தாமாகவே பெறலாமென்றும் தெரிவித்தார். ஆகவே மக்களுடையவும் அவர்கள் பிரதிநிதிகளுடையவும் நோக்கம் அரசியல் முறைகளை நன்குணர்ந்து தேர்ச்சியடைய வேண்டியதே. எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் தேர்ச்சியில் முன்னேறுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் இந்தக் குடியேற்ற நாட்டந்தஸ்தும் அவர்களுக்கு சித்திக்கும்.

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் எதிர்காலத்தில் பிரிட்டிஷ் சர்க்காரால் ஆமோதித்து கிடைக்கக் கூடிய இந்தக் குடியேற்ற நாட்டந்தஸ்து என்னவென்பதே எல்லார் மனத்திலும் இப்போது உசாவப் பெறுகின்றதென்பது மிகையாகாது. குடியேற்ற நாட்டந்தஸ்து இப்போது பொதுவாக கானடா, நியூஜீலண்டு, ஆஸ்திரேலியா முதலிய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் அனுபவித்து வருகின்றன. இந் நாடுகளின் அரசாங்க நிலைமை ஏகாதிபத்திய மகா நாடுகளுக்குப் பிறகு ஆம் மகா நாடுகளில் நிறைவேற்றிய தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்திய 1931ம் வருஷத்திய வெஸ்டு மின்ஸ்டர் சட்டப்படியாகும். இந்த வெஸ்டு மின்ஸ்டர் சட்டப்படி உண்டாக்கப் பெற்ற குடியேற்ற நாடுகளுக்கு சுயேச்சையும் பூரண அரசுரிமையுமுண்டா, அந்நாடுகள் தமக்கிஷ்டமான போது பிரிட்டிஷ் அரசாங்கத்தினின்றும் வேறுபட வியலுமா வென்ற பல கேள்விகள் பிறக்கின்றன. எந்த ஒரு குடியேற்ற நாடு, தனக்கிஷ்டமான போது பிரிட்டிஷ் அரசாங்கத்தினின்றும் விடுபட வியலாதோ அதற்கு சுயேச்சையும் பூரண அரசுரிமையுமில்லை யென்பது சிலர் கொள்கை. வழக்கறிஞர்களில் பெரியார்களாகிய திரு. எஸ். சீநிவாஸய்யங்கார் போன்றவர்கள், வெஸ்டுமின்ஸ்டர் சட்டப்படி நிர்மாணிக்கப்பெறும் குடியேற்ற நாட்டந்தஸ்துள்ள தேசங்கள் தமக்கிஷ்டமான போது விலகிக் கொள்வது இயலாதென்றும் அவ்வுரிமையில்லாமையால் அத்தகைய தேசங்கள் சுயேச்சையுடைய நாடுகளாகா வென்றும் குறுநில மன்னர் தேசங்கள் போன்றே கீழ்ப்படிந்து கிடக்க வேண்டியதுதான் என்றும் அபிப்பிராயப் படுகின்றனர். எவரொருவருடைய அபிப்பிராயத்தை ஆதரிப்பது அல்லது கண்டிப்பது என்பதை மேற்கொள்ளுமுன் வெஸ்ட் மின்ஸ்டர் சட்டத்தை நன்கு கவனிப்பது சிலாக்கியம். ஆகையால் சாத்தியமான வரையில் சரியான மொழி பெயர்ப்போடு அச்சட்டத்தை இங்கே குறிப்போம்:—

1931 வருஷத்திய வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம்

(1926, 1930-வது வருஷங்களில் நடைபெற்ற ஏகாதிபத்திய மகா நாடுகளில் நிறைவேற்றிய சில தீர்மானங்களுக்கு பலன் தருவதற்காகச் செய்த சட்டம்.)

யுனைடெட் கிங்டம், கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலண்ட், தென்னாப்பிரிகா, ஐரிஷ் சுயேச்சை நாடு, நியூ பவுண்ட்லாண்ட் தேசங்

களிலுள்ள சக்கிரவர்த்தியின் அரசாங்கங்களின் பிரதிநிதிகள் வெஸ்டுமின்ஸ்டர் என்னுமிடத்தில் இயேசு பிறந்த 1926வது 1930வது வருடங்களில் நடத்திய 'ஏகாதிபத்திய மகா நாடுகளில் அம்மகா நாடுகள் குறித்து எழுதிய அறிக்கைகளில் சொல்லப்பெற்றுள்ள தீர்மானங்களையும் பிரகடனங்களையும் ஒரே மனதாக ஒப்புக்கொண்டமையாலும்,

இச்சட்டத்திற்கு முகவுரை அல்லது பீடிகையாகச் சொல்லுவது பொருத்தமும் நியாயமுமாயிருப்பதோடு பிரிட்டிஷ்பிரஜாமண்டலத்தின் (காமன் வெல்த்) அங்கத்தினர்களின் கட்டில்லாக் கூட்டுறவிற்கு மன்னர் ஓர் அடையாளமாகையாலும், தவிர அவர்கள் மன்னர் மாட்டுள்ள பொதுப் பற்றுதலால் சேர்க்கப்பெற்றிருப்பதால் பிரஜா மண்டல (காமன்வெல்த்) அங்கத்தினரிடையே ஊர்ஜிதமாக ஏற்படுத்தப் பெற்றுள்ள வழக்கப்படி மன்னர் திருமுடி, பட்டம், கட்டியம் முதலியவைகளின் வார்சு குறித்த சட்டத்தின் மாறுபாடுகளுக்கு யுனைடெட் கிங்டத்தின் சட்ட சபையின் சம்மதம் மட்டுமேயன்றி குடியேற்ற நாட்டு சட்ட சபைகளின் சம்மதியும் பெற வேண்டு மென்ற வழக்கத்தின்படியிருக்குமாகையாலும்,

இனியும் யுனைடெட் கிங்டத்தின் சட்ட சபையால் செய்யப் பெற்ற எந்த சட்டமும் யாதொரு குடியேற்ற நாட்டிலும் அக்குடியேற்ற நாடு சம்மதித்துக் கேட்டுக் கொண்டாலொழிய ஆதிக்கம் பெறக் கூடாதென்று ஏற்பட்டுள்ள தேச நிர்மாணத்தின் நிலைமைக் குகந்ததா யிருக்குமாகையாலும்,

அத்தகைய மகா நாடுகளின் தீர்மானங்கள், பிரகடனங்கள்சிலவற்றை ஒப்புக் கொள்ளவும், ஆமோதிக்கவும், ஊர்ஜிதப்படுத்தவும் யுனைடெட் கிங்டத்தின் சட்ட சபையால் பொருத்தமான முறையில் சட்டமியற்றுவது அவசியமாகையாலும்,

கானடா குடியேற்ற நாடும், ஆஸ்திரேலியா காமன் வெல்த்தும், நியூஜீலண்ட் குடியேற்ற நாடும், தென் ஆப்பிரிக்கா யூனியனும், ஐரிஷ் சுயேச்சை நாடும், நியூபவுண்ட் லாண்டும் தனித் தனியாகப் பிரார்த்தித்துக் கொண்டதோடு முன் கூறியவைகளை இச்சட்டத்தில் இதன் கீழ் கூறியுள்ளபடி செய்து முடிக்க யுனைடெட் கிங்டத்தின் பார்லிமெண்டில் சமர்ப்பிக்க சம்மதித்துள்ளனவாதலாலும்,

தற்போதைய பார்லிமெண்டில் கூடியிருக்கும் பாரமார்த்திக, லௌகிக பிரபுக்கள், பொது மக்கள் முதலியோருடைய ஆலோசனையின் பேரிலும் சம்மதத்தின் பேரிலும், இது போழ்து ஒப்பற்ற மேன்மை தங்கிய மன்னர்பிரானுல் கீழ்க் கண்டபடி சட்டமாக்கப் பெறுவதாக:—

1. இந்த சட்டத்தில் 'டொமினியன்' என்பது கீழ்க் குறிப்பிட்ட ஏதாவதொரு டொமினியனைக் குறிக்கும். அதாவது, கானடா டொமினியன், ஆஸ்திரேலியா காமன்வெல்த், நியூஜீலண்ட் டொமினியன், தென் ஆப்பிரிகா யூனியன், ஐரிஷ் சுயேச்சை நாடு, நியூபவுண்ட்லாண்ட் என்பவை.

2. (1) இச்சட்டம் அமுலுக்குவந்த பிறகு ஒரு டொமினியன் சட்ட சபையால் செய்யப் பெறும் எந்தச்

சட்டங்களையும் 1863ம் வருஷத்தில் குடியேற்ற நாட்டுச் சட்டங்களின் அங்கீகாரச் சட்டம் பாதிக்காது.

2. (2) இச்சட்டம் அமுலுக்குவந்த பிறகு ஒரு டொமினியன் சட்ட சபையில் செய்யப்பெறும் எந்த சட்டமும் இங்கிலாந்தின் சட்டத்திற்கு (விரோதமாயிருக்கின்றதென்பதாலோ) அல்லது யூனைடெட் கிங்டத்தின் சட்ட சபையின் தற்போது அமுலிலுள்ள அல்லது இனியும் செய்யப்போகும் சட்டத்திற்கு (விரோதமாயிருக்கின்றதென்பதாலோ) அல்லது அத்தகைய சட்டத்தின்படி செய்யப் பெற்றுள்ள யாதொரு உத்திரவு, விதி, அல்லது நடை முறைக்கு (விரோதமா யிருக்கின்றதென்பதாலோ) செல்லாதென்றாவது பிரயோஜன மற்றதென்றாவது சொல்வதற்கில்லை. டொமினியன் சட்ட சபைக்கு டொமினியனின் சட்டமென்ற முறையில் அத்தகைய ஒரு சட்டத்தை அல்லது உத்திரவை, விதியை அல்லது நடை முறையை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ அதிகாரமுண்டு.

3. நாட்டிற்கு அப்பாலும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய சட்டங்கள் செய்ய இதன் மூலமாக, டொமினியன் சட்ட சபைகளுக்கு அதிகாரமுண்டென்று சட்டம் செய்யப் பெறுகிறது.

4. இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு யாதொரு டொமினியன் சம்மதித்துப் பிரார்த்திக் கொண்டதென்று அச் சட்டத்திலேயே பிரகடனம் செய்யப் பெற்றிருந்தாலொழிய, யூனைடெட் கிங்டத்தின் சட்ட சபையில் செய்யப் பெறும் எந்த சட்டமும் எந்த ஒரு டொமினியன் சட்டங்களில் ஒருபகுதி யென்று அல்லது அதற்குப் பொருந்துமென்றோ அல்லது அங்கே செல்லுமென்றோ கொள்வதற்கில்லை.

5. பொதுவாக இந்தச் சட்டத்தில் இதற்கு முன் கூறிய விஷயங்களுக்கு விரோதமன்னியில் 1894ம் வருஷத்து வியாபார கப்பல் சட்டத்தின் 735—736 வது பிரிவுகளில் சொல்லியுள்ள பிரிட்டிஷ் சுவாதீன தேசங்களின் சட்ட சபை யென்பது டொமினியன் சட்ட சபையைக் குறிக்காதென்று கொள்ளப் பெற வேண்டும்

6. இந்தச் சட்டத்தில் இதற்கு முன் கூறியுள்ள விஷயங்களுக்குப் பொதுவாக விரோத மன்னியில் 1890ம் வருஷத்து கடற்படை ஆதிக்கக் குடியேற்ற நாட்டு நீதிமன்றங்கள் சட்டத்தின் நான்காவது பிரிவும் (மேன்மை தங்கிய சக்ரவர்த்தியின் ஆமோதிப்புக்கு சில சட்டங்களை நிறுத்தி வைக்க வேண்டுமென்பதும் அல்லது அச் சட்டங்களில் அமுலி லில்லாமல் செய்வதற்கு வேண்டிய வக்கணை சேர்ந்திருக்க வேண்டுமென்பதும் குறித்த) கடற்படை ஆதிக்க நீதி மன்றங்களின் நடை முறைகளையும் வழக்கத்தையும் குறித்து செய்யப் பெறும் எந்த கோர்டு விதிகளும் ஆலோசனையாளரோடு கூடிய மேன்மைதங்கிய சக்ரவர்த்தி சபையின் ஆமோதிப்பு வேண்டுமென்று மேற்படி சட்டத்தின் ஏழாவது பிரிவில் கூறியிருப்பது மட்டிலும் இந்த சட்டம் அமுலுக்கு வந்தது முதல் எந்த குடியேற்ற நாட்டிலும் அதிகார மற்றிருக்கும்.

7.— (1) இந்தச் சட்டத்திலுள்ள தெதுவும் 1867ம் வருஷம் முதல் 1939ம் வருஷம் முடிவுள்ள பிரிட்டிஷ் வட அமெரிக்க சட்டங்களின் மாற்றத்திற்கோ, திருத்தத்திற்கோ, ரத்திற்கோ அல்லது அச்சட்டங்களின் கீழ் ஏற்பட்ட எந்த விதி, உத்திரவு, நடை முறைக்கோ அமையுமெனக் கருதப்படாது.

(2) இச் சட்டத்தின் இரண்டாவது பிரிவில் கூறியுள்ள விஷயங்கள் கானடாவின் எந்த மாகாணங்களால் செய்யப் பெற்ற சட்டங்களுக்கும் அம் மாகாணங்களின் சட்ட சபைகளின் அதிகாரத்திற்கும் பொருந்தும்.

(3) இந்தச் சட்ட மூலம், கானடா சட்ட சபைக்கும் அல்லது கானடா மாகாணங்களின் சட்ட சபைகளுக்கும் கொடுத்திருக்கும் அதிகாரமானது மேற்படி கானடா சட்ட சபையின் சட்ட மியற்றும் சக்திக்கும் அல்லது அதன் மாகாணங்களின் சட்ட சபைகளுக்குரிய சட்ட மியற்றும் சக்திக்கும் பொருத்தமானதாக இருக்கும்.

8. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் நடை முறையிலிருந்த சட்டங்களுக்குப் பொருத்தமாக வல்லாமல் இச் சட்டத்தில் கண்ட எதுவும், ஆஸ்திரேலியா காமன்வெல்த்தின் அமைப்பையோ அல்லது நியூஜீலண்ட் குடியேற்ற நாட்டின் நாட்டமைப்புச் சட்டத்தையோ பாதிக்குமெனக் கருதப்படாது.

9. (1) ஆஸ்திரேலியா காமன் வெல்த் சட்ட சபையின் அல்லது அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட் படாத எந்த விஷயத்திற்கும் இந்தச் சட்டத்தில் கண்ட எதுவும் மேற்படி ஆஸ்திரேலிய காமன் வெல்த் சட்ட சபைக்கு ஆஸ்திரேலியாவிலுள்ள நாடுகளின் அதிகாரத்திற்குட் பட்ட விஷயங்களுக்குச் சட்டம் அதிகாரம் தருவதாகக் கருதப்படாது.

(2) இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் நடை முறையிலுள்ள நாட்டுச் சட்ட வழக்கப்படி யூனைடெட் கிங்டத்தின் சட்ட சபை, அத்தகைய சம்மதத்தைப் பெறாமல் ஆஸ்திரேலியாவின் நாடுகளின் அதிகாரத்திற்குட் பட்ட எந்த விஷயத்திற்கும் மேற்படி யூனைடெட் கிங்டம் சட்ட சபை, ஆஸ்திரேலியா காமன் வெல்த் அல்லது அரசாங்கத்தின் ஆமோதிப்பின்றி சட்ட மியற்றக் கூடுமென்றால் ஆஸ்திரேலியா காமன் வெல்த் அரசாங்கம் அல்லது சட்ட சபையின் அதிகாரத்திற்குட் படாத எந்த ஒரு விஷயத்திற்கும் சட்ட மியற்றும் போது யூனைடெட் கிங்டம் சட்ட சபை மேற்படி ஆஸ்திரேலியா காமன் வெல்த் சட்ட சபை அல்லது அரசாங்கத்தின் ஆமோதிப்பைப் பெற வேண்டுமென்பதில்லை.

(3) இச்சட்டத்தை ஆஸ்திரேலியா காமன் வெல்த்திற்கு அமைக்கும் போது நாலாவது பிரிவில் குறிப்பிட்டுள்ள சம்மதம், மேற்படி காமன் வெல்த் அரசாங்கத்தினது சட்ட சபையினதும் சம்மதத்தையே குறிக்கும்.

10. (1) இந்தச் சட்டத்தின் கீழ்க் கண்ட எந்தப் பிரிவும், அதாவது

இரண்டாவது, மூன்ருவது, நான்காவது, ஐந்தாவது, ஆருவது பிரிவுகள் யாதொரு குடியேற்ற நாட்டுச் சபையும் அந்தப் பிரிவை தமதாக்கிக் கொண்டாலொழிய இந்தப் பிரிவு பொருந்தும்படியான எந்தக் குடியேற்ற நாட்டிலும் அந்நாட்டின் சட்டமாகப் பொருந்தாது; இந்தச் சட்டத்தின் எந்த ஒரு பிரிவையும் தமதாக்கிக் கொள்ளும் அச்சட்ட சபைகள், இச்சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்தோ அல்லது தமதாக்கிக் கொள்ளும் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பிந்திய தேதியிலிருந்தோ அமுலுக்கு வரும்படி செய்யலாம்.

(2) இந்தப் பிரிவின் (1) வது உட்பிரிவில் கூறியுள்ளபடி எந்த ஒரு பிரிவையும் தம தாக்கிக் கொள்ளும் எந்தக் குடியேற்ற நாட்டுச் சட்ட சபையும் எந்தச் சமயத்திலும் அதனை ரத்து செய்யலாம்.

(3) இந்தப் பிரிவு பொருத்தமாய் அமையும் குடியேற்ற நாடுகளாவன: ஆஸ்திரேலியா காமன்வெல்த்தும், நியூஜீலண்ட் குடியேற்ற நாடும், நியூ பவுண்ட்லாண்டுமாகும்.

(11) 1889 வருஷத்தியவியாக்கியானச் சட்டத்தில் என்ன கண்டிருந்தாலும் யூனைடெட் கிங்டத்தின் சட்டசபையால் இச் சட்டம் அமுலுக்கு வந்த பின் செய்யப் பெறும் சட்டங்களில் 'குடியேற்ற நாடு' (காலனி) என்று சொல்லும் பதம், யாதொரு டொமினியனேயோ அல்லது டொமினியனின் ஒரு பகுதியாகவுள்ள மாகாணத்தையோ நாட்டையோ குறிக்காது.

(12) இச்சட்டம் 1931ம் வருஷத்திய வெஸ்டு மின்ஸ்டர் சட்டமென்றழைக்கப் பெறும்.

வரப் பெற்ருேம்.

சிங்கப்பூர் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கத்தின் ஒன்பதாவது வருஷ அறிக்கை (வெகுதானிய வருஷம் தை மாதம் 14ந் தேதி முதல் பிரமாதி வருஷம் தை மாதம் 20ந் தேதி வரையில்) வந்தனத்துடன் வரப் பெற்ருேம்.

ஒரு தொழிலாளி எதை விரும்புகிருன்? இஷ்டப்படி பேசவல்ல ஒரு நாக்கையா? இல்லவே இல்லை; நிரம்பிய வயிற்றையே அவன் விரும்புகிருன்.

ஃ ஃ ஃ

சுதந்திரம் என்பது என்ன? மற்றவர்களுடைய உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாமல் என்ன வேண்டுமானுலும் செய்வதுதான்.

ஃ ஃ ஃ

ஓட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடும் உரிமை கிடைத்து விட்டால் யாருடைய வயிருவது நிரம்புமா?



1940

ஜனவரி

26 சிந்து மாகாண மந்திரிச் சபையைச் சேர்ந்த இரண்டு ஹிந்து மந்திரிமார்கள் இன்று ராஜிநாமா செய்தார்கள்.

பின்லாந்தின் உதவிக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 80 ஆகாய விமானங்களை இன்று ஏற்றுமதி செய்தனர்.

27 1939-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதிக்குப் பிறகு கிடைத்துள்ள லாபத்தில் 100-க்கு 50 விகிதம் வரியாகச் செலுத்தி விட வேண்டுமென்ற கருத்தடங்கிய அதிக லாப வரி மசோதா இன்று இந்தியா கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிறது.

பிரிட்டன், தற்போது ஜெர்மனியுடன் தொடர்ந்திருக்கும் யுத்தத்தில் தென்னாப்பிரிக்கா இப்பொழுது தலையிட வேண்டாமென்று தென்னாப்பிரிக்கா சட்ட சபையில் தளபதி ஹெர்ட்ஸாக் கொண்டு வந்த தீர்மானம் தோல்வியுற்றது. சாதகமாக 59 ஓட்டுகளும் பாதகமாக 81 ஓட்டுகளும் கிடைத்தன.

ஜெர்மன் சாமான்களை ஏற்றிக்கொண்டு சென்றதன் காரணத்திற்காக 'அஸமா மாரு' என்ற ஜப்பானிய கப்பலை பிரிட்டிஷார் நிறுத்திப் பரிசோதனை செய்தனரல்லவா? அதற்குப் பதிலாக ஜப்பானியர், 'விங்ஸாங்' என்ற பிரிட்டிஷ் கப்பலைப் பரிசோதனை செய்தனர்.

28 தென்னாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் அரசாங்கத் தொடர்பு இல்லாமல் குடியரசு முறையை அமுலுக்குக் கொண்டு வரக் கிளர்ச்சி செய்யும் பொருட்டு ஹெர்ட்ஸாக்கும் டாக்டர் மலானும் சேர்ந்து ஒரு புதிய கட்சியை ஆரம்பித்திருக்கின்றனர்.

29 பெஷாவருக்கருகில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் குளிரினால் இறந்து போய் விட்டனர்.

இங்கிலாந்தின் கிழக்குத் துறை முகப் பிரதேசங்களில் இன்று ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டன, ஆனால் எவ்வித சேதமும் இல்லையாம்.

இன்றிலிருந்து மைசூர் ரெயில்வே ஒர்க்ஷாப் மூடப்பட்டு விட்டது. தொழிலாளர்களின் தொந்திரவே இதற்குக் காரணம்.

பீஹார் மாகாணத்தைச் சேர்ந்த தாகூர் மேதப் சிங் என்பவர், தமது ராய் சாஹிப் பட்டத்தைத் துறந்து விட்டார்.

30 பின்லாந்துக்குத் தக்க உதவி கிடைக்காவிட்டால் அது விரைவில் தோல்வியடைந்து விடும் என்று பத்திரிகைச் செய்திகள் கூற ஆரம்பித்திருக்கின்றன.

கல்கத்தாவில் காங்கிரஸ் மாளிகையாகக் கட்டப் படுகிற 'மஹா ஜாதி சதனம்' என்னும் கட்டிடத்திற்கு, இன்று கல்கத்தா நகர சபையார் பலத்த

வாதத்திற்குப் பிறகு லட்சம் ரூபாய் கிராண்ட் அளித்திருக்கின்றனர்.

நாஜி புரட்சியின் ஏழாவது வருஷக் கொண்டாட்டம் இன்று பெர்லினில் கொண்டாடப் பட்டது. அப்பொழுது ஹிட்லர், பிரிட்டனைக் கண்டித்துப் பேசி னான்.

31 பிரிட்டிஷ் லிபரல் கட்சித் தலைவராகிய ராம்ஸே மூயிர் என்பவர் ராச் டேல் என்னும் ஸ்தலத்தில் பேசுகையில், இந்தியாவில் பல மதப் பிரிவினைகளும் ஜாதிப் பிரிவினைகளும் இருக்கும் வரையில் சுய ஆட்சி கொடுக்க முடியா தென்று கூறி னார்.

பிப்ரவரி

1 ஜப்பானின் பிரபுக்கள் சபை இன்று டோக்கியோ நகரத்தில் கூடியது. அப்பொழுது பிரதம மந்திரியான யோனாய் என்பவர், ஜப்பான் சீனா விஷயத்தை ஒரு விதமாக முடித்துக் கொள்ள விரும்புகிறதே தவிர, ஐரோப்பியச் சண்டைகளில் கலந்து கொள்ள விரும்ப வில்லை யென்று கூறினார்.

ஸ்வீடன் அரசாங்கம் தனது தேச எல்லையில் பல பாது காப்புஏற்பாடுகளைச் செய்ய 14 லட்சம் பவுன் சாங்க்ஷன் செய்திருக்கிறது

ஹிட்லரின் சுய சரிதம் என்று சொல்லப்படுகிற 'எனது போராட்டம்' என்ற நூல் புதிய பதிப்பில் வெளி வந்திருக்கிறது.

2 பால்கன் தேசப் பிரதி நிதிகளின் மகாநாடு இன்று பெல் கிரேட் நகரத்தில் கூடியது. கிரீஸ், ருமேனியா, துருக்கி, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஆஜராயிருந்தார்கள்.

சீனாவின் தளபதியாகிய சியாங்-கை ஷேக் மகாத்மா காந்தியை சீனாவுக்கு அழைத்திருந்தார். தாம் தற்போது இந்தியாவை விட்டு வெளியே வர முடியாதென்று காந்தியடிகள் தெரிவித்திருக்கிறார்.

3 ஆப்கானிஸ்தானத்து எல்லைப் புறத்தில் ருஷ்யப் படைகள் நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாக எழுந்துள்ள வதந்திகளுக்கு ஆதார மில்லை யென்று லண்டன் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது.

ராஜப் பிரதிநிதியைக் கண்டு பேச இன்று மகாத்மா காந்தி வார்தாவிலிருந்து தமது பரிவாரங்களுடன் டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

பின்லாந்துப் போராட்டத்தில் மான்னர் ஹிம் அரண் மீது சோவியத் ஆகாய விமானங்கள் ஏராளமாகக் குண்டு பொழிந்தன,

4 மகாத்மா காந்தி, தமதுபரிவாரங்களுடன் இன்று டெல்லி வந்து சேர்ந்தார்.

ராம்கார் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு மௌலானா அபுல் கலாம் அஸாத்தின் பெயரும் ஸ்ரீ எம். என். ராயின் பெயரும் சிபார்சு செய்யப் பட்டிருக்கின்றன.

இன்று துருக்கியில் மறுபடியும் பூகம்பம் ஏற்பட்டது. 45 பேர் கொல்லப் பட்டனர்.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை, நார்வே நாட்டுக்கு மட்டும் 40 கப்பல்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது,

மேற்குப் போர் முனையில் பீரங்கி முழக்கம் சதா கேட்டுக் கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது,

5 இன்று மகாத்மா காந்தியும் ராஜப் பிரதிநிதியும் டெல்லி வைஸிராய் மாளிகையில் சந்தித்துப் பேசினர். இது சம்பந்தமாக வெளியான அறிக்கையின் சாரம் வருமாறு:- சமஷ்டி திட்டத்தை விரைவில் அமுலுக்குக் கொண்டு வர பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தயாரா யிருக்கின்றனர் என்றும், அதற்குப் பூர்வாங்கமாக இந்தியா அரசாங்கத்தின் நிருவாக சபையை விசாலப் படுத்துவதாகவும் ராஜப் பிரதிநிதி கூறினார், இந்த யோசனைகள் தமக்குத் திருப்திகரமாயில்லை யென்று காந்தியடிகள் தெரிவித்தார்.

லார்ட் லின்லித்கோவின் பெண்ணும் மாப்பிள்ளையும் இன்று, மகாத்மா காந்

தியை டெல்லியில் பிர்லா மாளிகையில் சந்தித்து முக்கால் மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ருஷ்ய-பின்னிஷ் போராட்டத்தில் பின்னிஷ் படைகளுக்குப் பெரிய வெற்றி கிடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

6 கண்டபடி வதந்திகளைக் கிளப்பி விடுதல் கூடாதென்றும், அப்படிச் செய்கிறவர்களுக்கு மாண தண்டனை விதிக்கப் படுமென்றும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு சட்டம் கொணரப்படப் போவதாகச் சொல்லப்படுகிறது,

காந்தி-லின்லித்கோ சம்பாஷணை முறிந்து போய் விட்டதைக் குறித்து ஆசாபங்கமடைய வேண்டாமென்று மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார்.

ராஜப் பிரதிநிதியும் ஜனாப் ஜின்னாவும் இன்று ஒன்றரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

இன்று இந்தியா சட்ட சபையின் பட்ஜட் கூட்டம் ஆரம்பமாயிற்று. காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் ஆஜரா யிருக்கவில்லை.

7 கல்கத்தாவில் கட்டப் பெறப் போகும் காங்கிரஸ் மாளிகைக்கு கார்ப்போரேஷன் அளித்த ஒரு லட்ச ரூபாய் கிராண்டை நிறுத்தி வைப்பதென்று கல்கத்தா ஹைகோர்ட்டில் தீர்ப்பா யிருக்கிறது.

தற்போதைய யுத்தத்தில் ஜெர்மனி சமாதானத்தையே கோருகிறதென்றும் இதற்காக தளபதி கோயரிங் ஆறு சமாதான திட்டங்களைத் தயாரித்திருக்கிறா ரென்றும் ஓர் அமெரிக்க செய்தி கூறுகிறது.

ருஷ்யா, தனது மஞ்சூகோ எல்லைப் புறத்தை பந்தோபஸ்து செய்து வருகிறது.

8 பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் தேசீய இந்தியாவின் கொள்கைகளுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கின்றன வென்று மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார்.

9 ஐரோப்பாவில் இத்தலி, பிரான்சு ஜெர்மனி பிரிட்டன் முதலிய நாடுகளின் நிலைமையைப் பற்றி விசாரித்தறிய அமெரிக்க அரசாங்கத்தின் உதவிக் காரியதரிசியாகிய சம்மர் வெல்லெஸ் என்பவரை பிரசிடென்ட் ரூஸ் வெல்ட் அனுப்பியிருக்கிறார்.

ஜெர்மனியிலுள்ள யூதர்கள் இழிவான வேலைகளில் அமர்த்தப் படுகிறார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது.

சீன ஜபபானிய யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து, இது வரை, ஜப்பானுக்கு சமார் ஒன்றரை கோடி பேருக்கு மேல் சேதமேற்பட்டிருக்கிறது,

ருஷ்யாவுக்கும் பின்லாந்துக்கும் சமரஸம் செய்து வைக்க ஒரு வல்லரசு முன்னிற்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

10 இந்தியர்களுக்கு விரோதமாகத் தென்னாப்பிரிக்கா சட்ட சபையில் எவ்வித விரோதமான மசோதாவும் கொண்டுவரப்பட மாட்டா தென்று ஒரு செய்தி கூறுகிறது.

ஐரோப்பாவில் நாஜீயம் இருக்கக் கூடா தென்று பிரிட்டிஷ் மந்திரிகள் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

அமெரிக்காவின் பூரண அநுதாபம் பின்லாந்துக்கு இருக்கிறதென்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்,

11 காந்தி-லின் லித்கோ சம்பாஷணை முறிந்து போனதைக் குறித்துத் தாம் பெரிதும் வருந்துவதாகவும், இந்தியத் தலைவர்கள், வெறும் சொற்களிலே மயங்கிப் போக வேண்டாமெனறும் இந்தியா மந்திரியான லார்ட் ஜெட்லண்ட் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை நிருபருக்கு பேட்டியளிக்கும் போது கூறினார்,

சீன-ஜப்பானிய யுத்தத்தில் சீனர்களுக்கு பெரிய வெற்றி ஏற்பட்டிருக்கிறது.

மார்ச் மாத மத்தியில் ஜெர்மானியர்கள் மேற்குப் போர் முனையில் தீவிரமான சண்டை போடுவார்களென்று தெரிவதாக ஒரு செய்தி கூறுகிறது.

12 ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் ஒரு வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியா சட்ட சபையில், அதிக லாப வரி மசோதா, செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட்டது.

லார்ட் ஜெட்லண்டின் அபிப்பிராயத்தைக் கண்டித்து பாபு ராஜேந்திர பிரசாத் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

கானடாவின் கவர்னர் ஜெனரலான லார்ட் ட்வீட்ஸ் மூயிர் இன்று இறந்து போனார்

13 ஐர்லாந்து எப்படி தனது சுய முயற்சியில் சுதந்திரம் பெற்றதோ அப்படியே இந்தியாவும் தனது சுய முயற்சியில் சுதந்திரம் பெறத் தீர்மானித்திருக்கிறதென்று வெர்னன் பார்ட்லெட் என்ற ஆங்கில அறிஞர் கூறுகிறார்.

'வாக்கமா' என்ற ஜெர்மானியக் கப்பலை ஒரு பிரிட்டிஷ் கப்பல் கைப்பற்ற முயன்றது. இதனால் மேற்படி வாக்கமா கப்பல் அதிகாரிகள், தங்கள் கப்பலை முழுகடித்து விட்டார்கள்.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் இன்று சீனர்கள் இரண்டு நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டு விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

14 லார்ட் ஜெட்லண்டின் அபிப்பிராயத்தைக் கண்டித்து மகாத்மா காந்தி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

காங்கிரஸ் தலைவர் தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டுமென்று ஸ்ரீ எம். என் ராய், பாபு ராஜேந்திரரைக் கேட்டிருந்தார். அதற்கு அவர் முடியாதென்று தெரிவித்து விட்டார்.

அமெரிக்கா, தனது கடற்படையைப் பெருக்க திட்டம் போட்டிருக்கிறது.

15 காங்கிரஸ் தலைவர் தேர்தல் இன்று நடைபெற்றது. மௌலானா அபுல் கலாம் ஆசாத்துக்கு 1854 ஓட்டுகளும், எம் என் ராய்க்கு 183 ஓட்டுகளும் கிடைத்தன.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் இன்று, நடைபெற்ற தொரு யுத்தத்தில் 20,000 ஜப்பானியர்கள் மரணமடைந்து விட்டதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

ருஷ்யாவும் ஜெர்மனியும் சேர்ந்து துருக்கியைத் தாக்குமென்று சொல்லப்படுகிறது.

சிந்து மாகாணத்தின் பிரதம மந்திரியாகிய ஜனாப் அல்லா பக்ஷ் இன்று தமது பதவியை ராஜீனாமா செய்து விட்டார்.

16 ருஷ்யா பின்லாந்து போராட்டத்தில், ருஷ்யப் படைகளின் நெருக்குதலினால், பின்னிஷ் படைகள் சிறிது பின்னடைந்து போயிருக்கின்றன.

ஐரோப்பாவின் பல பாகங்களிலும் இன்று பனிக் கட்டிகள் விழுந்தன. இதனால் ஜனங்களுக்கு அதிக கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது

இந்தியா சட்ட சபையில் இன்று ரெயில்வே வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப்பெற்றது. இந்தத் திட்டத்தின் படி சாமான் கட்டணங்கள் மீது ரூபாய்க்கு இரண்டணா விகிதமும், பிரயாணிகள் கட்டணங்கள் மீது ரூபாய்க்கு ஒரு அணா விகிதமும் கூட்டப்பட்டிருக்கின்றது.

17 அல்ட் மார்க் என்ற ஜெர்மன் கப்பலை, நார்வே நாட்டிற் கருகாமையில் பிரிட்டிஷ் கப்பற் படையினர் கைப்பற்றி அதிலிருந்த பிரிட்டிஷ் மாலுமிகளை விடுதலை செய்தனர்.

மகாத்மா காந்தி தமது பரிவாரங்களுடன் இன்று சாந்திநிகேதனத்திற்கு விஜயஞ் செய்தார், இங்கு மூன்று நாள் தங்கி யிருப்பார்.

ருஷ்யா பின்லாந்து போராட்டத்தில் ஜெர்மனி தலை யிட்டு சமரஸம் செய்து வைக்குமென்று ஒரு வதந்தி உண்டா யிருக்கிறது.

18 'அல்ட் மார்க்' என்ற ஜெர்மன் கப்பலில் இருந்த பிரிட்டிஷ் மாலுமிகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வசம் ஒப்புவியாமலிருந்ததற்குத் தக்க காரணம் காட்டும்படி, பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி, நார்வே அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

பின்லாந்துக்கு உதவி செய்ய ஸ்வீடன் அரசாங்கம் மறுத்து விட்டது.

20 யுத்த நடவடிக்கைகளைப் பற்றி, பார்லி மெண்டில் நெவில்லி சேம்பர்லேன் ஒரு பிரசங்கம் செய்தார்.

18-19-ந் தேதியோடு முடிவாகிற ஒரு வாரத்தில் ஐந்து பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டிருக்கின்றனவென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

2800 வருஷத்துப் புராதனமாயுள்ள ஒரு கல்லறை எகிப்தில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

பின்லாந்தில் பெட்ஸாமோ தீபகற்பத்திற் கருகாமையில் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் கள் காணப் பட்டன.

ஈராக் மந்திரிச் சபை ராஜிநாமா செய்து விட்டது.

21 பின்லாந்தில் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றாகிய ஈாய் விஸ்தோ என்ற நகரம் ருஷ்யத் துருப்புகளால் கைப்பற்றப் பட்டது,

ஹெலி கோலாண்ட் பிரதேசத்தில் பிரிட் டிஷ் ஆகாயப் படைகள் வட்டமிட்டு வந்தன வென்று ஓர் அறிக்கை கூறுகி றது.

மேற்குப் போலந்தில் வசிக்கும் எல்லா போலிஷ்காரர்களுடைய நிலங்களையும் ஜெர்மானிய அரசாங்கம் பறி முதல் செய்து விட்டதாக ஓர் அறிக்கை கூறு கிறது,

பின்லாந்துக்குஉதவியாக அநேக யுத்த தளவாடங்கள இங்கிலாந்திலிருந்து செல் கின்றன.

22 துருக்கியில் மறுபடியும் ஒரு பூகம்பம் உண்டாயிற்று, 120 பேர் மரணம்; 22 பேருக்கு காயம். பதினாயிரம் கால் நடை கள் இறந்து போயின.

23 வட சமுத்திரத்தில் பெரிய கடற்படை யுத்தம் நடப்பதாக ஓர் அறிக்கை கூறு கிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்கள் யுத்த நோக்கங்களைத் தெரிவித்து, பர்மாவுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டு மென்ற கருத்தடங்கிய ஒரு தீர் மானம், பர்மா சட்ட சபையில் ஊ பாதி னால் கொண்டு வரப் பட்டு, பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

42 நாஜி கட்சியின் இருபதாவது வருஷக் கொண்டாட்டம் இன்று ஜெர்மனி யெங் கும் கொண்டாடப்பட்டது. அப் பொழுது பெர்லினில் கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில் ஹிட்லர் பேசிய போது, ஜெர்மனி, இத்தலியுடனும் ருஷ்யாவுடனும் நெருங்கிய சிநேகம் கொண்டிருக்கிறதென்று கூறினன்,

25 ஸ்பெயினில் குடியரசு அரசாங்கம் நிலவி யிருந்த போது அந்நிய நாட்டு மந்திரி யாக இருந்த செனூர் டெல்வாயோ என் என்பவர், பிரான்சில் ரகசியமாகப் பிர வேசித்ததற்காக, பிரெஞ்சு நீதி ஸ்தல மொன்றினால் மூன்று மாதச் சிறைவாசத் தண்டனை விதிக்கப் பெற்றிருக்கிறார்.

சீனா. ஜப்பானுடன் சமரஸமாகப் போகச் சித்தமாயிருப்பதாகச் சொல்லப்படு கிறது.

26 பின்லாந்திலுள்ள வீபுரி என்ற கிராம் சோவியத் ஆகாய விமானங்களால் அடி யோடு நாசமாக்கப் பட்டது.

27 இங்கிலாந்தின் துறை முகத்தை நாடி வந்த இரண்டு ஜெர்மன் ஆகாய விமானங் கள் இன்று பிரிட்டிஷ் ஆகாயப் படை யினரால் சுட்டுக்கொல்லப்பட்டன,

28 போலந்தில் ஜெர்மனியால் கைப்பற்றப் பட்ட எல்லா யுத்த தளவாடங்களையும் ஜெர்மனியானது, ஸ்வீடனுக்கு விற்று விடுமென்று சொல்லப்படுகிறது,

வெளி நாட்டுத் துறை முகங்களில் இருக் கும் எல்லாத் துருக்கியக் கப்பல்களும் தங்கள் தாய் நாட்டுக்குத் திரும்ப வந்து விட வேண்டு மென்று துருக்கிய அரசா ங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கி ன்றனர்.

இந்திய சமஷ்டி அரசியல்

—கே. வி. ராமசுப்பிரமணியன்
B. A. B. L.

இந்திய அரசியலைப் பற்றி நாம் ஆராய்ந்து சில மாதங்கள் ஆகின்றன. இதன் மத்தியில் ராஜீய உலகத்தில் அநேகம் மாறுதல்கள் நடைபெற்றிருக்கின்றன. மறுபடியும் மகா யுத்தம் ஐரோப்பாவில் ஆரம்பமாகி யிருக்கிறது. ஏகாதிபத்தியத்தை அறவே ஒழிப்பதற்காகவும், ஜனநாயகக் கொள்கைகளையும் சுதந்திரங்களையும் ஸ்தாபிப்பதற்காகவுமே, தான் போரில் இறங்கி யிருக்கிறதாக இங்கிலாந்து சொல்லிக்கொண்டது. மேற்படி கொள்கைகளும் நோக்கமும் ஐரோப்பாவுக்கு மட்டுந் தானா, அல்லது அவைகளை இந்தியாவிலும் அமுலுக்குக் கொண்டு வரப் போகிறீர்களா என்று இந்திய தேசிய காங்கிரஸ் பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டது. இதற்குச் சரியான பதில் கிடைக்க வில்லை யென்ற காரணத்தால் ஏழு மாகாணங்களில் நிர்வாகம் வகித்து வந்த காங்கிரஸ் மந்திரிகள் ராஜினாமாச் செய்தார்கள். இவைகளில் ஆறு மாகாணங்களின் சட்ட சபைகளில் காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிட்டி இருப்பதால் மாற்று மந்திரிச்சபைகள் அமைக்கமுடிய வில்லை. ஆகையால் இந்த மாகாணங்களில் கவர்னர் அவர்களே நிர்வாகம் வகித்து வருகிறார். இந்த நிலைமை பிரிட்டிஷ் சர்க்காருக்கே அதிருப்தியை அளித்து வருகிறது. புதிய இந்திய அரசில் திட்டத்தில் சமஷ்டி அரசியல் சம்பந்தமாகவும், மத்திய ஸ்தாபனத்தின் நிர்வாக சம்பந்தமாகவும் ஏற்படுத்தப் பட்டிருக்கும் அம்சங்களை இந்தியாவில் எந்தக் கட்சியும ஒப்புக்கொள்ளவில்லை. மாகாண ஆட்சி சம்பந்தப் பட்டமட்டிலாவதுபுதிய அரசியல்திட்டம் அமுலுக்கு வந்ததைப் பற்றி எவ்வளவோ சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த சமயம், இந்த நிலைமை ஏற்பட்டதைப் பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் மிகவும் வருந்துகின்றனர். எப்படியாவது மாகாணங்களில் பொறுப்பு வாய்ந்த மந்திரிகளின் நிர்வாகத்தை மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சமரசப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. குடியேற்ற நாடுகளின் அந்தஸ்தை இந்தியாவும் அடைய வேண்டும் என்பது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் நோக்கம் என்றும், ஆனால் அந்த அந்தஸ்து கிடைக்கு முன் இந்தியாவில் பல சமூகங்களுக்குள், ஒற்றுமையும் சமரசமும் ஏற்பட வேண்டியது அவசியம் என்றும், இந்து சமூகங்களுக்குள், அதிலும் இந்து முஸ்லிம்களுக்குள் ஒரு சமரச ஏற்பாடு செய்து

கொண்ட பின்புதான் சமஷ்டி அரசியல் திட்டத்தைத் திருத்தியமைக்க முடியும் என்றும் பிரிட்டிஷ் சர்க்காரும் வைசிராய் பிரபுவும் சொன்னார்கள். இதை ஆஸ்பதமாக வைத்துக்கொண்டு, முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்கள் காங்கிரஸுடன் ஒரு நியாயமான உடன்படிக்கைக்கு ஒத்துக்கொள்ளவில்லை. முஸ்லிம்களின் நியாயமான அக்கரைகளைப் பாதுகாப்பதே மெஜாரிட்டிக் கட்சியாரின் நோக்கம் என்றும், தாங்கள் செய்யும் ஏற்பாடுகள் நியாயந்தானா என்பதைப் பரிசீலனை செய்ய இந்தியாவின் பிரதம நீதிபதியையோ, அல்லது வேறு கோர்ட்டாரையோ நியமிப்பதில் தங்களுக்கு ஆக்ஷேபனையில்லையென்றும் காங்கிரஸ் எவ்வளவோ சொல்லியும் ஜனாப் ஜின்னா இதை ஒப்புக்கொள்ளவில்லை. இத்துடன் நரகாசுரன் கொல்லப்பட்ட தினமாகிய தீபாவளியன்று இந்துக்கள் சந்தோஷம் கொண்டாடுவது போல ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் மர்திரி சபை ராஜிநாமாச் செய்த தினத்தை ஒரு விசேஷ நாளாகக் கொண்டாட வேண்டும் என்று முஸ்லிம் லீக் மெம்பர்களுக்கு அவர் உத்திர விட்டார். இதிலிருந்து காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் இடையே இருந்த பிளவு விரிவாயிற்று. ஆனால் ஒரு தேசத்தின் முன்னேற்றத்தை அந்த தேசத்தின் ஒரு சிறுபான்மை கட்சியினர் எவ்வளவு காலந்தான் தடுக்க முடியும்? ஜனநாயகக் கொள்கையின் முக்கிய அம்சம் மெஜாரிட்டிக் கக்ஷியின் ஆட்சி. இந்தக் கொள்கையை நிலை நிறுத்துவதற்காகவே போர் புரிவதாகச் சொல்லும் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தக் கொள்கைக்குச் மாறாக சிறுபான்மைக் கக்ஷியாருடன் எவ்வளவு நாள்தான் உறவாட முடியும்? ஆகையால் இந்தியாவின் தற்கால ராஜீய நிலைமையை மாற்றி காங்கிரஸ் மந்திரிகள் மறுபடியும் மாகாணங்களின் நிர்வாகத்தை ஒப்புக்கொள்ள வேண்டிய உத்தேசத்துடன் சமீபத்தில் வைசிராய் பிரபு அவர்கள் மகாத்மா காந்திஜியை அழைத்து அவருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இந்தியாவின் அரசியலை நிர்ணயிப்பதை இந்தியர்களிடமே விட்டுவிட வேண்டுமென்றும் இந்த நிர்ணய சபை (Constituent Assembly) செய்யும் தீர்மானங்களை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் காங்கிரஸ் தலைவர்கள் கூறி வருகிறார்கள்.

எவ்விதத்திலும் தற்கால அரசியல் நிலைமை கூடிய சீக்கிரம் மாறுதலடையும். இந்திய அரசியல் திட்டத்தில் சமஷ்டி அரசியல் சம்பந்தமாகச் சில மாறுதல்கள் ஏற்படுவது நிச்சயம். இந்த நிலைமையில் தற்கால சமஷ்டி அரசியலைப்பற்றி நாம் ஆராய்வதில் என்ன பிரயோஜனம் என்று வாசகர்கள் நம்மைக் கேட்கலாம். இந்தக் கேள்விக்குப் பதில் என்னவென்றால் நாம் இனி ஆராயப்புகும் விஷயத்தில் அதிக மாறுதல்கள் ஏற்பட இடமில்லை. முக்கிய மாறுதல்கள் சமஷ்டி அரசியலின் நிர்வாகத்தைப் பொறுத்தும், சமஷ்டி சட்ட சபைகளைப் பொறுத்துமே ஏற்படக்கூடியவை. இந்த இரண்டு விஷயங்களை நாம் ஏற்கனவே ஆராய்ந்துவிட்டோம். இனி ஆராய வேண்டிய விஷயங்கள் சமஷ்டி ஹைகோர்ட், சமஷ்டி சர்க்காருக்கும் மாகாணங்க

ளுக்கும் உள்ள சம்பந்தங்கள், சமஷ்டி சர்க்கார், மாகாண சர்க்கார் இவைகளுக்குள் வரி, வரும்படி சம்பந்தமான ஏற்பாடுகள் முதலியன. இந்திய சமஷ்டி அரசியலையே வேருடன் தகர்த்து விட வேண்டும் என்று எவ்வளவு தான், ஜனப் ஜின்னா சாகிப் அவர்களும் மற்றவர்களும் சொன்னாலும் அது நடக்க முடியாதகாரியம். இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு விஸ்தீர்ணம் இந்திய சமஸ்தானங்களாக யிருக்கும் வரை சமஷ்டி அரசியல் முறையைத் தவிர வேறு யாதொரு முறையும் கையாள முடியும் என்று தோன்றவில்லை. ஆகையால் தற்கால இந்திய அரசியல் சட்டத்தின் மற்ற விஷயங்களையும் நாம் ஆராய்வோம்.

வரி வசூலும் வருமானமும் :

சமஷ்டி அரசியலில் மாகாணங்கள் பொறுப்பாட்சி யுள்ள தனி வியக்திகளாக ஆகி விட்டபடியால், மாகாணங்களின் நிர்வாகத்தை நடத்தப் போதுமான வரும்படி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம். அரசியலின் நிர்வாகத்துக்கு வேண்டிய தொகைகள் குடிகளிட மிருந்து வரி மூலம் வசூலிக்கப் படுகின்றன. ஆகையினால் மாகாண சர்க்காருக்கு இன்ன வரிகள் வசூலிக்க பாத்திய முண்டு; மத்திய சர்க்காருக்கு இன்னவரிகள் வசூலிக்க பாத்திய முண்டு என்று விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. பொதுவாக, எந்தெந்த விஷயங்கள் சம்பந்தமாக சட்டங்கள் ஏற்படுத்த தனித்த அதிகாரம் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டி ருக்கின்றனவோ அந்த விஷயங்கள் சம்பந்தமாக வரி வசூலிக்கும் பாத்தியதையும் மத்திய சர்க்காருக்குச் சேர்ந்தது. மற்ற எல்லா விஷயங்கள் சம்பந்தமாக வரி வசூலிக்கும் பாத்தியம் மாகாணங்களைச் சேர்ந்தது.

இவ்விதம் வரி வசூல் செய்யும் பாத்தியம் பிரிக்கப்பட்டிருப்பதில், மத்திய சர்க்கார் வசூலிக்கும் வரிகளிலிருந்து அதிகத் தொகைகள் வரக்கூடியதாயும் அவைகள் விருத்தியாகக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. மாகாணங்கள் வசூலிக்கும் வரிகளிலிருந்து வரும் தொகைகள் விருத்தியாகக் கூடாதவைகளாக இருக்கின்றன. உதாரணமாக மாகாணங்களில் முக்கியமான வரி நிலவரி. இந்த நிலவரி எவ்வளவு அதிகமான விகிதத்தில் வசூல் செய்ய முடியுமோ, அவ்வளவு அதிகம் தற்காலம் வசூலிக்கப்பட்டு வருகின்றது. இனிமேல் அவைகளைக் குறைக்க வேண்டுமே யொழிய அதிகப்படுத்த முடியாது. ஆனால் மத்திய சர்க்கார் வசூலிக்கும் வருமான வரி, ஏற்றுமதி, இறக்குமதி வரி இவைகளை எடுத்துக் கொள்வோம். தேசத்தின் வியாபாரம் விருத்தியாக விருத்தியாக, இந்த வரிகள் மூலம் வசூலாகும் தொகைகள் விருத்தியாகின்றன. மத்திய சர்க்காருக்கும் மாகாணங்களுக்கும் வரி வசூல் சம்பந்தமாக இந்தத் தாரதம்மியம் இருப்பதுடன் செலவு சம்பந்தமாகவும் தாரதம்மியம் இருக்கின்றது. மத்திய சர்க்கார் ஒவ்வொரு வருஷமும் செலவு செய்ய வேண்டிய தொகையில் அதிக வித்தியாசம் இருக்கக் கூடியதில்லை. மத்திய சர்க்காரின் முக்கியச் செலவு ராணுவ சம்பந்தமானதும், உத்தியோகஸ்தர்களின் சம்பளம் முதலியவைகளுமே. யுத்தம்

முதலிய எதிர்பாராத சம்பவங்கள் வந்தாலொழிய இந்தச் செலவுகள் அதிகமாகாது. ஆனால் மாகாணங்கள் செலவு செய்ய வேண்டிய தொகை இவ்வளவுதான் என்று நிர்ணயிக்க முடியாது. எவ்வளவு தொகை வரும்படி வருகிறதோ அவ்வளவையும் தேச நன்மைக்காகச் செலவழிக்க முடியும். உதாரணமாக ஜனங்களிடை கல்வி பரப்புவதிலும் ஜனங்களின் சுகாதாரத்தை உத்தேசித்து ஆஸ்பத்திரிகள் முதலிய வசதிகள் ஏற்படுத்துவதிலும் செலவழிக்கக் கூடிய தொகையை நிர்ணயிக்க முடியுமா? மேலும் ஜனங்களிடை அபிவிருத்தி அதிகரிக்க அதிகரிக்க, மாகாணங்கள் செலவு செய்ய வேண்டிய தொகையும் அதிகரிக்கிறது. இந்த நிலைமையில் மத்திய சர்க்கார் வசூலிக்கும் வரிகளில் ஒரு பாகத்தை மாகாணங்கள் அடைய வேண்டும் என்று இந்திய அரசியல் திட்டத்தில் விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இது தவிர சில மாகாணங்களில் வசூலாகும் வரி அந்த மாகாணச் செலவுக்குப் போதாமலுமிருக்கிறது. இந்த மாகாணங்களுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து சாஸ்வதமாகவே வருஷா வருஷம் இவ்வளவு தொகைகள் செலுத்த வேண்டும் என்றும் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதிகள் ஏற்படுத்து முன் இங்கிலாந்திலிருந்து ஒரு நிபுணரை நியமித்து, இந்த விஷயமாக அவரைப் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்து இவருடைய தீர்மானத்தை ஒப்புக்கொண்டு மன்னர் அவர்கள் ஆர்டர்-இன் கவுன்ஸில் (Order-in-Council) என்ற உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார். அதில் கண்ட விஷயங்களாவன.

(1) இந்தியாவில் வசூலாகும் வருமான வரியில் பாதித்தொகையை மட்டும் மத்திய சர்க்கார் வைத்துக் கொண்டு, மீதப் பாதியை மாகாணங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். இந்தப் பாதியில் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் அடியிற் கண்டபடி பிரிக்க வேண்டும்.

சென்னை	100-க்கு	15
பம்பாய்	,,	20
வங்காளம்	,,	20
ஐக்கிய மாகாணம்	,,	15
பஞ்சாப்	,,	8
பீகார்	,,	10
மத்திய மாகாணம் (பீரார்)		5
அஸ்ஸாம்	,,	2
வட மேற்கு எல்லைப்புற மாகாணம்		1
ஒரிஸா	,	2
சிந்து	,,	2

இந்தத் தொகைகளை சமஷ்டி அரசியல் ஏற்படுத்தி 5 வருஷம் வரை, மாகாணங்களுக்குப் பூராவும் கொடுக்காமல், ஒரு குறிப்பிட்ட தொகையை சமஷ்டி சர்க்கார் நிறுத்தி வைத்துக் கொள்ளலாம். இந்த ஐந்து வருஷ சங்கை கழிந்த பின் அதன் பிறகு மற்றொரு ஐந்து வருஷ சங்கைக்குள் மாகாணங்களுக்குச் செல்ல வேண்டிய தொகைகளை முதல் வருஷம் $\frac{1}{5}$ பங்கும் இரண்டாவது வருஷம் $\frac{2}{5}$ பங்கும் மூன்றாவது வருஷம் $\frac{3}{5}$ பங்கும் 4 வது

வருஷம் $\frac{4}{5}$ பங்கும் கடைசி வருஷம் பூராத் தொகையையும் கொடுத்து விட வேண்டும்.

சணல் வரி

இந்தியாவில் சணல் உற்பத்தி யாகும் மாகாணங்கள் முக்கியமாக வங்காளம், அஸ்ஸாம், பீகார், மற்றும் பிரிட்டிஷ் பலுசிஸ்டான். சணல் ஏற்றுமதி யிலிருந்து வசூலாகும் வரியில் 100க்கு $62\frac{1}{2}$ பங்குத்தொகை இந்த மாகாணங்களுக்குள் பிரித்துக் கொடுக்கப்படும்.

மாகாணங்களுக்கு மத்திய சர்க்காரிலிருந்து நன்கொடை

1. ஐக்கிய மாகாணம்

   சமஷ்டி அரசியல் அமுலுக்கு வந்து ஐந்து வருஷம் வரை, வருஷம் ஒன்றுக்கு 25 லக்ஷம் ரூபாய்.

2. அஸ்ஸாம்

   வருஷம் ஒன்றுக்கு 30 லக்ஷம் ரூபாய், சாஸ்வதமாக.

3. வடமேற்கு எல்லைப்புற மாகாணம்

   வருஷம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய், சாஸ்வதமாக.

4. ஒரிஸா

   சமஷ்டி அரசியல் ஆரம்பித்தவுடன் முதல் வருஷம் 47 லக்ஷ ரூபாய்; அதற்குப் பிறகு 4 வருஷம், வருஷம் ஒன்றுக்கு 43 லக்ஷரூபாய். அதற்குப் பிறகு வருஷா வருஷம் 40 லக்ஷ ரூபாய் சாசுவதமாக.

5. சிந்து

சமஷ்டி	அரசியல்	ஆரம்பித்தவுடன்	முதல்	வருஷம்	110	லக்ஷ	ரூ.
அதன்	பிறகு	ஒன்பது	வருஷம்	வருஷம் ஒன்றுக்கு	105	லக்ஷ	ரூ.
அதன்	பிறகு	இருபது	வருஷம்	வருஷம் ஒன்றுக்கு	80	லக்ஷ	ரூ.
அதன்	பிறகு	ஐந்து	வருஷம்	வருஷம் ஒன்றுக்கு	6	லக்ஷ	ரூ.
அதன்	பிறகு	ஐந்து	வருஷம்	வருஷம் ஒன்றுக்கு	60	லக்ஷ	ரூ.
அதன்	பிறகு	ஐந்து	வருஷம்	வருஷம் ஒன்றுக்கு	55	லக்ஷ	ரூ.

மற்ற விஷயங்கள் அடுத்த இதழில் கவனிப்போம்.

பாபு ராஜேந்திர பிரசாத் 53 வது தேசிய காங்கிரஸின் வரவேற்புக் கூட்டத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர் 1884-ம் வருஷம் டிசம்பர் மாதம் பிறந்தவர். சிறந்த அறிஞர். பள்ளிக்கூட ஆரம்ப வகுப்பிலிருந்து எம். ஏ. வகுப்பு வரையில் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறி வந்திருக்கிறார். 1911-ம் வருஷம் வக்கீல் தொழிலைத் தொடங்கி, ஏ ரா ள மா கப் பொருள் சம்பாதித்தார். ஆனால் தேச சேவையொன்றிலேயே இவர் மனம் ஈடுபட்டிருந்தது. பீஹார் மாகாணத்தில் வெள்ளச் சேதம் ஏற்பட்ட காலத்திலும் பூகம்பம் உண்டான காலத்திலும் இவர் ஆற்றிய தொண்டுகள் என்றும் போற்றற்பாலன.

டால்ஸ்டாயும் ஆரம்பக் கல்வியும்

ஜி. கே. சு. சாஸ்திரி
B.A.B.T.

கௌண்ட் லியோ டால்ஸ்டாய் என்பவர் ரஷ்யாவில் அவதரித்த ஒரு பெரியார். வறுமை, துன்பம், அறியாமை முதலியன மிகுந்து வருந்திய ரஷ்ய தேசத்தை வாழ்விக்க-வந்தவர்களில் முதல் ஸ்தானம் பெற்றவராவார். மகாத்மாஜீயால் தமது குருவென வணங்கப்படும் பெரியார்களில் டால்ஸ்டாயும் ஒருவராவர். அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி முதலிய பல துறைகளிலும் குறை யுணர்ந்து திருத்தும் முறை போதித்த அப் பேரறிஞர் குழந்தைகளின் ஆரம்பக் கல்வி முறையைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார் :

மனித வாழ்க்கையில் மத உணர்ச்சி இன்றியமையாதது. இதைப்பெருக்க மதபோதனை வேண்டும். மதபோதனை யாவது என்ன ? சர்வ வியாபியான ஆண்டவனை சர்வ ஜீவராசிகளிடத்தும் கண்டு வணங்கி வழிபடுதலேயாம். இதுவே தெய்வ பக்தியின் உண்மைப் பொருளுமாகும்.

இத்தகைய உணர்ச்சியை பச்சிளங் குழந்தைகளுக்குப் போதிக்க கீழ்க் காணும் முறை சுலபமானது என அவர் கூறுகிறார் :-

" குழந்தைகள் கூடியுள்ள இடங்களில் அவைகளை அன்புடன் அழைத்து இன்முகம் காட்டி 'குழந்தைகளே ! நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்களிடம் நாம் எவ்வாறு நடந்து பழக வேண்டுமென்பதை நாம் ஓரளவு அறிந்தே இருக்கிறோம். யாருக்கும் எத்தகைய தீங்கும் செய்யலாகாது. மற்றவரை நிந்திப்பதோ கண்டிப்பதோ கூடாது. எல்லோரிடத்திலும் அன்பு காட்டி அவர்கள் ஆனந்தமாக வாழ வேண்டுமென்பதே நமது கோரிக்கையும் முயற்சியுமாக இருத்தலவசியம். இவ்வாறு நடப்பதால் நாமும் நன்மையடைவோம். மற்றவர்களும் சந்தோஷமுறுவார்கள்.

ஆனால் சில சமயங்களில் இந் நல் வழிக்கு மாறாக நடக்கிறோம். மற்றவருக்குத் தீங்கு செய்யவும் அவர்களை நிந்தித்துக் கண்டித்து வெறுக்கவும் முயலுகிறோம். அவ்வாறு செய்வது நமக்கும் முறையல்ல ; மற்றவர்க்கும் நல்லதல்ல. ஏன் ?

கடவுள் சர்வ வியாபக மாயிருக்கிறார். அவர் நம்மிடத்திலுமிருக்கிறார். மற்ற ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிறார். மற்றவருக்குத் தீங்கு செய்யாமை, கண்டித்து நிந்தியாதிருத்தல்,

அன்பு செலுத்துதல் முதலிய நல்ல குணங்கள் நம்மிடமிருந்தால் அதைக் கண்டு நம்மவர்களிடமும் மற்றவர்களிடமும் இருக்கும் கடவுள் சந்தோஷமடைந்து நமக்கு நன்மையும் இன்பமும் சுகமும் அளிப்பார். நம்மிடம் கடவுள் இருப்பது போலவே மற்றவரிடமும் இருக்கின்றார். ஆதலால் நாம் காணும் எந்த மனிதனும் நம்மை விட எந்த வகையிலும் தாழ்ந்தவனல்ல; நாம் அவனுக்குச் செய்யும் தீங்கோ அல்லது அவன் பால் காட்டும் அன்போ அவனிடமிருக்கும் கடவுளுக்குச் செய்யும் தீங்கு அல்லது அன்பேயாகும். மற்றவர்கள் நமக்குத் தீங்கு செய்வதை நாம் விரும்புவதில்லை. நம் மீது அவர்கள் அன்பு செலுத்துவதையே விரும்புகிறோம். அவ்வாறு தானே மற்றவர்களும் தம்மைப்பற்றி ஆசை கொள்வார்கள். மற்றவர்கள் நம்மிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென நாம் விரும்புகிறோமோ அதே போல் நாமும் மற்றவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும்."

அவ்வாறு போதனை செய்தல் வேண்டும். இத்தகைய போதனை பச்சிளங் குழந்தைகளுக்கு அளிக்கப்படுமாயின் அவர்களுக்கு மத பக்தி, தெய்வ பக்தி, சமூக ஒற்றுமையுணர்ச்சி முதலியன பெருகும். இளமைப் போதனையால் ஏற்படும் இவ்வுணர்ச்சி கல் மேலெழுத்துப் போல் நின்று நாளடைவில் சிறந்த பிரஜையாக விளங்க ஹேதுவாகும். இளங் குழந்தைகளே! நல்லுணர்ச்சியும் நற் பழக்கமும் நல்லொழுக்கமும் பின்னர் போதித்துக் கொள்ளலாமென்று காலத்தைத் தள்ளி விடுவது பெற்றோர் என்ற முறையில் குழந்தைகளுக்குச் செய்யும் துரோகம். மக்களின் நற்குணத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் மூல காரணமான மதக் கல்வி, தெய்வ பக்தி முதலியவற்றை இள வயதிலேயே போதிப்பது அத்யாவசியமாகும். மக்களின் க்ஷேமத்திலும், அவர்கள் மூலம் சமூக தேசீய அபிவிருத்தியிலும் நாட்டமுள்ள ஒவ்வொருவரும் மேற்கண்ட முறையில் குழந்தைகளின் ஆரம்பக் கல்வியில் பிரத்தியேக கவனம் செலுத்துதல் வேண்டுமென்பதை ஈண்டு எடுத்துரைத்து வற்புறுத்துதலும் பொருத்த முடைத்தேயாம்.

முக்கிய அறிவிப்பு

நமது கம்பெனியின் பிரதிநிதியாயிருந்து, சந்தா, விளம்பரம் முதலியன சேர்த்தல், ஏஜென்சிகளை நியமித்தல் முதலிய வேலைகளைச் செய்ய ஸ்ரீ கே. சாம்பமூர்த்தி ஐயருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம், ரத்து செய்யப்பட்டிருக்கிறதென்பதை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.

அனுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் எழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் எழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. Lt col. கிரஹாம் சேடன் ஹட்சிசன் D. S O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், **19-12-38**-ல் தெரிவிப்பதாவது:

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அனுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராடீக் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்டால்

பிரதி இங்கிலீஷ் மாதம்

முதல் வாரம் வெளியிடப் பெறும்.

"ஜோதி"

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள்

முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,

நெ. 47, 31-வது வீதி,

இரங்கூன்.

சந்தா நேயர்களுக்கு

பிரதி இங்கிலீஷ் மாதம் பதினைந்தாந் தேதிக்குள் பத்திரிகை தங்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் உடனே காரியாலயத்திற்குத் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அப்பொழுதுதான் கவனித்து, தக்கன செய்வதற்குச் சௌகரியமாயிருக்கும்.

மானேஜர்.